Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 23 சனிக்கிழமை (07.07.2012) பக்கங்கள் 20 ஓசை – 280
















## கொக்கிளாய் கடலில் அத்துமீறியுள்ள

# தென்பகுதி மீனவர்கள் வெளியேற வேண்டும்



(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்ட கொக்கிளாய் கடற்பரப்பில் அத்துமீறி கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் தென்னிலங்கை மீனவர்களை அங்கிருந்து உடன் வெளியேறுமாறு கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அலுவலகத்தில் முல்லை மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கான படகுகள், வலைகள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டபோதே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

அங்கு அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், 1983 ஆம் ஆண்டிற்கு முன்னர் தமது அமைச்சின் அனுமதிபெற்று கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் மீனவர்கள் தவிர்ந்த ஏனைய தென்னிலங்கை மீனவர்களை உடன் அவர் அங்கிருந்து வெளியேறுமாறு உத்தரவிட்டிருக்கின்றார்.

குறித்த நிகழ்விற்கு வருகை தந்திருந்த அமைச்சரிடம் கொக்கிளாய் கடற்பரப்பில் தென்னிலங்கை மீனவர்களது அத்துமீறிய தொழில் நடவடிக்கை காரணமாகத் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அத்தகைய தொழில் நடவடிக்கையை அனுமதிக்க வேண்டாம் என்றும் மீனவர்கள் கேட்டுக்கொண்டதனை

(19) ஆம் பக்கம் பார்க்க

## இரணைமடுக்குள நன்னீர் மீன்பிடி 50 குடும்பங்களுக்கு அனுமதி மறுப்பு

(கிளிநொச்சி)

இரணைமடுக் குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டு வந்த கிளிநொச்சி இராமநாதபுரம், அழகாபுரி கிராமத்தைச் சேர்ந்த ஐம்பது குடும்பங்களுக்கு தொழிலில் ஈடுபடுவதற்கு விமானப்படையினர் அனுமதி மறுத்து வருவதாக அழகாபுரி நன்னீர் மீன்படி சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். இரணைமடுக் குளத்தில் நன்னீர் மீன்பிடித் தொழிலை மேற்கொண்ட இவர்கள் மீள்குடியேற்றத்தின் பின்னர் இன்று வரை தொழிலை மேற்கொள்வதற்கு இரணைமடு விமானப்படையினர் அனுமதிக்கவில்லை. இது தொடர்பில் தாங்கள் பல்வேறு தரப்பினர்களும் தெரியப்படுத்தியும் இதுவரைக்கும் எவ்வித பயனும் இல்லை என குறிப்பிடும் இவர்கள் தங்களது வாழ்வாதாரமே நன்னீர் மீன்பிடி எனவும் தொழில்புரிவதற்கு

(19) ஆம் பக்கம் பார்க்க

## உயிரிழந்த நிமலரூபனின் உடலில் அடிகாயங்கள் காணப்பட்டன

### தாயார் தெரிவிப்பு



வவுனியா சிறைச்சாலையில் இருந்து கொண்டு செல்லப்பட்ட தனது மகனை றாகம வைத்தியசாலையில் சடலமாகவே கண்டதாக உயிரிழந்துள்ள கணேசன் நிமலரூபன் என்ற தமிழ் அரசியல் கைதியின் தாயாராகிய கணேசன் இராஜேஸ்வரி (வயது - 63) பி.பி.சியிடம் தெரிவித்துள்ளார். மகன் சுகமில்லாமல் ஆபத்தான நிலையில் இருக்கின்றார் எனக் கூறி அவரைப் பார்ப்பதற்காக இராஜேஸ்வரியையும் அவரது கணவனையும் பொலிஸார் கடந்த புதன்கிழமை றாகம வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளனர். ஆயினும் மிகுந்த தாமதத்தின் பின்னர் மறுநாள் வியாழக்கிழமையே நிமலரூபனின் சடலம் அவருடைய பெற்றோருக்குக் காட்டப்பட்டுள்ளது. சடலமாக கிடந்த என் பிள்ளைக்கு கையும் காலும் முறிந்திருந்தது. கையிலும், நெஞ்சிலும் தலையிலும் அடிகாயங்கள் இருந்தன என அவர் தெரிவித்தார். பிரேதத்தை காட்டியவுடன் கையெழுத்து போடும்படி சிறை அதிகாரிகள் எங்களை

(19) ஆம் பக்கம் பார்க்க

## வேலை நிறுத்தத்திற்குத் தடை மேன்முறையீடு செய்ய முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் மற்றும் புற்றுநோய் வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமாரின் வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் தமக்கு திருப்தியில்லை எனத் தெரிவித்து யாழ். வைத்தியர் சங்கம் நேற்று நடத்த இருந்த அடையாள வேலை நிறுத்தத்திற்கு யாழ். நீதவான் நீதிமன்றம் தடைவிதித்ததை எதிர்த்து மேன்முறையீடு செய்யப்பட்டவுள்ளது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை விமானப்படையினர் பெங்களூருக்கு மாற்றம்

(புதுடில்லி)

இலங்கை விமானப்படையினர் ஒன்பது பேர், சென்னை அருகே உள்ள தாம்பரம் விமானப்படைத் தளத்தில் பயிற்சி பெற்றிருந்த நிலையில் தமது இரண்டாவது கட்டப் பயிற்சிக்காக பெங்களூருக்கு மாற்றப்பட்டுள்ளனர். தமிழக முதல்வர் ஜெயலலிதா, மற்றும் தி.மு.க. தலைவர் கருணாநிதி உள்ளிட்ட பல்வேறு கட்சி தலைவர்கள் இவர்களின் பயிற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்திருந்த நிலையில் இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சகம், இலங்கை விமானப் படையினர் சென்னையிலிருந்து திரும்பப் பெறப்படுவதாக அறிவித்திருக்கிறது. நேற்று பாதுகாப்பு அமைச்சகத்தின் சார்பில் மத்திய செய்தித் தொடர்பு அலுவலகம் விடுத்த ஒருவரி அறிக்கையில், இந்தப் பயிற்சி பெறும் படையினர் அனைவரும், பாதுகாப்பு அமைச்சக உத்தரவின் பேரில், இந்தத் தளத்திலிருந்து அனுப்பப்படுவதாக தெரிவித்திருக்கிறது. இதேவேளை இந்தியாவில் பயிற்சிபெறும் இலங்கை விமானப்படை

(19) ஆம் பக்கம் பார்க்க

## ‘உதயன்’ ஆசிரியர் வழக்கை விசாரிக்க யாழ். நீதவானுக்கு இடைக்காலத் தடை

உதயன் பத்திரிகை ஆசிரியர் மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கை விசாரிக்கவும் அது தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்கவும் யாழ். நீதவானுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப பித்துள்ளது.


உதயன் பத்திரிகை ஆசிரியர் பிரேம்நாத் தாக்கல் செய்திருந்த மனுவொன்றை நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஸ்ரீஸ்கந்தராசா, இவ் இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்தார்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கை விசாரிக்கும் அதிகாரம் நீதவான் நீதிமன்றுக்கு இல்லை என மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கனகஈஸ்வரன் சுட்டிக்காட்டியிருந்தார். இதனை ஏற்றுக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஸ்ரீஸ்கந்தராசா, யாழ். நீதவானுக்கு இடைக்கால தடை உத்தரவை

(19) ஆம் பக்கம் பார்க்க

தினமுரசு நாளிதழின் தொடர்பு இலங்கங்கள்

அலுவலகம் - 0212223628
தொலைநகல் - 0212221811
விளம்பரப் பணிமனை - 021222018[illegible]



**கிளிநொச்சி கிருஷ்ணர் ஆலயம் உள்ளூர் மற்றும் புலம்பெயர் தமிழ் மக்களின் நிதிப் பங்களிப்பில் புனரமைக்கப்பட்டு இன்றைய தினம் எண்ணைக்காப்பும் நாளைய தினம் கும்பாபிஷேகமும் நடைபெறவுள்ளது. கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள நீண்ட கால சிறப்புமிக்க ஆலயம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (29)**

## மக்கள் வங்கி கிளை முகாமையாளர் மோட்டார் சைக்கிள் விபத்தில் பலி

(யாழ்ப்பாணம்)

உடுவில் டச்சு வீதிப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையின் கிளை முகாமையாளர் ஒருவர் பலியானார்.

மானிப்பாய் தெற்கைச் சேர்ந்த தர்மலிங்கம் கனகலிங்கம் (வயது - 55) என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

இவரது சடலம் நேற்று முன்தினம் இரவு சங்கானை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுப் பின்னர் நேற்று பிற்பகல் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மானிப்பாய் பொலிஸாரினால் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

சுன்னாகம் மக்கள் வங்கியின்

(19) ஆம் பக்கம் பார்க்க

# யாழ். போதனா வைத்தியசாலையில் நாற்றமெடுக்கின்றது சவச்சாலை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் சவச்சாலை பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குளிரூட்டி வசதி போதாமை, சவச்சாலை சுத்திகரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படாமை, சுத்திகரிப்புக்கு வழங்கப்படும் பொருட்கள் போதாமை, லைசோல் (நெருப்புத்தண்ணி) குறைந்த அளவில் வழங்கப்படுவது என்பவற்றின் மத்தியிலேயே இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சவச்சாலையின் 6 குளிரூட்டிகளில் மூன்று செயலிழந்து போயிருக்கின்றன. 3 மட்டுமே செயற்பட்டு வருகின்றது. இவற்றின் குளிரூட்டும் திறன் சாதாரணமாகவே உள்ளது.

இதன் காரணமாக இறந்த உடல்கள் மற்றும் சத்திரசிகிச்சையின் போது நீக்கப்படும் மனித உடலின் பாகங்கள் என்பவற்றை பாதுகாத்து வைக்க முடியாத நிலை தொடர்கின்றது. இதனால் சவச்சாலைப் பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது.

அத்துடன் கிழமைக்கு ஒரு தடவை சுத்திகரிப்புப் பணியும் அங்கு நடைபெறுவதில்லை. சுத்திகரிப்பில் ஈடுபடுபவர்களுக்கு வழங்கப்படும் கையுறை என்பனவும் பற்றாக்குறையாகவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

மேலும் சுத்திகரிப்புக்கென வழங்கப்படும் லைசோல் (நெருப்புத்தண்ணி) ஒரு லீற்றர் தேவையானவிடத்து 200 மில்லிலீற்றரே வழங்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. இவ்வாறு பல்வேறு நெருக்கடிகள் மத்தியில் யாழ். போதனா வைத்தியசாலையின் சவச்சாலை இயங்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (பா)

# கைவிடப்பட்டு உரிமை கோராத வாகனங்கள் ஏலத்தில் விற்பனை



(கிளிநொச்சி)

இறுதி யுத்தத்தின்போது கைவிடப்பட்டு தற்போது கிளிநொச்சியில் அமைந்துள்ள வாகனத் தரிப்பிடத்தில் இதுவரை உரிமை கோரி பெற்றுக்கொள்ளப்படாது கைவிடப்பட்ட 5983 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 130 இற்கு மேற்பட்ட வாகனங்கள் காணப்படுகின்றன.

இவற்றிற்கு உரிமையாளர்கள் இருந்தால் அவர்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்பதாக உரிமை கோரி பெற்றுக்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் உரிய திகதிக்குள் உரிமை கோரப்படாத வாகனங்கள் அரசாங்க நடைமுறைக்கமைய ஏலத்திற்கு விடப்படவுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.



# யாழ். ஊடகவியலாளருக்கு தென்னாசிய விருது

(யாழ்ப்பாணம்)

சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் யாழ். நிருபர் ந.பரமேஸ்வரனுக்கு சிறந்த செய்தி ஆக்கத்திற்கான தெற்காசிய விருது கிடைத்துள்ளது.

ICFJ என அழைக்கப்படும் அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட சர்வதேச பத்திரிகையாளர்களுக்கான மத்திய நிலையம் கடந்த ஏப்ரல் மாதம் தெற்காசிய ஊடகவியலாளர்களுக்கு New media new challenges என்ற தலைப்பில் ஒன் லைன் ஊடான பயிற்சி நெறி ஒன்றை நடத்தியது.

இந்தப் பயிற்சிநெறிக்கு தெற்காசிய நாடுகளில் உள்ள ஊடகங்களில் ஆங்கிலம், இந்தி, உருது ஆகிய மொழிகளில் பணியாற்றும் 250 பத்திரிகையாளர்கள் விண்ணப்பித்திருந்தனர்.

இவர்களிடம் ICFJ நிறுவனம் உங்களால் எழுதப்பட்டு அண்மையில் பிரசுரமான அல்லது ஒலி, ஒளி பரப்பப்பட்ட ஆக்கம் ஒன்றை அனுப்பி வைக்குமாறு கோரியிருந்தது.

விண்ணப்பதாரிகள் அனுப்பிய ஆக்கங்களுள் இலங்கையிலிருந்து வெளிவரும் சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் யாழ். நிருபர் ந.பரமேஸ்வரன் கடந்த 15.04.2012 அன்று சண்டே ரைம்ஸ பத்திரிகையில் எழுதிய சைக்கிளில் இருந்து மோட்டார் சைக்கிளுக்கு மாறிவரும் யாழ்ப்பாணச் சமூகம் என்ற செய்திக் கட்டுரையை சிறந்த செய்திக் கட்டுரையாக ICFJ நிறுவனம் தெரிவு செய்துள்ளது.

அத்துடன் இந்தக் கட்டுரையை தமது இணையத்தளத்திலும் பிரசுரிக்கவுள்ளது இந்நிறுவனம்.

# இரண்டு அடி உயர்த்தப்படும் முறிப்புக்குள அணைக்கட்டு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி - புதுமுறிப்புக்குளம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் 109.8 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகிறது. கிளிநொச்சியில் காணப்படுகின்ற பெரிய குளங்களில் ஒன்றான இக்குளத்தின் கீழ் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போதைய புனரமைப்பு பணியின் மூலம் குளத்தின் அணைக்கட்டு இரண்டு அடி உயர்த்தப்பட்டு நீர் கொள்ளளவை அதிகரித்து பயிர்ச்செய்கை பரப்பளவை அதிகரிக்கும் அதேவேளை, நீர்ப்பாசன வாய்க்கால்களும் புனரமைக்கப்படவுள்ளது என கிளிநொச்சி பிராந்திய நீர்ப்பாசன திணைக்களத்தினர் தெரிவிக்கின்றனர். (29)

# நெடுந்தீவில் பிரதேச, சமூக விழிப்புணர்வு கலந்துரையாடல்





(நெடுந்தீவு)

நெடுந்தீவில் பிரதேச சமூக விழிப்புணர்வுக் கலந்துரையாடல் நேற்றுப் பிற்பகல் 2.00 மணிக்கு நெடுந்தீவு கிழக்கில் அமைந்துள்ள சுப்பிரமணிய வித்தியாலயத்தில் வித்தியாலய அதிபர் திருமதி வனிதாராணி தேவதாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழவில் நெடுந்தீவு பிரதேச சபைத் தவிசாளர் தானியேல் றெக்சியன், நெடுந்தீவு பொலிஸ் நிலைய விடயப் பொறுப்பதிகாரிகள் எ.எ.குணதிலக, எ.எம்.ரோகித, எல்.கலம்சூரி, ஆர்.எம்.திலகரட்ண ஆகியோரும் நெடுந்தீவு கிழக்கு பகுதி கிராம அலுவலர் கோபாலு சண்முகலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டதோடு நெடுந்தீவு பகுதியில் மணவர்களது ஒழுக்கங்களும், அவர்களது கல்வி நடவடிக்கையில் பெற்றோரின், பாதுகாவலர்களின் பங்களிப்புக்கள் பற்றியும், கல்வி வளர்ச்சியில் ஆசிரியர்களது அர்ப்பணிப்புக்கள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை ஆசிரியர் தோமஸ் அல்வின் நிகழ்த்தினார். நெடுந்தீவு மாவிலித்துறை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் வித்தியால மாணவர்களும், ஆசிரியர்களும் இணைக்கப்பட்டு கலந்துரையாடல் நடைபெற்றது.

# நாகேஸ்வர கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி மேற்கு, நாகேஸ்வரம் திருவருள்மிகு ஸ்ரீநாகேஸ்வர நாகவரத நாராயணர் தேவஸ்தான புனராவர்த்த பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை மு.ப 9.49 மணி முதல் 10.57 மணிவரை பக்தி பூர்வமாக நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறுமென ஆலய பொறுப்புரிமை பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து ஞாயிறன்று தர்சனம், ஆசார்ய சம்பாவனை, மகா ஆசீர்வாதம் மற்றும் மஹாபிஷேகம், தீபாராதனை, பிரசாதம் வழங்கல், மாலை தீபாராதனை ஆகியவற்றைத் தொடர்ந்து ஸ்ரீமத் நாகவரத நாராயண சுவாமி பூமாதேவி, ஸ்ரீதேவி சகிதம் அலங்காரத் தண்டிகையில் வீதியுலான எழுந்து அடியவர்களுக்கு அருள் பாலிப்பார். (68)

# நவாலி வை.எம்.சி.ஏ இல் இன்று கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கல்லுண்டாயில் மலச்சுத்திகரிப்பு நிலையம் அமைப்பது பற்றிய விளக்கக் கூட்டமொன்று இன்று பகல் 10.00 மணிக்கு நவாலி வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சகல பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களையும் சமூகம் தருமாறு அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

இப்பகுதியில் மலக்கழிவைக் கொட்டி அதிலிருந்து உரம் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (104)

# ஜெய்ப்பூர் நிறுவன வெள்ளிவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் வெள்ளிவிழா நிகழ்வுகள் இன்று காலை, மாலை என இரு நிகழ்வுகளாக நடைபெறவுள்ளது.


இதில் காலை நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலையில் என்பு முறிவு சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் க.உமாபதி, மாலை நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்துகொள்ளவுள்ளனர்.


சரவணா ரெக்ஸ்
பிரமாண்டமான ஆடித்தள்ளுபடி

இடம்:-சரவணா ரெக்ஸ் [களஞ்சியசாலை]
சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
[கெங்காதரன் மருத்துவமனைக்கு அருகாமை]
காலம்:-07.07.2012
இன்றுமுதல்
நேரம்:-காலை 9.00
மணி முதல் இரவு 7.00 மணிவரை
விடுமுறை நாட்களிலும்
மலிவு விற்பனை
நடைபெறும்
(C/1585)

# “வாழ்வேமுடிந்தது” என்றுதவித்தவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுகின்றது யாழ்.ஜெய்ப்பூர்

## யாழ்.மறைமாவட்ட ஆயர்



(யாழ்ப்பாணம்)

அவயவங்களை இழந்து வாழ்வே முடிந்தது என்ற விரக்தியில் தவித்தவர்களை வாழவைக்க உதவிக்கரம் நீட்டும் யாழ்.ஜெப்பூர் ஸ்தாபனத்தை ஆசீர் வதிக்கின்றேன் என யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் தெரிவித்தார்.

இன்று 25 ஆண்டு சேவையை நிறைவு செய்து வெள்ளி விழாக்காணும் யாழ்.ஜெயப்பூர் நிறுவனத்திற்கு வழங்கியுள்ள ஆசிச்செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்

தனது 25வது வருட வெள்ளிவிழா நிறைவைக் கொண்டாடும் யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தினருக்கு இத்தருணத்தில் ஆழ்ந்த அன்பையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

தமிழ் மக்களுடைய வரலாற்றில் யுத்தகாலம் பெரும் ஆதிக்கம் செலுத்தியுள்ள வேளையில் யுத்தம் ஏற்படுத்திய பாதகமான விளைவுகளால் அங்கவீனர்களாக பலர் உருவாக்கப்பட்டனர்.

மனிதநேய நோக்கோடு யாழ்.ஜெய்ப்பூர் ஸ்தாபனத்தை உருவாக்க முனைந்து அதற்கு முயற்சித்த அனைவரையும் இந்நேரத்தில் நினைவு கூருகின்றேன்.

அவயவங்களை இழந்து வாழ்வே முடிந்தது என்ற நிலையில் தவித்த மக்களுக்கு மீண்டும் புது நம்பிக்கை கொடுத்து வாழ வைக்கும் உதவிக் கரம் நீட்டும் மனிதநேய ஸ்தாபனமாகிய இந்த யாழ். ஜெய்ப்பூர் ஸ்தாபனம் தனது 25ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்ற இவ்வேளையில் அனைவரோடும் சேர்ந்து நானும் மனதார வாழ்த்தி இதில் பணிபுரியும் அனைவரையும் இறைவன் தனது ஆசீர் வாதத்தால் நிரப்பி மன மகிழ்ச்சியையும் திருப்தியும் அளிக்க வேண்டுகின்றேன். எனத் தெரிவித்துள்ளார்.

# சமூகவிஞ்ஞானப் போட்டி

(வலிகாமம்)

வலிகாமம் கல்விவலயத்தின் கோட்டமட்டத்தில் நடத்தப்பட்டிருந்த சமூக விஞ்ஞானப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களிற்கான வலயமட்ட போட்டிகள் நடைபெற்றவுள்ள தாக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

இப்போட்டி நாளைஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. பங்குபற்றும் போட்டியாளர்களை தயார்படுத்தி அனுப்புமாறு அதிபர்கள், பணிப்பாளரினால் கேட்கப்பட்டுள்ளனர். (06)

# புதியநிர்வாகத்தெரிவு

(தும்பளை)

தும்பளை மேற்கு சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகத் தெரிவு கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை 2.00 மணியளவில் இடம் பெற்றது. தலைவராக செ.சிதம்பரநாதன்(ஓய்வு பெற்ற அதிபர்), உபதலைவராக கு.சாந்தகுமார், செயலாளராக சு.ஜனார்த்தனன், உபசெயலாளராக ச.ருக்குமணி, பொருளாளராக க.புலேந்திரன் ஆகியோருடன் 8 நிர்வாக உறுப்பினாகளும் தெரிவு செய்யப்பட்டனர். (62)

# குடும்பவன்முறைச்சட்டம் நூல் வெளியீடு

(பருத்தித்துறை)

சட்டத்தரணி சபா. இரவீந்திரனின் 4ஆவது சட்டநூலான பாதுகாப்பு (குடும்பவன் முறைச்சட்டம்)நூல் வெளியீட்டு விழா அண்மையில் பருத்தித்துறை தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயமண்டபத்தில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் கே.கே. யோகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வாழ்த துரையை நெல்லண்டை பத்திர காளி அம்பாள் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ தி.சோமாஸ் கந்தக் குருக்கள் வழங்கினார்.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு நூலை வெளியிட்டு வைத்தார்.

நூலின் முதற்பிரதியை யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி செல்வி. சர்மிலா வேதநாயகம்பிள்ளை, கனடாவைச்சேர்ந்த நிர்மலா அமிர்தநாத் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். பருத்தித்துறை பிரதேச செயலர் ரீ.ஜெயசீலன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். (01)

# உற்பத்தி நிலையம் திறப்பு

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டையில் கலையொளி பன்பொருள் உற்பத்தி நிலையமொன்று நேற்று முன்தினம் யு.என்.டி.பி நிறுவனத்தின் அனுசரணையுடன் அப்பிரிவு கிராம சேவையாளர் நிஷாந்தனால் சம்பிரதாயபூர்வமாக திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்த உற்பத்தி நிலையம் ஆனைககோட்டை கரைப்பிரான் ஆலய பொதுமண்டபத்தில் மேற்படி சனசமூக நிலையம் மற்றும் மகளிர் கிராம அபிவிருத்தி சங்கம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்த உற்பத்தி நிலையத்தில் பன்புல்லினாலான தொப்பி வகைகள், கைப்பைகள் பாய் வகைகள், காரியாலய பைகள், பூச்செண்டு சாடிகள் என்பனவும் பயிற்சி பெற்ற பெண்களினால் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. இதற்கான நிதியுதவியை யு.என்.டி.பி. நிறுவனம் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (104)



வவுனியா குடியிருப்பு சித்திவிநாயகர் ஆலயத்தின் பூங்காவனத்திருவிழா இடம்பெற்றபோது விநாயகருக்கு பூசை வழிபாடுகள் இடம்பெறுவதைக் காணலாம் (160)

# திருக்குறள் மனனப்போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலய ரீதியாக பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட திருக்குறள் மனனப்போட்டி முடிவுகள் வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளரினால் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதல் ஐந்து இடங்களை பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**அதிகீழ்ப்பிரிவு, (தரம்-6,7,)**

ஜெ.யதுர்ஷனா(மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை), பூ.நித்ர்சன்(கட்டைவேலியாக்கரை வித்தி), சி. சாரங்கன் (ஹாட்லிக் கல்லூரி), இ.சாமந்தியா (தொண்டைமானாறு வீரகத்தி ம.வி), செ.தர்சிகா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)

**கீழ்ப்பிரிவு, (தரம்-8,9)**

கு.தர்ஷனா(வடமராட்சி மத்திய கல்லூரி), வி.நிதர்சன் (கட்டைவேலி யாக்கரு), வி.சங்கவி(யா.வடஇந்து மகளிர் கல்லூரி), பி.தர்ஷாந்தி (கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை), கு.கலைச்செல்வி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)

**மேற்பிரிவு, (தரம்-10,11)**

கு.பிறேமினி(பருத்தித்துறை இந்து விநாயகர் வித்தி), சபாமதி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), தே.சிபிஸ்ரா (வல்வெட்டி இ.த.க. பாடசாலை), தி.துஷாலினி(கட்டைவேலி யாக்கரு வித்தி), இ.சுபாஜினி (வல்வை சிவகுரு வித்தி)

**அதிமேற்பிரிவு, (தரம்-12,13)**

யோ.வினோதா(யாழ்.வட இந்துமகளிர் கல்லூரி), கே.கஸ்தூரி(வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி). (109)

# புரிந்துணர்வற்ற செயற்பாட்டால் சிற்றூர்தி உரிமையாளர்கள் பாதிப்பு

(அச்சுவேலி)

யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதியில் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் தனியார் சிற்றூர்த்திகளின் அடாவடி நடவடிக்கைகளினால் அச்சுவேலி தனியார் சிற்றூர்திச் சங்க உறுப்பினர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி இருப்பதாக உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வீதிப்புனரமைப்பு வேலைகளுக்காக சில தினங்களுக்கு முன்னர் யாழ்.பருத்தித்துறை பிரதான வீதியில் ஆவரங்கால் சந்திமுதல் வல்லைச்சந்தி வரையான வீதிப்பகுதி வாகனப் போக்குவரத்திற்கு அனுமதிக்காது மூடப்பட்டுள்ளதால் பருத்தித்துறை சிற்றூர்திச் சங்க சிற்றூழியர்கள் யாழ்ப்பாணத்திற்கான போக்குவரத்து சேவையினை அச்சுவேலி பஸ்நிலைய வீதியினூடாகவே மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில் மேற்படி பருத்தித்துறை சிற்றூர்திச் சங்க சிற்றூர்திகள அச்சுவேலி பஸ் நிலையத்திற்கும் ஆவரங்கால் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் பயணிகளை ஏற்றிச் செல்வதால் அச்சுவேலி சிற்றூர்திச்சங்க சிற்றூர்தி உரிமையாளர்கள் தமக்குரிய வருவாயின் ஒரு பகுதியை இழக்க வேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

சிற்றூர்திச் சங்கங்களிடையே ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானங்களின் படி வீதி மூடப்படும் வேளைகளில் பருத்தித்துறை சிற்றூர்திகள் அச்சுவேலியின் இப்பிரதேசங்களில் பயணிகளை ஏற்றிச்செல்வது தடைசெய்யப்பட்டிருந்த போதிலும் சில சிற்றூர்தி உரிமையாளர்கள் தான்தோன்றித்தனமாக செயற்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (03)

# வீதியில் அகழ்ந்தெடுக்கப்படும் மண் விற்பனை செய்வதாக முறைப்பாடு

(அச்சுவேலி)

வீதிப்புனரமைப்பு நடவடிக்கைகள் காரணமாக வீதிகளில் இருந்து அகழ்ந்து வெளியெடுக்கப்படும் மண் பொதுமக்களுக்கு பணத்திற்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக யாழ்.பருத்தித்துறை வீதி உள்ளிட்ட பல்வேறு வீதிகளின் புனரமைப்பு வேலைகள் தற்போது மும்முரமாக இடம்பெற்று வரும் வேளையிலே இவ்வாறான சில செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை புனரமைப்பு செய்யப்படும் வீதிகள் குடியிருப்பு நிலங்களை விட மிகவும் உயரமாக இருப்பதால் வீதிக்கும் வீட்டிற்கான போக்குவரத்துப் பாதைக்கும் இடையிலான சிறு பகுதிகளை வீதித்திருத்தப் பணிகளில் ஈடுபட்டு வரும் பணி யாளர்கள் வீதியில் இருந்து தோண்டி எடுக்கப்பட்ட மண்ணைக் கொண்டு நிரப்பியபின் அதற்கான பணத்தை குடியிருப்பாளர்களிடம் இருந்து அறவிட்டு வருவதாகவும் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (03)

# தகவல்தொழில்நுட்ப புத்தகமின்மையால் கிளிநொச்சி மாணவர்கள் பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் தகவல் தொழில் நுட்பப் பாடத்தை கற்கும் மாணவர் களுக்கு அதற்குரிய புத்தகம் வழங்கப்படாமையால் மாண வர்கள் அவற்றை கற்பதில் சிரமப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கல்வித்திணைக்களத்தினுடாக பாடசாலைகளுக்கு இந்த புத்தகம் வழங்கப்பட்ட நிலையில் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் குறிப்பிட்டளவு புத்தகமே வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அனைத்து மாணவர்களுக்குமென இப்புத்தகம் வழங்கப்படாத நிலையில் ஒரு புத்தகத்தை 2மாணவர்கள், 3 மாணவர்கள் என இணைந்து மாறிப் படிக்க வேண்டியிருப்பதால் பரீட்சை நடைபெறும் காலங்களில் அவற்றை படிப்பதில் தாம் சிரமப்படுவதாக மாணவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை இப்புத்தகத்தை யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலை ஒன்று கல்வித் திணைக்களத்தினூடாக அச்சிட்டு வெளியிடுவதாக தெரிவிக்கும் அம் மாணவர்கள் அவற்றை தமக்கு பெற்றுத்தந்தால் பேருதவியாக இருக்கும் எனவும் பணம் கொடுத்து வாங்குவதற்கும் தாம தயாராக இருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே தகவல் தொழில் நுட்ப பாடம் உயர்தரக்கல்விக்கு முன்னோடியாக இருப்பதால் தாம் அடிப்படையிலிருந்து கற்பதற்கு இலகுவாக இப்புத்தகத்தை பெற்றுத்தர சம்பந்தப்பட்டவர்கள் ஆவன செய்யுமாறு மாணவர்களும், பெற்றோர்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (77)

எல்லாருக்குமே உங்கள் காதைக் கொடுக்கலாம் ஒரு சிலரிடம் மட்டுமே வாயைக் கொடுக்கலாம். - பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, தொலைநகல் : 0212221811
விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## தீயவைக்கு இணங்க வேண்டாம்!

"ஒரு குழந்தை நல்லபடியாக வளர்ந்து முன்னேற வேண்டும் என்றால் மூன்று பேர் முக்கியம். அம்மா, அப்பா, பள்ளிக்கூட ஆசிரியர். அந்தக் குழந்தையின் பிற்கால வாழ்வுக்கு வேண்டிய நல்ல குணங்களை இவர்களால் தான் ஊட்ட முடியும். மூவரும் சேர்ந்து பதினைந்து வயதுக்குள் ஒரு குணமான பிள்ளையாக மாற்றாவிட்டால் பிறகு கடவுளோ, பிசாசோ, எந்த அரசாங்கச் சட்டமோ அவர்களை மாற்ற முடியாது" என்பார்கள்.

இதற்கு, பள்ளிக்கூடங்களில் வெறும் பாடப்புத்தகங்களுக்கு மேலதிகமாக வாழ்வுக்கான கல்வி வழங்குவதற்கும் பாட நேரங்கள் ஒதுக்கியாக வேண்டும். சமூகத்துடனான உறவும் அக்கறையும் ஊட்டக்கூடிய வகுப்புகள் ஏற்படுத்தப்படாவிட்டால், இன்றைய தொழினுட்ப வளர்ச்சியும் ஆற்றலும் சிறுவர்களை முரட்டுத்தனமான திசைகளிலேயே எடுத்துச் சென்றுவிடும்.

ஏற்கெனவே நம் சிறுவர்களை பணம் ஈட்டும் கல்விக்கே விரட்டி விரட்டி வளர்த்துக் கொண்டிருக்கிறோம். வெளிநாட்டுப் பணம் – பொருட்கள் மீதான மோகமும், வெளிநாடுகளுக்கே சென்றுவிடும் நோக்கமுமாகத்தான் நம் பிள்ளைகள் வளர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய நாடு, நம்முடைய பொருட்கள், நம்முடைய தேவைகள், நம்முடைய வாழ்வு என்று பலவற்றை அவர்களுக்கு அடிப்படையிலிருந்தே சொல்லித்தர வேண்டியிருக்கிறது. நம்முடைய பாரம்பரிய பாவனைப் பொருட்கள், உணவுப் பழக்கம் போன்றவற்றையும் தனியாகக் கற்றுத்தர வேண்டியிருக்கிறது. செயற்கைக்கும், சுலபத்திற்கும், நாகரிகத்திற்குமாக நாம் பல்வேறு நஞ்சுகளைச் சூழலில் அனுமதித்தும் உட்கொண்டும் வருகிறோம்.

அன்னியக் கலாசார விரைவு உணவு வகை எந்தவிதக் கட்டுப்பாடும் இன்றி நுழைவது பற்றி நம்மிடம் எந்த ஆய்வுகளோ கவனமோ இல்லை. குழந்தைகளுக்கான சொக்ளேற்றிலும், புத்துணர்ச்சி ஊட்டும் கொக்கோவிலும் மாரடைப்புக்கான காரணி "தியோபுரோமின்" என்ற பெயரில் ஒளிந்திருப்பதாகச் சொல்கிறார்கள்.

சருமத்தின் மினுமினுப்புக்குப் பூசும் களிம்புகளால் வியர்வைத் துவாரங்கள் அடைபடும். தோல் அழற்சி உண்டாகும். சில உதட்டுச் சாயங்களில் உள்ள சிலாக்சேன்கள், நகச்சாயத்தின் டையியூட்டைல் தாலேற் ஆகிய இரசாயனங்களால் கர்ப்பப் பையில் கோளாறுகள் உண்டாகலாமாம்.

அக்குளில் வியர்வை மணம் போக்கத் தெளிக்கும் வாசனை மருந்தில் "பாராபென்" ரக இரசாயனப் பொருள் உள்ளது. இது மார்பகப் புற்றுநோய்க்குக் காரணமாகிறதாம்.

தரை கழுவும் திரவத்தில் அடங்கிய சோடியம் லோரைல் சல்பேற்தான் நாங்கள் பல்துலக்கும் பற்பசையிலும் உள்ளது. இது நுரையீரல், மூளையைப் பாதிக்கும். இப்படிப் பல பல ஆபத்துகளை நாம் விரும்பியே விலைக்கு வாங்குகிறோம், தவிர்க்க முடியாமல் திண்டாடுகிறோம்.

அவசரம், நாகரிகம், வேலைச்சுலபம் என்பவற்றில் மயங்கி எல்லாவற்றையும் தாராளமாய் உள்ளே வரவிடுவதில் கவனம் தேவை. பள்ளிக்கூடங்களில் சில வகுப்புகளாவது சமூகப்பிரச்சினைகள் பற்றி அறிவூட்டும் பாடநேரங்களாக வேண்டும். தொடர்ந்தும் அந்நிய மோகத்துடனும், வன்முறை உணர்வுகளுடனும், சமூகமுன்னேற்றம் பற்றிய கவனமின்றியும் விட்டேற்றித்தனமாக ஏட்டுக்கல்வியுடன் மட்டுமே பிள்ளைகளை வளர்த்துக்கொண்டிருக்க வேண்டாம்.

நமது தாய் தந்தையருக்கு அவர்களது முன்னோர் விட்டுச் சென்றிருந்த சமூகம் அல்ல, எமது பிள்ளைகளுக்கு நாம் விட்டுச் செல்வது என்பதை ஒருகணம் நிதானமாகச் சிந்தித்தால் எவரும் புரிந்துகொள்ள முடியும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளில் கவனம் குவிக்க முடியும். - ஆசிரியர்

# நகரசபை சுகாதார தொழிலாளர்களின் பணிப்புறக்கணிப்பு முடிவுக்கு வந்தது

(வவுனியா)

வவுனியா நகரசபையின் சுகாதார தொழிலாளர்கள் கடந்த 2 ஆம் திகதியில் இருந்து மேற்கொண்டு வந்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் நேற்று முன்தினம் மாலை சமரசப் பேச்சுக்களை அடுத்து முடிவுக்கு வந்துள்ளது.

19 கோரிக்கைகளை நகர சபையிடம் கையளித்தும் இது வரை அதற்கான தீர்வு கிடைக்கவில்லை எனவும் அத்தியாவசியமாக 4 கோரிக்கைகளை முன்வைத்தும் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் நகரசபை தலைவரிடம் தமது கோரிக்கைகள் தொடாபில் கலந்துரையாட நேரம் கேட்டிருந்த நிலையில் நகரசபை தலைவரினால் நேற்று முன்தினம் மாலை 5 மணிக்கு கலந்துரையாடுவதற்கு நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் தமது மத்தியகுழுவுடன் கலந்துரையாட வேண்டுமென சுகாதார தொழிலாளர்களின் வவுனியா சங்கத்தினர் தெரிவத்திருந்த நிலையில் நேற்று அகில இலங்கை சுகாதார தொழிலாளர்சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளர் உட்பட வவுனியா சங்கத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் சிலரும் இதற்கான ஏற்பாடுகளை முன்னின்று செயற்படுத்திய நகர வரியிறுப்பாளர் சங்கத்தின் தலைவர் நகரசபை தலைவர் செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் 5 பேரும் அடங்கலாக சுமூகமான தீர்வுக்கான கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது சுகாதார ஊழியர்களினால் முன்வைக்கப்பட்டிருந்த கோரிக்கைகளான மலசல கூடமும் ஓய்வறையும் மூன்று மாத காலப்பகுதிக்குள் திறந்த கேள்விப்பத்திரம் மூலம் கொடுக்கப்பட்டு நிறைவேற்றப்படும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுபவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நகரசபை தலைவரால் உள்ளூராட்சி ஆணையாளருக்கு எழுத்து மூலமாக கோரிக்கை விடுக்கப்படும் 102 சுகாதாராத் தொழிலாளர்கள் வவுனியா நகரத்திற்கு தேவையென்பதனை சுட்டிக்காட்டி நியமனம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்வதெனவும் தற்போது 8 சாரதிகள் கடமையில் ஈடுபடுவதனால் தேவை ஏற்படும் போது முன்னுரிமை அடிப்படையில் சுகாதார தொழிலாளர்களுக்கு சாரதி நியமனம் வழங்கப்படும். ஒரு வார கலத்தினுள் குப்பைகளை ஏற்றிச் செல்லும்போது குப்பைகள் வீதியில் விழாமல் இருப்பதற்கு பாதுகாப்பு வலை வாங்கபபடுமெனவும் நகரசபையினால் உறுதியளிக்கப்பட்டதுடன் சுகாதாரத் தொழிலாளர்கள் வேலைப் பகுதிக்கு பணிக்கு அமர்த்தப் படுவதனை உடனடியாக நிறுத்துவதெனவும், சுகாதார ஊழியர்கள் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்குவ தெனவும் தீர்வு காணப்பட்டதுடன் சுகாதாரத் தொழிலாளர்களின் தேவைகளை உடனுக்குடன் நகரசபையின் செயலாளருக்கு தெரியப்படுத்துவதெனவும் தெரிவிக்கப்பட்டது. (160)

# உள்ளூராட்சிமன்ற சொத்துக்களை பராமரிக்கும் வேலைத்திட்டம்

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கு சொந்தமான சொத்துக்களை முறையாகப் பராமரிப்பதற்கான ஒருங்கிணைந்த வேலைத் திட்டமொன்றினை மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் அறிமுகப் படுத்தியுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் நிலையான சொத்துக்கள் தொடர்பான தகவல்களை முறையாகப் பேணுவதுடன், வருடாந்தம் மேற்கொள்ளப்படும் பொருட் கணக்கெடுப்பு நடவடிக்கைகளை இலகுபடுத்தும் வகையில் தேவையான நடைமுறைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

நிலையான சொத்துக்களை முறையாகப் பராமரிப்பதனை இலகுபடுத்தும் வகையில் உள்ளூராட்சி மன்றங்களில் புதிதாக கணினி மென்பொருள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கணினி மென்பொருளைப் பயன்படுத்துவது தொடர்பாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதுடன், தேவையான மேற்பார்வை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும திருகோணமலை மாவட்டங்களை உள்ளடக்கியதாக 45 உள்ளூராட்சி மன்றப் பிரிவுகளிலும் இந்த வேலைத்திட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளதாக மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# தமிழகத்தில் கரையொதுங்கிய இலங்கை மீன்பிடிப்படகு

(யாழ்ப்பாணம்)

தமிழ்நாடு வேதாரண்யம் கடற்கரையோரமாக வட பகுதியைச் சேர்ந்த படகு ஒன்று நேற்றுக்காலை கரையொதுங்கியிருப்பதாக தமிழ்நாடு மீன்வளத்துறை அமைச்சின் காரியாலய அதிகாரி சுந்தரம் தெரிவித்துள்ளார்.

மனிதர்கள் எவருமற்று கரையொதுங்கியிருக்கும் இந்தப் படகு குறித்து நேற்று முற்பகல் அவர் யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் ந.கணேசமூர்த்திக்கு அறிவித்திருப்பதாகவும் தெரியவருகின்றது. எனினும் இந்தப்படகு குறித்து மேலதிக தகவல்களைப் பெறும்பொருட்டே தமிழ்நாடு மீன்வளத்துறை அதிகாரி யாழ். கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளருக்கு அறிவித்திருப்பதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை பூநகரி பள்ளிக்குடாப் பகுதியைச் சேர்ந்த சிறிய படகு ஒன்று அண்மையில் கடும் காற்றுக்காரணமாக கடலில் அடித்துச் செல்லப்பட்டு மணியந்தோட்டம் உதயபுரம் கடற்கரையோரமாக கரையொதுங்கியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

# அவுஸ்ரேலியா செல்லமுயன்ற 41 பேர் மான்கேணியில் கைது

வாகரை-மான்கேணி கடற்பகுதியில் சட்டவிரோதமான முறையில் அவுஸ்ரேலியா செல்ல முற்பட்ட 38 ஆண்களும், ஒரு பெண்ணும், 5 வயது சிறுவர்கள் இருவருமாக 41 பேர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் திருகோணமலை, வாகரை, முல்லைத்தீவு மற்றும் சிலாபம் போன்ற பகுதிகளை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப் படுகிறது.அவர்கள் பயன்படுத்திய இரண்டு வேன்கள் மற்றும் முச்சக்கர வண்டி ஒன்றும் மீட்கப் பட்டுள்ளன.

அவர்கள் கடல்மார்க்கமாக அவுஸ்ரேலியா செல்வதற்காக, 99 குதிரை வலுக்கொண்ட படகு ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக பொலிஸ் ஊடக நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கைதானவர்கள் வாழைச்சேனை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர்.

# சாட்சியாளர்கள் அடையாளம் காட்டவில்லை

மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவாளர்கள் இருவர் கட்டுவனவில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்ட இருவரை சாட்சியாளர்கள் அடையாளம் காட்டத் தவறியுள்ளனர்.

இதற்கு முன்னர் இக் கொலையுடன் தொடர்புடையவர் என அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்ட ஜூலம்பிட்டி அமரேவை மூன்று சாட்சியாளர்கள் அடையாளம் காட்டினர்.

நேற்று அந்த சாட்சியாளர்கள் அடையாள அணிவகுப்பிற்கு அழைக்கப்பட்டிருந்த போதும் அவர்கள் சந்தேகநபர்களை அடையாளம் காட்டத்தவறியுள்ளனர்.

இதனால் வழக்கு மீதான விசாரணையை வலஸ்முல்ல நீதவான் நீதிமன்றம் 20ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

கட்டுவன கொலையுடன் தொடர்புடையதாக கைது செய்யப பட்டுள்ள ஜூலம்பிட்டி அமரே உள்ளிட்ட சந்தேகநபர்கள் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# அரசுக்கு எதிராக கூட்டமைப்பால் அசைய முடியுமா?

- த.கடலவன்

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்மந்தன் சிங்கக்கொடியை ஏற்றி சிங்கள தேசத்துடன் தனது நல்லுறவை வெளிப்படையாக கொண்டாடியதன் ஊடாக தனக்கும் சிங்களத் தலைவர்களுக்கும் இடையில் அடிப்படையில் இருக்கின்ற நெருக்கத்தை மீண்டும் ஒரு தடவை ரணிலுடன் இணைந்து வெளிப்படுத்தி இருந்தார். இவருடைய வெளிப்படுத்தல் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிகழ்ச்சி நிரலுக்கு அப்பாற்பட்டது என கூட்டமைப்பில் உள்ள ஒருசிலர் கூறினாலும் கூட்டமைப்பின் தமிழ்த் தேசிய நிகழ்ச்சி நிரல் என்பது சிங்கள தேசிய நிகழ்ச்சி நிரலுக்குஅமைவானதாகவும் சிங்கள அரசியல்வாதிகளின் கருத்தியல்பிற்கு உட்பட்டதாகவும் உள்ளமை புதிய விடயமல்ல. சிங்களத் தலைவர்களுக்கு ஒரு முகத்தையும் தமிழ் மக்களுக்கு இன்னொரு முகத்தையும் காலத்துக்கு காலம் கூட்டமைப்பினர் காட்டி வருகின்ற போதிலும் கூட்டமைப்பின் உண்மை முகம் எது என்பதை தற்போது தமிழ் மக்கள் புரியத் தொடங்கி விட்டார்கள்.

தமிழ் மக்களினுடைய காணி அபகரிப்புக்கு எதிராக எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் இருந்த கூட்டமைப்பிற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். பஸ் நிலையத்திற்குமுன்பாக நடத்தப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்ட அரச எதிர்ப்பு போரட்டமானது பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தியது. விட்டால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கை மேலோங்கிவிடும் என்பதால் கூட்டமைப்பினரும் அரசதரப்பிடம் பக்குவமாகப் பேசியபடி, போராட்டங்களுக்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் இப் போராட்டங்கள் ஊடாக எந்தவொரு சாதகமான தன்மையும் தமிழ் மக்களுக்கு கிடைக்காது என்பதை கூட்டமைப்பினர் நன்கு அறிவர். ஆனால் தாங்கள் எதிர்ப்பு அரசியலில் ஈடுபடுகிறோம் என்று காட்டுவதற்காக கூட்டமைப்பினர் போலி நாடகம் ஆடிவருகின்றனர்.

இந்த நிலையில் அரசுடன் இணைந்து கொண்டே அரசின் நிலஅபகரிப்பை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் எதிர்த்துள்ளமை ஆனது மக்கள் மீதுள்ள அவரது கரிசனையை வெளிப்படுத்தி நிற்கிறது. இராணுவத்தினர் கேட்கிறார்கள் என்பதற்காக எல்லா நிலங்களையும் கொடுத்துவிட முடியாது என அவர் தெரிவித்துள்ளார். காணி அபகரிப்பு மீள் குடியேற்றம் தொடர்பாக எழுந்துள்ள விமர்சனங்கள் தொடர்பில் ஆராய்வதற்கென யாழ். மாவட்டசெயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட கலந்துரையாடலின்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், வடபகுதியில் தமிழர்களிற்கு சொந்தமான காணிகள் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டு வருவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு எனக்குண்டு. மேலும் சில பகுதிகளிலுள்ள தனியார் காணிகளையும் அரச காணிகளையும் இராணுவத்தினர் கேட்கின்றனர் என்பதற்காக எல்லாக் காணிகளையும் கொடுத்துவிட முடியாது. அத்தோடு தன்னிச்சையாக காணிகளை இராணுவத்தினர் அபகரிக்கவும் முடியாது.

இராணுவத்தினர் தமக்கு காணிகள் வேண்டும் என்றால் அதை விண்ணப்பித்து முறைப்படியே பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பித்துக் கேட்டாலும் காணிகளைக் கொடுப்பதா இல்லையா என்று மக்கள் நலன்களின் அடிப்படையில் வைத்து ஆராய்ந்தே முடிவு எடுக்கப்படும். இ'டப்படி இராணுவத்தினர் காணிகளை அபகரிக்க நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன். மேலும் தனியார் காணிகள் இராணுவத்திற்கு வழங்கப்படாது என்று வடக்கு மாகாண ஆளுனரும் கூறியுள்ளார். மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில்தான் முழுக் கவனம் எடுக்கப்படும் என அவர் தெரிவித்திருந்தார்.





**தற்போது படையினரிற்கு எதிராக கிளிநொச்சியில் மக்களை அணிதிரட்டும் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் இரணைமடுவிலுள்ள படைத்தலைமையகத்தில் அடிக்கடி அங்குள்ள படையதிகாரியைச் சந்தித்து நட்பு ரீதியாக பழகுவதையும் விருந்துண்டு மகிழ்வதையும் கிளிநொச்சியில் உள்ள அப்பாவி மக்கள் அறிய வாய்ப்பில்லை. இதனால் சிறிதரன் கூறுவதை நம்பி படையினருக்கு எதிராக மக்கள் அணிதிரண்டால் மக்கள் பாதிக்கப்படும் பொழுது மக்களின் துயர் துடைக்க கூட்டமைப்பினர் மக்களின் அருகில் இருப்பார்களா?....**

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட அரச அதிகாரிகள் பங்குகொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உண்மையில் மக்கள் நலன் சார்ந்த விடயங்களில் மிகவும் கவனமாகவே நகர்வுகளை மேற்கொள்ள வேண்டும். கூட்டமைப்பினர் போன்று சொதப்பல் அரசியல் செய்வதன் ஊடாக மக்கள் நலன் சார்ந்த பணிகளை முன்னெடுக்க முடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் அரசாங்கத் தரப்புடன் அடிக்கடி தொடர்புகளை பேணிவருகின்றனர். தங்களது தனிப்பட்ட தேவைகளுக்காக அரசாங்கத்துடனும் அமைச்சர்களுடனும் தொடர்புகளைப் பேணிவரும் கூட்டமைப்பினர் தங்களது அரசியல் நலன்களிற்காக அரசாங்கத்துடன் தாங்கள் பகையாளிகள் போல் நடந்து கொள்கின்றனர்.

அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தெரிவுக்குழு உட்பட அனைத்து தீர்வுக்குரிய நகர்வுகளையும் கூட்டமைப்பினர் புறக்கணித்தே வருகின்றனர்.கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் இனப்பிரச்சினை தீரக்கூடாது என்பதில் அவர்கள் எப்போதுமே உறுதியாக உள்ளனர். இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டால் தங்களால் அரசியல் செய்யமுடியாது என்பது கூட்டமைப்பிற்கு நன்றாகவே தெரியும்.

அரசாங்கத்திற்கும் கூட்டமைப்பின் இருப்பு தேவையாக உள்ளது. தென் இலங்கை மக்களிடம், கூட்டமைப்பினர் கூடுதலான அதிகாரங்களைக் கேட்கின்றனர், இது தமிழீழத்திற்கு ஒப்பீடாக மாறிவிடும், எனவே கூட்டமைப்பினர் கேட்பதை நாம் கொடுக்கமாட்டோம், இந்த நாடு சிங்களவர்களிற்கு மட்டுமே சொந்தமானது என்று கூறி தென் இலங்கை மக்களை கவர்வதற்கு அரசாங்கத்திற்கு கூட்டமைப்பின் தேவை அவசியமாகி உள்ளது. எனவே உள்ளார்ந்த ரீதியில் கூட்டமைப்பிற்கு அரசாங்கமும் அரசாங்கத்திற்கு கூட்டமைப்பும் உள ரீதியாக ஒன்றுக்கொன்று தேவையாகவே உள்ளது. ஆனால் வெளியகத்தில் அல்லது மக்கள் மத்தியில் தாங்கள் இருதரப்பும் பகையாளிகள் போல் நடந்துகொள்கின்றனர்.

தற்போது படையினரிற்கு எதிராக கிளிநொச்சியில் மக்களை அணிதிரட்டும் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் இரணைமடுவிலுள்ள படைத் தலைமையகத்தில் அடிக்கடிஅங்குள்ள படையதிகாரியைச் சந்தித்து நட்பு ரீதியாக பழகுவதையும் விருந்துண்டு மகிழ்வதையும் கிளிநொச்சியில் உள்ள அப்பாவி மக்கள் அறிய வாய்ப்பில்லை. இதனால் சிறிதரன் கூறுவதை நம்பி படையினருக்கு எதிராக மக்கள் அணிதிரண்டால் மக்கள் பாதிக்கப்படும் பொழுது மக்களின் துயர் துடைக்க கூட்டமைப்பினர் மக்களின் அருகில் இருப்பார்களா?....

தமிழ் மக்களை மீண்டும் படுகுழியில் தள்ளி விடுவதற்காக கூட்டமைப்பினர் தற்போது வரிந்து கட்டிக் கொண்டு வந்துள்ளனர். தமிழ் மக்கள் தொடர்பில் கரிசனை உள்ளவர்கள் போல் தங்களைக் காட்டிக்கொண்டு தங்களது தனிப்பட்ட சுகபோகங்களையும் நலன்களையும் கவனிப்பதிலேயே கூட்டமைப்பினர் உறுதியாக உள்ளனர்.

மாறாக, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவோ தனது அரசியல் அனுபவங்கள் ஊடாக தனது பட்டறிவைப் பயன்படுத்தி அரசாங்கத்துடன் பெரியளவில் முரண்படாமல் மக்கள் அவலங்களை களைந்து வருகிறார். மீள் குடியேற்றம் புனர்வாழ்வு அபிவிருத்தி உயர்பாதுகாப்பு வலய விடுவிப்பு என மக்களின் அவசிய தேவைகளை நிறைவுசெய்து வருகிறார். அடுத்த கட்டமாக தமிழ் மக்களுக்குரிய நிரந்தர அரசியல் தீர்வை பெற்றுக்கொடுக்க அரசதரப்புடனும் வெளிநாட்டு இராஜ தந்திரிகளுடனும் அடிக்கடி கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றார். இதனூடாக நிரந்தர அரசியல் தீர்வுக்கான நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆனால் கூட்டமைப்பினரோ தீர்வு கிடைக்கக் கூடாது என்பதில் உறுதியாக உள்ளனர். இதற்காகவே மக்களைக் குழப்பிவிடும் நோக்கில், இவர்களின் தேர்தல்களை மையமாக வைத்த இத்தகைய போராட்டங்கள் ஒரு கட்டத்துக்கு மேல் நகர முடியாமல் அதே பழைய உசுப்பேற்றும்வசனங்களுடன் மறுசுழற்சிக்கு வரும் என்பதை இப்போது அனைவரும் அறிவர்.

யுத்தத்தினால் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்த மக்களை மீளவும் குடியமர்த்துவது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று யாழ்.மாவட்ட செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. அங்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா குறிப்பிடுகையில், உயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இன்னும் இரண்டு கிழமைகளில் மக்கள் மீள்குடியேற்றப்பட்டு விடுவார்கள் என்றார். யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் தம்மை மீளவும் குடியமர்த்துமாறு தொடர்ந்து வேண்டுகோள்விடுத்து வருகின்றனர். மிதிவெடி அபாயம், உயர்பாதுகாப்பு பிரதேசம் போன்ற காரணத்தினால் மீள்குடியேற்றம் தாமதமடைந்து வருகின்றது. உயர்பாதுகாப்பு வலயத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இன்னும் 2 வாரத்திற்குள் மக்களை மீளவும் குடியமர்த்தவுள்ளோம். இந்தப் பகுதிகளில் குடியமர்த்தப்படவுள்ளகுடும்பங்களின் விபரங்களை உடனடியாக சகல பிரதேச செயலர்களும் உதவி அரசாங்கஅதிபர்களும் பட்டியல்படுத்தி அறிக்கையாக சமர்ப்பிக்க வேண்டும் என்றார்.

மேலும் வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில், பிரசேத்தில் சுமார் ஆயிரத்து 659 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட வேண்டும் எனவும் பிரதேச செயலர் கூறியுள்ளார். ஏற்கனவே இந்தப் பகுதியில் 2ஆயிரத்து 962 குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்ய அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும். பிரதேச செயலர் இந்த விடயத்தில் கூடிய கவனம் எடுத்து மீளவும் குடியமர்த்தப்பட வேண்டிய குடும்பங்கள் தொடர்பாக தகவல்களை பெறவேண்டும். ஏற்கனவே மீள்குடியேற்றப்பட்ட மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும். நீண்டகால அழிவுகளை சந்தித்த பிரதேசங்கள் என்பதனால் குறுகிய காலத்திற்குள் சகல தேவைகளையும் பூர்த்தி செய்துவிட முடியாது. இருப்பினும் மக்களுக்கு தேவையான உதவிகளை அரசாங்கம் தொடர்ந்து வழங்கும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலென்ரின், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இவ்வாறு ஆரோக்கியமான நகர்வுகளை அமைச்சர் மேற்கொள்ள, கூட்டமைப்பினர் அரசாங்கத்திற்கு எதிராக அகிம்சை வழியில் போராடுகின்றோம் என்று கூறிக்கொண்டு மீண்டும் சொதப்பல் அரசியலில் இறங்கியுள்ளனர்.

# அவசரகாலச் சட்டத்தை நீடிக்க வேண்டிய அவசியமில்லை




(கொழும்பு)

நாட்டில் அவசரகாலச் சட்டத்தைத் தொடர்ந்தும் அமுல்படுத்த வேண்டிய அவசியமில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அவசரகாலச் சட்ட நீடிப்பு தொடர்பில் நாடாளுமன்றில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

வடக்கில் பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. தெற்கில் மக்கள் வாழ்க்கை சுமூக நிலைக்குத் திரும்பியுள்ளது. எனவே அவசர காலச் சட்டத்தை தொடர்ந்தும் நீடிக்க வேண்டிய அவசியமில்லை.

எனினும், அவசரகாலச் சட்டத்தை நீக்குவது குறித்து அரசாங்கம் இன்னமும் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை. அவசரகாலச் சட்டத்தின் கீழ் நாட்டை ஆட்சி செய்வது ஜனநாயகத்திற்கு விரோதமானது.

முறையாக அவசரகாலச் சட்டத்தை நீக்குமாறு நாம் அரசாங்கத்திடம் கோருகின்றோம். சனல் 4 காணொளி மற்றும் தாருஸ்மன் அறிக்கை தொடர்பில் இராஜதந்திர ரீதியில் அரசாங்கம் இதுவரையில் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்றார்.

# மீனவர் பிரச்சினை குறித்து இலங்கை - இந்தியா பேச்சு

(கொழும்பு)

மீனவர் பிரச்சினைகள் குறித்து இலங்கைக்கும்இந்தியாவிற்கும் இடையில் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் நடைபெறவுள்ள சர்வதேச கடல் எல்லை தொடர்பான பேச்சுவார்த்தைகளில் மீனவர் பிரச்சினைகள் குறித்து பேசப்பட உள்ளது. மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் இலங்கை இந்திய அதிகாரிகளுக்கு இடையில் பல்வேறு தடவைகள் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுமூகமான முறையில் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என இந்திய அதிகாரிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இந்திய கடல் எல்லைக்குள் மீனவர்கள்மீன்பிடியில் ஈடுபட்டால் பூரண பாதுகாப்பை வழங்க முடியும் எனவும், எல்லை தாண்டிமீன்பிடியில் ஈடுபடும் போது சில சிக்கல்கள் ஏற்படுவதாகவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# குற்றம் சாட்டப்பட்டோரின் வேட்பு மனுக்களை ஏற்க வேண்டாம்

தேர்தலில் பல்வேறு குற்றச் சாட்டுகளுடன் தொடர்புடையர்களின் வேட்பு மனுக்களை ஏற்க வேண்டாம் என்று பவரல் அமைப்பு, அனைத்து அரசியல் கட்சிகளிடமும் கோரிக்கை விடுத்துள்ளது.

வேட்பாளர் தெரிவின் போது இது தொடர்பில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியா ராய்சி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அனைத்துக் கட்சிகளுடன், எழுத்து மூலமாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

உள்ளூராட்சி மன்ற தேர்தல் கள் மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களில் போட்டியிடுகின்ற பல்வேறு தரப்பினர்கள் மீதான அதிக குற்றச்சாட்டுகள் காணப்படுகின்றமையை அவதானிக்க முடிகிறது.

இந்த நிலையில் இது தொடர்பில் அவதானமாக செயற்பட்டு, குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றவர்களை எதிர்வரும் தேர்தலில் ஈடுபடுத்த வேண்டாம் என்று அரசியல் கட்சிகளின் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# நாடாளுமன்ற அமர்வுகளில் கிரமமாக பங்குபற்றுவதை உறுதிப்படுத்தவேண்டும்

(கொழும்பு)

நாடாளுமன்ற அமர்வுகளில் உறுப்பினர்கள் கிரமமாக பங்குபற்றுவதை உறுதிப்படுத்துவதற்காக கண்டிப்பான ஒழுக்கக்கோவை இருக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.



கேள்வி நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கு அமைச்சர்கள் பெரும்பாலும் சபையில் இருப்பதில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தம்மை தெரிவு செய்த மக்களுக்காக நாடாளுமன்ற செயன்முறைகளில் பங்குபற்றுவதற்குப் பொறுப்பாக வேண்டும்.

அமைச்சர்கள் சிலர் சபையில் இருக்காமையினால் கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கு அரசாங்கத் தரப்பு பிரதம கொறடாவுக்கு எவ்வளவு சிரமமாக இருந்தது என்பதை கடந்த 4 ஆம் திகதி நாம் அவதானித்தோம்.

நாடாளுமன்ற அமர்வுகளில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்குபற்றுவதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கூறிய அவர், சபை அமர்வில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பட்டியலை எவரும் பார்க்கக் கூடியதாக மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை காட்சிப்படுத்த வேண்டும் என்றார்.

# மக்களை துன்புறுத்த வேண்டிய தேவை படையினருக்குக் கிடையாது

(கொழும்பு)



வடக்கு மக்களை துன்புறுத்த வேண்டிய தேவை படையினருக்கு கிடையாது. வடக்கில் இராணுவ ஆட்சி நிலவுவதாக சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அவசரகாலச் சட்டத்தின் பல சரத்துக்கள் நீக்கப்பட்டுள்ளன. சில சரத்துக்களில் தளர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. போர் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்ட சில நாடுகளில் இயல்பு நிலைமையை ஏற்படுத்த பல ஆண்டுகள் காத்திருக்க நேரிடும்.

வடக்கு மக்களை துன்புறுத்த வேண்டிய தேவை படையினருக்கு கிடையாது. படையினருக்கும் வடக்கு மக்களுக்கும் இடையிலான உறவுகளில் விரிசல் ஏற்படுத்த சிலர் முயற்சிக்கின்றனர்.

வடக்கில் இராணுவ ஆட்சி நிலவுவதாக முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே குற்றம் சுமத்தி வந்தது. தற்போது கூட்டமைப்புடன் வேறும் தரப்பினரும் இணைந்து கொண்டு குற்றம் சுமத்துகின்றனர்.

சர்வதேச சமூகத்தின் தேவைக்கு அமைய இவ்வாறான சதித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. சனல் 4 காணொளி எதற்காக குற்றம் சுமத்துகின்றது என்பதனை அறிந்து கொள்ள சிலர் ஆர்வம் காட்டுகின்றனர்.

சர்வதேச சமூகத்தின் சூழ்ச்சித் திட்டங்களை முறியடிக்க அவசரகாலச் சட்டத்தை நீடிக்க வேண்டியது அவசியமானது என விமல் வீரவன்ச தெரிவித்தார்.

# சவுதியில் பௌத்த வழிபாடு இலங்கையர் கைது


(கொழும்பு)

சவுதி அரேபியாவில் பௌத்த பூஜைகளை நடத்திய இலங்கையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அந்த நாட்டின் ஷரியா சட்டத்தின் கீழ் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை மீட்கும் பொருட்டு, வெளியுறவுகள்துறை அமைச்சு, சவுதியில் உள்ள தூதரக அலுவலகத்தின் ஊடாக நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

சவுதியில் தொழில்புரிந்து வந்த நிலையில், அவர் தங்கி இருந்த இடத்தில் புத்தர் சிலை ஒன்றை வைத்து, பூஜை செய்து வந்ததைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# வரட்சி ஏற்பட்டாலும் மின்சாரத் துண்டிப்பு இல்லை



(கொழும்பு)

நீருக்கு பலத்த தட்டுப்பாடு நிலவினாலும் மின்சாரத் துண்டிப்பு மேற்கொள்ளப்பட மாட்டாது என மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பாட்டலீ சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மொத்த மின் உற்பத்திக்கு நீர் மின் உற்பத்தியின் பங்களிப்பு 13 வீதம் என்ற குறைந்த மட்டத்தில் இருந்தாலும், 24 மணி நேரம் தொடர்ச்சியான மின்சார விநியோகம் இடம் பெறுவதாக அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதிக செலவை எதிர் கொள்ள நேரிட்டாலும், டீசல் மின் உற்பத்தி நிலையங்களை செயற்படுத்தி நாட்டின் மின்சார தேவையை பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக மின் சக்தி எரிசக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# தனிமையில் வசித்த பெண் வாவியிலிருந்து சடலமாக மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, ஊறணிப் பகுதியில் உள்ள வாவியில் இருந்து நேற்று முன்தினம் இரவு பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 8.00 மணியளவில் கிடைக்கப்பெற்ற தகவலின் . அடிப்படையில், மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதான வீதியில் உள்ள வாவியிலிருந்து மீனவர்களின் உதவியுடன் சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர்.

மட்டக்களப்பு, ஞானசூரியம் சதுக்கத்தை சேர்ந்த லக்ஷ்மி (52 வயது) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்ட பெணணின் உறவினர்களால் அவர் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்குக்கு கொண்டு செல்லப்பட்டது.

குறித்த பெண் கணவரிடம் இருந்து விவாகரத்துப்பெற்று தனிமையில் வசித்துவந்ததாக ஆரம்பக்கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பிலான விசாரணையை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வார்த்தைகள் மூலம் பாலியல் தொந்தரவு

(கொழும்பு)


தனியார் வைத்தியசாலையொன்றில் வார்த்தைகள் மூலம் பெண்களை பாலியல் தொநதரவு செய்வதாக குற்றம் சுமத்தப்படும் நபர் ஒருவரை ஜூலை 9 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் கனிஷ்க் விஜேரட்ன உத்தரவிட்டுள்ளார்.

வைத்தியசாலைக்கு வரும் பெண் உத்தியோகஸ்தர்கள் மற்றும் நோயாளிகள் பலர் இந்நபரினால் வார்த்தைகள் மூலம் பாலியல் தொந்தரவுக்கு உட்படுததப்பட்டதாக கொழும்பிலுள்ள தனியார் வைத்திய சாலையின் பாதுகாப்பு உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இச்சந்தேக நபர் குற்றவியல் கோவையின் 345 ஆவது பிரிவின் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய நடவடிக்கையில் ஈடுபட்ட மற்றொரு நபர் தப்பிச் சென்றுள்ளதாகவும் அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் நீதிமன்றத்தில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஆலயங்களின் புனரமைப்புக்கு உதவிகள் வழங்கப்படும்




(யாழ்ப்பாணம்)

யுத்தத்தினால் சேதமடைந்த, அபிவிருத்தி செய்யவேண்டிய ஆலயங்களின் புனரமைப்பிற்காக தொடர்ந்தும் எமது பங்களிப்பை வழங்குவோம் என ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.


உரும்பிராய் ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றதின் பின்னர் அங்கு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் இவ் ஆலயத்தின் அபிவிருத்திக்காக கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் எமது கட்சியும் பாரிய பங்களிப்பை வழங்கி வருகின்றோம். இவ்வாலயத்தின் புனரமைப்பிற்காக எமது பங்களிப்பை தொடர்ந்தும் வழங்குவோம் என்றும் மேலும் தெரிவித்தார்.



கிளிநொச்சி கிருஸ்ணர் ஆலயம் உள்ளூர் மற்றும் புலம்பெயர் தமிழ் மக்களின் நிதி பங்களிப்பில் ஒரு கோடி அளவில் செலவு செய்யப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளது. இவ்வாலயத்தின் கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளதுடன் இன்றுசனிக்கிழமை எண்ணைக்காப்பு சாத்தும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. இது கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள நீண்ட கால சிறப்புமிக்க ஆலயம் என்பது குறிப்பிடத்தக்கது. ஆலயத்தின் தோற்றத்தை காணலாம், (29)

## பரமர் சங்கமம்



"மரத்துக்குக் கொடி பாரமா? கோழிக்குக் குஞ்சு பாரமா? எண்டு சொல்லுவினம். அப்புடி இருக்கேக்க இத்துணை வல்லமை பொருந்திய மனித குலத்திற்கு தமது வாரிசு பாரமாக அமையுமா?

சமீப காலங்களில் நடைபெற்றுக் கொண்டிருககும் சம்பவங்கள் இந்தச் சிந்தனையைத் தோற்றுவிப்பதையும் தவிர்க்க முடியாமல் இருந்கிறது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இளம் சோடி ஒன்று கைக் குழந்தைக்கு ஹெல்மட் போட்டுக்கொண்டு சென்றதை எதேச்சையாகப் பார்க்க முடிந்தது.

ஐந்தாறு வயதுச் சிறுவர்களுக்கு 'ஹெல்மட' அணிவது ஒன்றும் புதுமையில்லை. பிறந்து ஐந்தாறு மாதங்களே ஆன சிசுவுக்கு போட்டு மடியில் வளத்திக் கொண்டு சென்றதைப் பார்த்தது இதுதான் முதல் என்றதால் என்னுடைய சிந்தனையில் பொறி தட்டியது.

இச் செய்கையை நாகரீகத்தின் வெளிப்பாடாகக் கருதமுடியவில்லை. பாதுகாப்பு செய்வதின் உச்சமாகவே எண்ண முடிந்தது. ஏனெனில் சிசுக்களை எவ்விதம் பேண வேணுமெண்டதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

நாட்டில் சமீபகாலத்தில் பரவலாகவும். குறிப்பாக முப்பதாண்டு அனர்த்தின் முடிவில் வன்னி, வட கிழக்குப் பகுதிகளிலும் பிறந்த இரண்டொரு தினங்களே நிறைந்த சிசுக்களை குப்பைத்தொட்டி மற்றும் ஆக்களில்லாப் பகுதிகளில் வீசி விடுவதையும், உயிருடன் மண்ணைத் தோண்டிப் புதைத்து விடுவதையும் செய்தித் தாள்களில் தகவல்களாக அறிய முடிகிறது.

சமீபத்தில் வவுனியா ஓமந்தைப் பகுதியில் இளம் தாய் ஒருவர் புதைத்த சிசு பதினைந்து நிமிடங்களில் உயிருடன் மீட்கப்பட்டது. அவரை விசாரித்தபோது குழந்தை இறந்ததால் புதைத்ததாகவும் தெரிவித்து இருந்தார்.

இறுதி யுத்தத்தில் கணவனை இழந்திருந்த பெண் ஒரு குழந்தையுடன் வாழ்ந்து வந்ததாகவும் தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை பார்த்து வந்தபோது தாயாக்கப்பட்டதாகவும் அறியப்பட்ட மேலதிகத் தகவல்கள்.

சிசுக்கள் அவ்விதம் வீசப்படுவதற்குப் பெண்கள் மட்டும் பொறுப்பாகக் கருதப்பட்டுக் கைது செய்யப்படுவதும், தண்டனைக்குட்படுத்தப்படுவதும் அறியக்கூடிய விசயங்கள்.

சிசுக் கொலைகள், கைவிடப்படும் சம்பவங்கள் இப்பாழுதுதான் புதிதாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் காரியங்களல்ல. பன்னெடுங்காலமாகவே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இதனோடு சம்பந்தப்படுகின்ற ஆண் சமூகம் இதுவரை சட்டத்தின் பிடிகளில் அகப்படாமல் தப்பித்துக் கொண்டிருக்கிறது. அல்லது அவர்களைச் சட்டம் பாதுகாத்து வைத்திருக்கிறதாகவே எண்ணத் தோன்றுகின்றது.

அபலைப் பெண்களில் அக்கறை செலுத்திய முன்னாள் யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் ஒரு சமயம் கூட்டமொன்றில் பேசுகையில் கூறிய விடயம் இது.

'கையில் குழந்தையுடன் சிறுமி ஒருத்தி என்னிடம் வந்தாள். குழந்தையின் தந்தை யாரெண்டு கேட்க நான்கு பேர்களைக் காட்டுகிறாள். அதிலொருவன் அவளுக்கு ஒன்றுவிட்ட சகோதரன்'.

இவ்வாறான சிக்கல்களும் இருக்கிறது. ஆயினும் பெண் மட்டும் குற்றவாளி ஆக்கப்படுவது எவ்விதம் சொல்லுங்கோவன் பாப்பம்...

## மத்திய வங்கி குழுவினரால் செயலக ஊழியர்களுக்கு விழிப்புணர்வு

(அச்சுவேலி)

இலங்கை மத்திய வங்கி பிரதிநிதிகளின் குழுவொன்று யாழ்ப்பாண குடாநாட்டிலுள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் அரச நிறுவனங்களின் ஊழியர்களைச் சந்தித்து பல்வேறு விழிப்புணர்வுக் கருத்துரைகளை வழங்கி வருகின்றது.

கிராமசேவகர் மற்றும் அரச ஊழியர்கள் மூலம் பொது மக்களை விழிப்பூட்டிக் கொள்ளும் வகையில் இச்சந்திப்புக்கள் அரச அலுவலகங்கள் மற்றும் திணைக்களங்களிலேயே இடம் பெற்று வருகின்றது.

இச்சந்திப்பின் போது தற்போது புழக்கத்திலுள்ள நாணயங்களின் பயன்பாடு பற்றியும், போலி நாணயத்தாள்களின் பயன்பாட்டினை எவ்வாறு தடுக்கலாம் எனவும் அதனை எவ்வாறு இனங்காணலாம் என்பது பற்றிய விளக்கங்களை வழங்கியதுடன், தற்சமயம் வருமானம் ஈட்டத்தக்க ஓர் தொழிற்துறையாக உருவெடுத்துள்ள பிரமிட்டு கட்டமைப்புக்களின் போலிச் செயற்பாடுகள் எவ்வாறு உள்ளன.

அவை எவ்வாறான பாதிப்புக்களை எதிர்காலத்தில் ஏற்படுத்துகின்றது. இது எவ்வாறான தண்டனைக்குரிய குற்றம் என்பது பற்றியும், பல்வேறு கருத்துரைகளை வழங்கி வருகின்றனர்.

இதேவேளை அரச ஊழியர்கள் பண கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான பிரமிட்டுக் கட்டமைப்புக்களில் ஈடுபடுவது அரசுக்கு எதிரான செயல். ஆகையால் இதனால் சிறைத் தண்டனைகளைக்கூட அனுபவிக்க நேரிடலாம் எனவும் மேலும் தெரிவித்தனர். (03)

## வங்கிக் கணக்கிற்கு பரிசுப் பொருட்கள்

(வரணி)

தேசிய சேமிப்பு வங்கியால் ஆரம்பிக்கப்பட்ட (Smile) கணககுகளுக்கு பரிசுப் பொருட்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

இக்கணக்குகள் தபாலகங்கள், உப தபாலகங்கள் ஊடாகவும் நடைமுறைப்படுத்தப் படுகிறன.

மேலும் வாடிக்கையாளர் தொகைக்கு ஏற்றவாறு பரிசுப் பொருட்கள் வழங்கப்படுகிறன.

இதேவேளை கடந்த 2005 ஆம் ஆண்டு கலாசார அலுவலர்கள் திணைக்களத்தினால் அரச ஊழியர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த இலக்கியப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட ஒரு சுவர்க்க விடுமுறை என்ற நூல் அன்பளிப்பாக பணம் வைப்பிலிடுவோருக்கு வழங்கப்பட்டுள்ளது. (150)

## சேவை நலன் பாராட்டு

கரணவாய் விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர் வேலுப்பிள்ளை சிவசிதம்பரத்துக்கான சேவை நயப்பு விழா கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றது.

பாடசாலைக்கு இவர் ஆற்றிய சேவையை பாராட்டியே இவ்விழா நடத்தப்பட்டதுடன் விழா நாயகன் மேளவாத்தியங்கள் சகிதம் மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டார்.

பாடசாலை அபிவிருத்திச் செயலாளர் ஜெயக்குமார் அவரது சேவையைப் பாராட்டி உரையாற்றினார். அத்துடன் இளங்கோ சனசமூக நிலையத்தினர் விழா நாயகனை பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர். (18)

## முரசின் இன்றைய பலன்


(07.07.2012 – சனிக்கிழமை)

நந்தன வருஷம் ஆனி மாதம் 23 ஆம் திகதி. சதுர்த்தி முன்னிரவு 8.28 வரை. நட்சத்திரம் அவிட்டம் பிற்பகல் 3.03 வரை. சித்தாமிர்தம்
சங்கட கரசதுர்த்தி
இராகுகாலம் 8.58 - 10.28 வரை. சுபநேரம் 2.58 - 4.28 வரை.
எமகண்டம் 1.28 - 2.58 வரை. குளிகன்காலம் 5.58 - 7.28 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பதவியால் இலாபம், குடும்ப ஈடுபாடு குறைவு, பலவழியிலும் பண விரயம், போட்டி பொறாமை. |
| ரிஷபம் | காரிய சித்தி, அயலவர்கள் உதவி, குடும்பத்தில் ஏடிக்குப்போட்டி, கவனத்துடன் செயற்படவும். |
| மிதுனம் | சுபதினம், குடும்பத்தில் ஒற்றுமை, பொன் பொருள் சேரும், இறுக்கமான உறவுநிலை |
| கடகம் | எதிர்பாராத நன்மை, வாகனங்கள் சேரும், குடும்பத்தில் ஒற்றுமை, வெளிநாட்டு உதவிகள் |
| சிம்மம் | நண்பர் பகை, புதிய முயற்சிகளில் ஈடுபாடு, செலவுகள் அதிகரிக்கும், சகோதர வழிகளில் ஆதரவு. |
| கன்னி | உடல் நலம், பந்தயத்தில் வெற்றி, தொழில் மூல வருவாய், சுபகாரியங்கள் ஈடேறலாம். |
| துலாம் | பொறுமை நன்று, நண்பர்களால் தொல்லை, தாராள பணவருவாய், பதவி உயர்வு. |
| விருச்சிகம் | சந்தோஷம், உடல் தரும் பாதிக்கும், இருப்பிடத்தில் பிரச்சினை, முன் எச்சரிக்கை. |
| தனுசு | வாழ்க்கையில் உயர்வு, குடும்பத்தில் குதூகலம், காரிய அனுகூலம், அரச உதவி கிட்டும். |
| மகரம் | வாக்குப் பலிதம், தனகாரிய லாபம், குடும்பத்தில் மகிழ்ச்சி, தொழிற்துறையில் போட்டி |
| கும்பம் | ஞாபகமறதி, உடல்நலத்தில் கவனம், இருப்பிடத்தில் போட்டி, அலைச்சல் அதிகம். |
| மீனம் | ஓய்வு அவசியம், சகோதரரால் நன்மை, தெளிவுடன் செற்படுவீர், தொலைதூர இடமாற்றம். |

# மாகாண மெய்வல்லுநர்; 26 சாதனைகள் முறியடிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியின் நேற்றைய மூன்றாம் நாள் வரை 26 சாதனைகள் முறியடிக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி கடந்த 4ஆம் திகதியில் இருந்து யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்றைய மூன்றாம் நாள் வரை இடம்பெற்ற போட்டிகளின் படி இதுவரை 26 புதிய சாதனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதில் 19 சாதனைகள் பெண்களாலும், ஏழு சாதனைகள் ஆண்களாலும் முறியடிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியின் இறுதி நாள் நிகழ்வுகள் மற்றும் பரிசளிப்பு வைபவம் இன்று பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெறவுள்ளதாகவும், இப்போட்டி நிகழ்வில் கலந்து கொண்ட அன்னத்து வீர, வீராங்கனைகள் மற்றும், கோட்ட, வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு வீர, வீராங்கனைகளை உற்சாகப்படுத்துமாறும் போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (12)

# இலங்கை பிரிமியர் லீக் வெளிநாட்டு வீரர்கள் அறிவிப்பு


(கொழும்பு)

இலங்கை பிரிமியர் லீக் ருவென்ரி -20 தொடரில் பங்குபற்றவுள்ள வெளிநாட்டு வீரர்களை இலங்கை கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

ஐ.பி.எல். பாணியியில் இலங்கையில் முதலாவது இலங்கை பிரிமியர் லீக் (எஸ்.எல்.பி.எல்.) என்ற 20 ஓவர் கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் (ஆகஸ்டு) 10ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதையொட்டி 7 அணிகள் உருவாக்கப்பட்டு உள்ளன. இந்த போட்டியில் பங்கேற்க உள்ள 56 வெளிநாட்டு சர்வதேச வீரர்களின் பட்டியலை இலங்கை கிரிக்கெட் வாரியம் நேற்று வெளியிட்டது. அவுஸ்ரேலியாவின் மிட்செல் மார்ஷ், ஆரோன் பிஞ்ச், பெர்குசன், ஹாட்ஜ், பாகிஸ்தானின் மிஸ்பா உல்-ஹக், அஜ்மல், உமர் அக்மல், அப்ரிடி, சோபிப் மாலிக், தென்னாபிரிக்காவின் அல்பி மோர்கல், போத்தா, நியூசிலாந்தின் நாதன் மக்கல்லம், மேற்கிந்தியத்தீவின் கிறிஸ் கெய்ல், சாமுவேல்ஸ், கெமார் ரோச், எட்வர்ட்ஸ், பங்களாதேஷின் ஷகிப் அல்-ஹசன், தமிம் இக்பால் உள்ளிட்டோரும் இதில் அடங்குவர். ஆனால் இந்த பட்டியலில் இந்தியா, இங்கிலாந்து வீரர்களின் பெயர்கள் இடம் பெறவில்லை. இந்த போட்டியில் பங்கேற்க இந்திய வீரர்களுக்கு கிரிக்கெட் சபை ஏற்கனவே தடை விதித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# மின்னல் மனிதன் விலகல்



(பாரிஸ்)

மொனாகோவில் நடக்கவுள்ள டயமண்ட் லீக் தடகளப்போட்டியில் இருந்து, மின்னல் வேக மனிதன் ஜமேக்காவின் உசைன் போல்ட் விலகினார். சமீபத்தில், ஒலிம்பிக் போட்டிக்கான பயிற்சிக்காக, ஜமைக்கா தடகள வீரர்களுக்கு இடையில் போட்டி நடத்தப்பட்டது. இதன் 100 மீ. மற்றும் 200 மீ. ஓட்டத்தில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட உசைன் போல்ட், சகவீரரான யோகன் பிளேக்கிடம் தோல்வி அடைந்தார். இப்போட்டியின் போது உசைன் போல்ட்டுக்கு லேசான காயம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதனையடுத்து ஜூலை 20ஆம் திகதி மொனோகோவில் நடக்கவுள்ள டயமண்ட் லீக் தடகளப் போட்டியில் இருந்து விலகுவதாக போல்ட் நேற்று முன்தினம் அறிவித்தார்.

பீஜிங்கில் 2008இல் நடந்த ஒலிம்பிக்கில் 100 மற்றும் 200 மீ. ஓட்டத்தில் உலக சாதனையுடன் தங்கம் வென்ற போல்ட், டயமண்ட் லீக் போட்டியில் இருந்து விலகியது இரசிகர்களுக்கு ஏமாற்றம் அளித்துள்ளது.

இதுகுறித்து போல்ட்டின் பயிற்சியாளர் கிளின் மில்ஸ் கூறுகையில், தடகளப் பயிற்சி போட்டியின் போது, போல்ட்டுக்கு சிறிய காயம் ஏற்பட்டிருப்பதாக தெரிகிறது. ஒலிம்பிக் போட்டி தொடங்க இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், காயத்திற்கு தேவையான சிகிச்சை மேற்கொள்ள வேண்டியிருப்பதால், டயமண்ட் லீக் போட்டியில் இருந்து விலகுமாறு கூறினேன். விரைவில் லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கான பயிற்சியை தொடங்குவார், என்றார்.

இதுகுறித்து போல்ட் கூறுகையில், ஒலிம்பிக் போட்டிக்கான ஜமேக்கா அணியில் இடம் கிடைத்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. லண்டன் ஒலிம்பிக்கில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 100, 200 மற்றும் 4X100 மீ. ஓட்டத்தில் நடப்பு சம்பியன் அந்தஸ்தை தக்கவைத்துக் கொள்ளப் போராடுவேன். என்னுடன் ஒலிம்பிக் போட்டியில் விளையாட உள்ள சகவீரர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன், என்றார்.

# முரளிதரன் ஒப்பந்தம்

அவுஸ்ரேலியாவின் ருவென்ரி -20 தொடரான பிக்பாஷ் லீக்கில் இலங்கை அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் பங்குபற்றவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வருட இறுதியிலேயே இரண்டாவது பிக் பாஷ் தொடர் இடம்பெறவுள்ளது. கடந்தாண்டு இறுதியில் ஆரம்பித்து முதன்முறையாக இடம்பெற்ற மேற்படி தொடரில் முத்தையா முரளிதரன் பங்குபற்றியிருக்காத நிலையில், இம்முறை அவர் பங்குபற்றுவார் என்ற தகவலை முரளிதரனும் உறுதிப்படுத்தியுள்ளார். மெல்பேர்னைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரு அணிக-ளில் ஒன்றாக மெல்பேர்ன் றெனிகேட்ஸ் அணி சார்பாக முரளிதரன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# லோர்ட்ஸில் வில்வித்தை

(லண்டன்)

லண்டன் ஒலிம்பிக்கின் வில்வித்தைப் போட்டி உலகின் புகழ்பெற்ற கிரிக்கெட் மைதானமான லோர்ட்ஸில் நடைபெறவுள்ளது. ஒலிம்பிக் போட்டியில் 112 ஆண்டுகளுக்கு முன்பு கிரிக்கெட் அறிமுகம் செய்யப்பட்டாலும், அதன்பிறகு சேர்க்கப்படவில்லை. இந்த நிலையில் ஒலிம்பிக் வில்வித்தைப் போட்டியை நடத்துவதற்கு லோர்ட்ஸ் மைதானம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் கடந்த ஆண்டு அக்டோபரில் இங்கு வில்வித்தைப் போட்டி நடத்தப்பட்டது. ஆனால் அதைக் காண்பதற்கு யாரும் வரவில்லை. இருப்பினும் அதைப்பற்றி சர்வதேச வில்வித்தை சம்மேளனம் கவலைப்படவில்லை. கடந்த பல ஆண்டுகளாக இப்போட்டியில் கொரியாதான் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. ஒலிம்பிக் வரலாற்றிலும் அந்த அணிதான் அதிக பதக்கங்களை வென்றுள்ளது.

52 ஆண்டுகளுக்குப் பிறகு 1972ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் வில்வித்தைப் போட்டி மீண்டும் சேர்க்கப்பட்டது முதல் தற்போது வரை கொரியா 18 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளது.



# மேற்கிந்தியத்தீவுகள் வெற்றி

(ஹிங்சென்)

நியூசிலாந்து அணிக்கெதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி டக்வெத் லூயிஸ் முறையில் ஒன்பது விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. நியூசிலாந்து மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் போட்டி நேற்று முன்தினம் ஹிங்செனில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய நியூசிலாந்து அணி ரசெலின் சிறப்பான பந்து வீச்சை எதிர்கொள்ளத் திணறியதுடன் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் நியூசிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 190 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வெட்லிங் 60, ஜேக்கப் ஓரம் 32 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரசெல் நான்கு, ரம்போல், சுனில் நரைன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு 191 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 24.2 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மழை குறுக்கிட்டதால் போட்டி கைவிடப்பட்டு டக்வெத் லூயிஸ் முறையில் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. இதில் ஆட்டமிழக்காது கிறிஸ் கெயல் 63, ஸ்மித் 65 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக ரசெல் தெரிவானார்.

# ராவிட்டின் வளர்ச்சியை இந்திய வீரர்கள் விரும்பவில்லை

ராகுல்ராவிட்டின் வளர்ச்சியை சக இந்திய வீரர்கள் விரும்பவில்லை. அதனாலேயே அவர் வழிநடத்தலில் இந்திய அணி தோல்விகளைச் சந்திக்க நேர்ந்தது என இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளர் கிரேக் சப்பல் தெரிவித்துள்ளார். இந்திய அணியின் முன்னாள் கப்டன் ராகுல் ராவிட் பற்றி டைம்லெஸ் ஸ்டீல் என்ற பெயரில் முன்னாள் பயிற்சியாளர் கிரெக் சப்பல் புத்தகம் எழுதியுள்ளார். இதில் அவர் கூறியுள்ளதாவது: ராவிட் தலைமையில் இந்திய அணிபல வெற்றிகளைக் குவித்தது. இதனால் அவரது கை ஓங்கி யது. துரதிர்ஷ்டவசமாக, ராவிட் வளர்ச்சியை சக இந்திய வீரர்கள் சிலர் விரும்பவில்லை. அவருக்கு எதிராக செயற்பட்டனர். மற்ற கப்டன்களுக்கு கொடுக்கப்பட்ட ஒத்துழைப்பை போல ராவிட்டுக்கும் கொடுக்கப்பட்டிருந்தால், இந்திய அணியின் மிக வெற்றிகரமான கப்டன் என்ற பெருமையைப் பெற்றிருப்பார் சேசிங்என்றாலே தொடை நடுங்கி வந்த இந்திய அணி, ராவிட் தலைமையில் தொடர்ச்சியாக 17 வெற்றிகளைப் பதிவு செய்ததை குறிப்பிட விரும்புகிறேன். அதே போல மேற்கிந்தியத்தீவு, தென்னாபிரிக்காவில் நடந்த டெஸ்ட் போட்டிகளிலும் அவர் சாதனை படைத்தார். கேப்டவுன் டெஸ்ட் 2ஆவது இனிங்சில் இந்திய வீரர்கள் சொதப்பாமல் இருந்தால் தொடர் வெற்றியையும் அவர் வசப்படுத்தி இருப்பார் எனவும் அதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அசத்தப்போவது யார்?





(லண்டன்)

விம்பிள்டன் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்சுடன் போலந்து வீராங்கனை அக்னியஸ்கா ரட்வன்ஸ்கா மோதவுள்ளார். அரையிறுதியில் ஜேர்மனியின் ஏஞ்சலிக் கெர்பருடன் நேற்று முன்தினம் மோதிய ரட்வன்ஸ்கா 6-3, 6-4 என்ற நேர் செட்களில் வென்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார். மற்றொரு அரையிறுதியில் செரீனா வில்லியம்ஸ் பெலாரஸ் வீராங்கனை விக்டோரியா அஸரென்காவுடன் மோதினார். தொடக்கத்தில் இருந்தே அதிரடியாக விளையாடிய செரீனா, அஸரென்காவின் சர்வீஸ்களை எளிதாக முறியடித்து 6-3 என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றி முன்னிலை பெற்றார். இரண்டாவது செட்டில் அஸரென்கா கடும் நெருக்கடி கொடுத்தார். எனினும் சுதாகரித்து விளையாடிய செரீனா 6-3, 7-6 (8-6) என்ற நேர் செட்களில் வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். இறுதிப் போட்டியில் செரீனா, ரட்வன்ஸ்கா மோதுகின்றனர்.

விம்பிள்டனில் செரீனா ஏற்கனவே 4 முறை பட்டம் வென்றுள்ள நிலையில், ரட்வன்ஸ்கா முதல் முறையாக கிராண்ட் ஸ்லாம் ரென்னிஸ் போட்டியின் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கது.

# சிறந்த கால்பந்து வீரர்களை தேசிய ரீதியில் தேடும் திட்டம்



ஆசிய மற்றும் ஆபிரிக்காவிலுள்ள 20 நாடுகளில் தொழிற்பட்டுவரும் உலகின் ஓர்முன்னணி தொலைத் தொடர்பு நிறுவனமான பார்த்தி எயார்டெல் வடக்கு-கிழக்கு உட்பட இலங்கை முழுவதும் காணப்படும் இளம் திறமை மிக்க உதைபந்தாட்ட வீரர்களை தேடும் முதலாவது தேடுதல் வேட்டையான 'உதிக்கும் எயார்டெல் நட்சத்திரங்கள்' எனும் நிகழ்ச்சித் திட்டத்தினை ஆரம்பித்துள்ளது.

உலகின் மிகச் சிறந்த உதைபந்தாட்டக் கழகங்களில் ஒன்றான மன்செஸ்ரர் யுனைடட்டுடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள 'உதிக்கும் எயார்டெல் நட்சத்திரங்கள்' வடக்கு-கிழக்கு உட்பட இலங்கை முழுவதுமுள்ள 14 நிலையங்களை உள்ளடக்கிய, இங்கிலாந்தின் ஓல்ட் றெபோர்ட்டிலுள்ள மன்செஸ்டரர் யுனைடட் பயிற்சி முகாமில் ஒரு வாரம் பயிற்சி பெறுவதற்கான வாழ்நாள் அதிர்ஷ்டம் ஒன்றைப் பெறவிருக்கும் 12 இளம் திறமைமிக்க உதைபந்தாட்ட வீரர்களைத் தெரிவு செய்வதற்காக அடுத்த 1 மாத காலப்பகுதிக்கு நடைபெறும் ஓர் கடுமையான தேடல் நிகழ்ச்சித்திட்டமாகும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் அங்கீகாரத்துடனும் தருணயட்ட ஹெட்டக் மற்றும் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஆதரவுடனும் 'உதிக்கும் எயா(ர்)ரெல் நட்சத்திரங்கள்' முன் முயற்சிக்கு அனுசரணை வழங்குகின்றன.

இது தருணயட்ட ஹெட்டக் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவரும் சர்வதேச உதைபந்தாட்ட அமைப்புகள் சம்மேளனத்தின் நிறைவேற்று உறுப்பினருமான மனிலால் பெர்னான்டோ, பாரதி எயார்டெல் உலக பிராண்ட் பணிப்பாளர் பாரத் பம்பவலே, பாரதி எயா(ர்)ரெல் லங்கா பிரதம நிறைவேற்று உத்தியோகத் தரும் முகாமைத்துவப் பணிப்பாள ருமான சுரேன் குண வர்தன, மன்செஸ்ரர் யுனைட்டட் கழகத்தின் ஓர் உதைபந்தாட்ட ஜம்பவான் டிவைற் யோர்கி ஆகியோர் முன்னிலையில் கொழும்பிலுள்ள சினமன் கிறான்ட் ஹோட்டால் வைத்து கடந்த நான்காம் திகதி அறிவிக்கப்பட்டது. இந்த உதைபந்தாட்டப் பயிற்சி முகாமின் முதல் கூட்டம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 1ஆம், 2ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெறுகிறது. மன்னார், அநுராதபுரம்,திருகோணமலை, கல்முனை,மாத்தறை, களுத்துறை, குருநாகல், கண்டி, ஹட்டன், பதுளை, கொழும்பு, நீர்கொழும்பு ஆகிய பகுதிகளில் இடம் பெறும். இதேவேளை 2ஆம் கட்டம் செப்டம்பர் மாதம் 3ஆம், 4ஆம் திகதி கொழும்பு சி.ஆர். அன்ட் எப்.சி. மைதானத்தில் இடம்பெறும்.

# இன்றைய ஆட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் வெற்றிவிழாவை முன்னிட்டு பயனாளிகளுக்கிடையேயான வீதியோட்டம் மற்றும் மைதான விளையாட்டுப் ே பாட்டிகள் இன்று காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

வீதியோட்டப் போட்டி இன்றைய தினம் காலை 8.00 மணிக்கு ஜெய்ப்பூர் நிறுவன முன்றலிலிருந்து ஆரம்பமாகி கொழும்புத்துறை வீதி வழியாக பஸ்தியான் சந்தியை அடைந்து அங்கிருந்து கண்டி வீதி வழியாக பழைய பூங்கா வீதிச் சந்தியை வந்தடைந்து அங்கிருந்து மீண்டும் ஜெய்ப்பூர் நிறுவனத்தை வந்தடையும்.

மைதான விளையாட்டுப் போட்டிகள் யாவும் அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு யாழ். பரி-யோவான் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகி தொடர்ந்து நண்பகல் வரை நடைபெறும் எனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

***

(யாழ்ப்பாணம்)

சிங்கர் நிறுவன அனுசரணையுடன் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியும், பரிசு வழங்கும் நிகழவும் இன்றைய தினம் மாலை 7. மணிக்கு கைதடிச் சந்தியில் அமைந்துள்ள மின்னொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத் தலைவர் கே. மனோகரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக சிங்கர் நிறுவனத்தின் சிரேஷ்ட பிராந்திய முகாமையாளர் எம். மகேசரட்ணம், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண விளையட்டுத் திணைக்களப் பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரை, இலங்கை கரப்பந்தாட்டச் சம்மேளன உதவிச் செயலாளர் கேணல் மகேஸ் அபயரட்ண மற்றும் கௌரவ விருந்தினர்களாக சிங்கர் நிறுவன யாழ். மாவட்ட முகாமையாளர் வி. தயாளன், சாவகச்சேரி பொலிஸ் பொறுப்பாதிகாரி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இப்போட்டி நிகழ்விலும், பரிசில் வழங்கும் நிகழ்வும் கரப்பந்தாட்ட ரசிகர்கள், பொதுமக்கள் ஆர்வலர்கள் என அனைத்துத் தரப்பினரையும் கலந்து கொண்டு போட்டியாளர்களை உற்சாகப்படுத்துமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (93)

# வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையான மெய்வல்லுநர் : இன்று இறுதி நாள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி கடந்த நான்காம் திகதியிலிருந்து துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இப்போட்டியின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்றைய தினம் வெகுசிறப்பான முறையில் நடைபெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இதன் முதல் நாள் போட்டியில் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளின் விபரம் வருமாறு: (93,12)

## 1500 மீற்றர் ஓட்டம்

### 17 வயதுப் பெண்கள்

| பெயர் | பாடசாலை | பெறுபேறு |
|---|---|---|
| ஆர்.விஜயகுமாரி | முத்தையன்கட்டு.எம்.எஸ். | 05.40.6 |
| ஆர்.டினோஷா | மகிழங்குளம் ஜே.எஸ்.வி. | 05.41.8 |
| எச்.டி.சத்துரிகா | மடுகங்தா ம.வி. | 05.44.4 |
| எம்.ஜெயந்தினி | இராமநாதபுரம் ஜி.ரி.எம்.எஸ். | 05.56.7 |

### 17 வயது ஆண்கள்

| பெயர் | பாடசாலை | பெறுபேறு |
|---|---|---|
| ஆர். சாந்தன் | சுந்தரபுரம் ஜி.ரி.எம்.எஸ். | 04.35.5 |
| பி.பிராசந்த் | கற்சிலைமடு ஜி.ரி.எம்.எஸ். | 04.37.6 |
| ஏ.அன்ரனிஜெனட் | நாவாந்துறைஆர்.சி.ரி.எம்.எஸ். | 04.39.8 |
| பி.வினோதன் | துலுக்குடியிருப்புஆர்.சி.ரி.எம்.எஸ் | 04.39.8 |

### 19 வயதுப் பெண்கள்

| பெயர் | பாடசாலை | பெறுபேறு |
|---|---|---|
| ஆர். சாளினி | புதுக்குளம் ம.வி. | 05.25.4 |
| எஸ்.ஹேமா | உடையார்கட்டு ம.வி. | 05.34.9 |
| கே. அனுசியா | வித்தியனாந்தக் கல்லூரி | 05.43.6 |
| எஸ்.டக்ஷினி | சின்னப்பட்டிவிரிச்சான் | 05.47.2 |

### 21 வயது ஆண்கள்

| பெயர் | பாடசாலை | பெறுபேறு |
|---|---|---|
| கே.சதீஸ்குமார் | பூவரசங்குளம் ம.வி. | 04.20.0 |
| ரி.வினோவிதுர்தன் | முல்லைத்தீவு ம.வி. | 04.22.8 |
| பி.ரஜிந்தன் | பூநகரி ம.வி. | 04.30.0 |
| ரி.துவாரகன் | கற்சிலைமடு ஜி.ரி.எம்.எஸ். | 04.32.0 |

### 21 வயதுப் பெண்கள்

| பெயர் | பாடசாலை | பெறுபேறு |
|---|---|---|
| ரி. விஜினி | வவுனியா மத்திய ம.வி. | 05.26.9 |
| ஜி.மேரிறெனிதா | சென்.சேவியர் மகளிர் கல். | 05.52.9 |
| எஸ்.கீர்த்தனா | பாண்டியன்குளம் ம.வி. | 06.04.9 |
| கே.பிரியதர்சினி | சைவப்பிரகாச மகளிர் கல். | 06.11.8 |

### 100 மீற்றர் 21 வயது பெண்கள்

| பெயர் | பாடசாலை | பெறுபேறு |
|---|---|---|
| ஈ. காவிரி | அருணோதயாக் கல்லூரி | 13.9 |
| பி.திருமகள் | விசுவமடு ம.வி. | 14.6 |
| எஸ்.சுபர்னா | இராமநாதன் கல்லூரி | 14.7 |
| ஈ.ஜக்ஷனா | அருணோதயாக் கல்லூரி | 15.3 |

## மாகாண மட்ட புதிய சாதனைகள்

| பெயர் | பாடசாலை | வயது/பிரிவு | போட்டி | பழைய சாதனை | புதிய சாதனை |
|---|---|---|---|---|---|
| கே. சதீஸ்குமார் | பூவரசன்குளம் ம.வி. | 21 வயது ஆண் | 1500 மீற்றர் | 4.29.7 | 4.20.0 |
| ரி. வினோவிதுர்தன் | முல்லைத்தீவு ம.வி. | 21 வயது ஆண் | 1500 மீற்றர் | 4.29.7 | 4.22.8 |
| ஆர். சாளினி | புதுக்குளம் ம.வி | 19 வயது பெண் | 1500 மீற்றர் | 5.32.0 | 5.25.4 |
| ரி. வினோஜினி | வவு. தமிழ். மத்திய ம.வி. | 21 வயது பெண் | 1500 மீற்றர் | 5.36.7 | 5.26.9 |
| பி. நிதுஷன் | அருணோதயாக் கல்லூரி | 17 வயது ஆண் | கோலூன்றிப் பாய்தல் | 3.25 | 3.30 |
| எம். சாள்ஸ் அன்ரனி | அருணோதயாக் கல்லூரி | 17 வயது ஆண் | கோலூன்றிப் பாய்தல் | 3.25 | 3.30 |

### உயரம் பாய்தல் : 15 வயதுப் பெண்கள்

| பெயர் | பாடசாலை | பெறுபேறு |
|---|---|---|
| பி.விஜிந்தினி | தோட்டவெளி ஜி.ரி.எம்.எஸ். | 1.33 |
| எஸ்.மேரிஎம்சியா | கரம்பொன் லிற்றர் பிளவர் | 1.29 |
| என்.டிலக்சனா | யாழ். இந்து மகளிர் கல்லூரி | 1.27 |
| ஆர்.பிரியவர்னா | நெல்லியடி மத்திய ம.வி. | 1.27 |

### ஈட்டி எறிதல் : 19 வயதுப் பெண்கள்

| பெயர் | பாடசாலை | பெறுபேறு |
|---|---|---|
| பி. ரஜிதா | விக்டோரியாக் கல்லூரி | 30.35 |
| எஸ்.சுதர்சனா | குமுழமுனை ம.வி. | 27.00 |
| எஸ்.சிந்துஜா | வடமராட்சி இந்து ஜி.சி. | 26.40 |
| எம்.சுபாஜினி | மடுகந்தா எஸ்.என். | 24.70 |

### கோலூன்றிப் பாய்தல் : 17 வயது ஆண்கள்

| பெயர் | பாடசாலை | பெறுபேறு |
|---|---|---|
| பி. நிதுஷன் | அருணோதயாக் கல்லூரி | 3.3 |
| எம்.சாள்ஸ் அன்ரனி | அருணோதயாக் கல்லூரி | 3.3 |
| பி.திலக்ஷன் | மகாஜனாக் கல்லூரி | 3.1 |

### குண்டு எறிதல் : 19 வயது ஆண்கள்

| பெயர் | பாடசாலை | பெறுபேறு |
|---|---|---|
| பி.பிரசாந்த் | இணுவில் மத்திய கல்லூரி | 10.42 |
| எஸ்.விசாகன் | கனகரத்தனம் மத்திய ம.வி. | 10.24 |
| ரி.அனன்கன் | யோகபுரம் ம.வி. | 10.00 |
| கே.சிலோஜன் | கொக்குவில் இந்துக்கல்லூரி | 09.62 |

### குண்டு எறிதல் : 21 வயது பெண்கள்

| பெயர் | பாடசாலை | பெறுபேறு |
|---|---|---|
| ஜே.சர்மிளா | மானிப்பாய் மகளிர் கல்லூரி | 08.36 |
| எஸ்.ஜனர்தனி | மெதடிஸ்த பெண்கள் உ.பா. | 07.24 |
| எஸ்.விஜயலக்சுமி | உயிலங்குளம் ஆர்.சி.ரி.எம். | 06.55 |
| ஜெ.சுசனா | மெதடிஸ்த பெண்கள் உ.பா. | 06.12 |



வடக்கும் கிழக்கும் விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டில் இருந்த காலகட்டத்தில் வட கிழக்குப் பகுதியைத் "தமிழீழத்தின் கடற் பகுதி"யா கப் புலிகள் அறிவித்திருந்தனர். புலிகளுக்குச் சொந்தமல்லாத எந்த ஒரு படகும் "இராணுவத் தாக்குதலுக்கான இலக்கு" என்றே குறிப்பிட்டனர். அந்தக் கடற்புலிகளைப் பற்றி அதிகம் தெரியாத ஒரு விடயத்தைக் குறிப்பிட்டார்.

இந்தியா - இலங்கை ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகளின் போது, "இந்தியக் கடற்கரையை ஒட்டியுள்ள பிரதேசங்களைத் தங்கள் பாதுகாப்பின் கீழ் எந்தக் கட்டுப்பாடுமின்றி" தர வேண்டுமென்று புலிகள் கோரினார்கள். புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் கடற்பகுதியையும் இலங்கைக் கடற்படையின் கீழ் இருக்கும் கடற்பகுதியையும் பிரித்துக் காட்ட "துல்லியமான கடல் எல்லைகளை" வகுக்க வேண்டும் என்றும் கோரினார்கள்.

புலிகளுக்குக் கொடுக்க வேண்டியிருந்ததாக இந்த விவகாரம் அறிந்தவர்கள் குறிப்பிடுகிறார்கள். பெப்ரவரி 2004இல் டாக்டர் சூர்யநாராயண் யாழ்ப்பாணத்திற்குச் சென்றிருந்தபோது, இலங்கை மீனவர்கள் பருத்தித்துறைக்கு அருகிலுள்ள வியாபாரிமூலை, இன்பருட்டி ஆகிய இடங்களில் 27 இந்திய மீனவர்களையும் 5 ட்ரோலர்களையும் பிடித்திருப் பதாகச் செய்தி வந்தது.

இந்தக் காலகட்டத்தில், தமிழ் மீனவர்களின் நலனைக் காக்கும் வலிமை இலங்கைக் கடற்படைக்கு இல்லை என்று இலங்கைத் தமிழ் மீனவர்களி டையே பிரச்சாரத்தை முடுக்கி விட்டனர் புலிகள். "தமிழ் ஈழக் கடல் வளங்களும் மீனவர் கள் எதிர்கொள்ளும் பிரச்சினை களும்" என்ற தலைப்பில் நடந்த ஒரு கருத்தரங்கில் பேசிய இலங்கை மீனவ நிபுணரான டாக்டர் ஏ.சூசைஆனந்தன், "இந்திய ட்ரோலர்கள் வடபகுதிக்குள் நுழைந்து கடல் வளங்களை அள்ளிச் செல்லும்போது இதை வேடிக்கை பார்ப்பதன் மூலம் அவர்களுக்கு உதவுவதாக" இலங்கைக் கடற்படையின் மீது குற்றம் சாட்டினார். இலங்கைக் கடற்படையைப் பொறுத்தவரை இந்தியாவின் நட்புதான் முக்கியம் எனப் புலிகள் பிரச்சாரம் செய்தார்கள். இந்த விவகாரத்தை அமைதியாகத் தீர்க்க வேண்டும் என்றால், இதுபற்றித் தங்களுடன் நேர-டியாகப் பேசவேண்டுமென இந்தியாவுக்குப் புலிகள் சமிக்ஞை அனுப்பினார்கள். அப்படி நடந்திருக்கும் பட்சத்தில் அந்தப் பிராந்தியத்தில் மூன்றாவது கடற்படையாகக் கடற்புலிகளுக்கு அங்கீகாரம் கொடுத்தது போலாகியிருக்கும்.

• இலங்கை மற்றும் அந்நிய உளவுத்துறையினர் தந்த தகவல்களின் அடிப்படையில், புலிகளின் கடற்படையில் சுமார் 2000 முதல் 3000 வீரர்கள் இருந்திருக்கக் கூடும். தங்கள் படைத்திறனை அதிகரிப்பதற்காகப் பல ஆசிய, ஐரோப்பிய நாடுகளிலிருந்து புலிகள் பல அதிநவீன சாதனங்களை வாங்கிக் குவித்திருந்தனர். தங்களை ஒரு கடற்படையாக அங்கீகரிக்க வேண்டும் என்று கோரியதன் மூலம் புலிகள் இயக்கம் இந்திய, இலங்கை நாடுகளின் பாதுகாப்பிற்கே அச்சுறுத்தலாக உருவெடுத்தனர் என்கிறார் தென்னிந்தியக் கடலோரக் காவற்படையின் முன்னாள் தலைவரான கமடோர் வாசன்.

ஐஎஸ்பிஎஸ் (International Ships and Ports Security) சட்டத்தின்படி, ஒரு கப்பல் துறைமுகத்தில் நிறுத்த அனுமதி கோருவதானால், கப்பல் வருவதற்கு முன்பே அந்தக் கப்பலின் ஏஜண்டோ உரிமையாளரோ அந்தத் துறைமுக அதிகாரிகளுக்கு ஏகப்பட்ட தகவல்களை அளிக்க வேண்டியிருக்கும். கடற்புலிகளை ஒரு கடற்படையாக அங்கீகரித்தால், இலங்கையில் இருக்கும்

# இந்திய - இலங்கைக் கடற்பகுதியில் தம்மை மூன்றாவது கடற்படையாக அங்கீகரிக்கக் கோரினர் புலிகள்!



காலகட்டத்தில் புலிகளின் கடற்பிரிவான கடற்புலிகள் மிகவும் சக்திவாய்ந்த படையணியாக வலம் வந்தனர். மன்னார் தீவு, யாழ்ப்பாணத்திலிருந்து தள்ளியிருந்த சில தீவுப் பகுதிகளைத் தவிர, பாக்கு நீரிணையை ஒட்டி மீதமிருந்த இலங்கைக் கடற்பகுதி முழுவதும் கடற்புலிகளின் கட்டுப்பாட்டில்தான் இருந்தது. அவர்கள் பயிற்சி முகாம் நடத்திவந்த நாச்சிக்குடா வரை இதற்குள் அடக்கம்.

இதையடுத்து புலிகள் கடற்படைக்கான அந்தஸ்தைக் கோரினார்கள். புலிகளின் இடைக்கால நிர்வாகத் திட்ட வரைவு "அருகிலுள்ள கடற்பகுதியின் வளங்கள் மீதான கட்டுப்பாடு, அவற்றை முறைப்படுத்தும்" அதிகாரத்தை யும் கோருவதாகக் குறிப்பிட்டி ருந்தது. இந்தியப் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகராக இருக்கும் எம்.கே.நாராயணன்,

பாக்கு நீரிணை புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோது, தமிழக மீனவர்களுக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் நான்கு மோதல்கள் நடந்திருக் கின்றன. 2002 செப்டம்பர் 18ஆந் திகதி பேசாலையைச் சேர்ந்த மீனவர்கள் 105 இந்திய மீனவர்களையும் 25 மீன்பிடிப் படகுகளையும் பிடித்து வைத்துக் கொண்டார்கள். 2003 ஜனவரி 1ஆந் திகதி யாழ்ப் பாணம் மீனவர்கள் பூநகரி அருகில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 36 இந்திய மீனவர்களைப் பிடித்துக் கொண்டார்கள். 2003 டிசம்பர் 1ஆந் திகதி 32 இந்திய மீனவர்களையும் எட்டு ட்ரோலர்களையும் மன்னாருக்கு அருகில் உள்ள விடத்தல்தீவில் புலிகள் பிடித்தார்கள்.

மீனவர்களையும் ட்ரோலர் களையும் விடுவிக்க இந்திய மீனவர்கள் பெருந்தொகையைப்

பல துறைமுகங்களும் பல கடல் வழிகளும் இந்தியாவிலும் அமெரிக்காவிலும் தடை செய்யப்பட்ட ஒரு இயக்கத்தின் கைகளில் போய்ச் சேரும்.

"சட்டத்தைச் செயல்படுத்தும் அமைப்பு" என்ற பெயரில் எதை வேண்டுமானாலும் புலிகள் தங்கள் துறைமுகத்திற்குக் கொண்டு வர முடியும். இலங்கைக் கடற்பகுதி "கடல் போக்குவரத்திற்கு மிகவும் அபாயகரமான இடமாகிவிட்டதாக" 1997 செப்டம்பர் வாக்கிலேயே மாரிடைம் இன்டலிஜென்ஸ் அண்ட்கவுண்டர் பைரசி ஒபரேசன்ஸ் சென்ரர் ஓர் எச்சரிக்கை விடுத்தது.


உலகில் கடற்கொள்ளை நடக்கும் கடற்பரப்புகளில் இலங்கைக் கடற்பகுதி ஐந்தாவது இடத்தை வகிக்கிறது. ஆனால் தற்போது புலிகள் இயக்கம் இராணுவரீதியாகத் தோற்கடிக்கப்பட்டுவிட்ட நிலையில் இந்தத் தாக்குதல்கள் குறையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**(இந்தப் பத்தி, வி.சூரியநாராயணன், கே.முரளீதரன் ஆகியோர் கூட்டாக எழுதி, காலச்சுவடு பதிப்பகத்தின் வெளியீடாக வந்துள்ள 'கச்சதீவும் இந்திய மீனவரும்' என்ற நூலில் உள்ள சில பகுதிகளாகும்.)**

# சினிமா சினிமா




▶ "தேன் கூடு" ஈழத்தமிழர்களின் படம். ஈழத்தமிழ் காதல் கதையில், இப்படம் உருவாகியிருந்தாலும், ஈழப் பிரச்சினையினையும் அலசியிருப்பதாக கூறப்படுகிறது. இப் படத்தை சமீபத்தில், இயக்குநர் மணிரத்னம், ஒரு பிரத்தியேக காட்சி பார்த்துள்ளார்.



▶ தற்போது தமிழில், "அன்னக்கொடியும், கொடிவீரனும்", "பரதேசி", "தாண்டவம்" என மெகா படங்களுக்கு இசை அமைத்து வருகிறார் ஜி.வி. பிரகாஷ். இருப்பினும் ஹிந்தி சினிமா ஆசை, அவரை விட்டபாடில்லை. தனது மாமனார் ஏ.ஆர்.ரஹ்மான் போல உலக அளவில் செல்வதற்கு, முதலில் மும்பையில் கால் வைக்க வேண்டும் என்று துடிக்கிறார். அடிக்கடி மும்பை சென்று, சில இயக்குநர்களைச் சந்தித்து, சான்ஸ் கேட்டு வருகிறார்.



▶ மிஷ்கின் இயக்கத்தில் ஜீவா நடித்து வரும், "முகமூடி"யில் ஒரு சண்டைக் காட்சியை, நடனம் ஆடுவது போல, புதுமையான முறையில் படமாக்கி உள்ளனர். இந்த சண்டைக் காட்சியை அமைத்திருப்பவர், டனிலங்ஹீஹஸ் என்ற ஹொலிவுட் சண்டைப் பயிற்சியாளர். புரூஸ்லீ, ஜாக்கிசான் போன்ற நடிகர்களின், ஆஸ்தான ஸ்டன்ட் மாஸ்டரும் இவரே.




▶ எஸ்.ஏ.சந்திரசேகரன் இயக்கத்தில் விஜயகாந்த் நடித்த "சட்டம் ஒரு இருட்டறை" படம் அதே பெயரில் ரீமேக் செய்யப்படுகிறது. நடிகர் விஜய் தயாரிக்கும் இந்தப் படத்தில் பிரபுவின் மகன் விக்ரம் கதாநா யகனாகவும் ராதாவின் மகள் கார்த்திகா கதா நாயகியாகவும் நடிக்க ஒப்பந்தமானார்கள். பெண் இயக்குநர் சினேகா படத்தை இயக்குவார் எனக் கூறப்பட்டது. கடைசி யில், இயக்குநர் என சினேகா பெயரைப் போட்டுவிட்டு படத்தை எஸ்.ஏ.சி.யே இயக்க ஆரம்பித்து விட்டாராம்.

# வைனில் தயாரித்த உடை!



அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த சில புதுமை விரும்பி விஞ்ஞானிகள், போதை தரும் வைனில் தயாரான உடையை வடிவமைத்துள்ளனர். பெரிய கொப்பரையில், போதை தரும் வைனை ஊற்றி, அதில், "அசேடாபாக்ரர்" என்ற பற்றீரியாவை கலக்கின்றனர். இதையடுத்து, அந்த வைன், நுரை ததும்பிய கெட்டியான திரவமாக மாறி விடுகிறது. இந்த திரவத்தை மேலும் பக்குவப்படுத்தி, மேலும், சில இரசாயனப் பொருட்களை சேர்த்து, மென்மையான நூலிழைகளாக அதை மாற்றி விடுகின்றனர். இதைத் தொடர்ந்து, நாம் விரும்பும் வடிவத்தில், அதை மாற்றி, ஆடைகளாக தயாரிக்கின்றனர். இந்த புதுமையான உடை-களை வடிவமைக்கும் பணி, இன்னும் முழுமையடையவில்லை என்றாலும், சோதனை ரீதியான உடை தயாராகி விட்டது. சமீபத்தில், ஒரு இளம் பெண்ணுக்கு, இந்த உடைகளை அணிவித்து அழகு பார்த்தனர். வைனே போதை தரும் விஷயம். இதில், வைனில் தயாரிக்கப்பட்ட உடை எப்படி இருக்கும் என்று கேட்கவும் வேண்டுமா. இந்த புதுமையான உடை தயாராவதற்கு முன்னரே, அதை வாங்குவதற்காக, ஏராளமான இளம் பெண்கள், முன்பதிவு செய்து வருகின்றனர்.






# பருவ நிலை மாற்ற ஆய்வும் விலங்குகளும்



அழிந்துவரும் உயிரினங்களில் பருவ நிலை மாற்றத்தின் தாக்கம் குறித்து அறிய ஓநாய்கள் உதவும் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். இது தொடர்பாக, அமெரிக்காவின் எல்லோஸ்டோன் தேசியப் பூங்காவில் ஓநாய்களின் எண்ணிக்கை குறித்து விஞ்ஞானிகள் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது, மாறிவரும் பருவ நிலை எவ்வாறு ஓநாய்களின் எண்ணிக்கை, உடல் அளவு, மரபணுவியல் மற்றும் பிற உயிரியல் அம்சங்களில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்று அறிவதற்கான ஒரு வழியைக் கண்டுபிடித்தனர். அதன்படி, எந்த மாதிரியான பருவ நிலை மாற்றம், விலங்குகளின் எண்ணிக்கையிலும், அவற்றின் பரிணாமத்திலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்று தங்களால் கணிக்க முடிகிறது என்கிறார்கள் ஆய்வாளர்கள். தற்போது கிடைத்திருக்கும் முடிவுகளைக் கொண்டு, எதிர்காலத்தில் பருவநிலை மாற்றத்துக்கு ஏற்ப ஓநாய்களின் எண்ணிக்கை எவ்வாறு மாறும் என்று அறிந்து, அது குறித்து வன உயிரினக் காப்பாளர்களுக்குத் தெரிவிக்க முடியும் என்பது விஞ்ஞானிகளின் நம்பிக்கை. சுற்றுச் சூழல் மாறுபாட்டால் உயிரினங்களின் உடல் அளவு, எடை போன்றவற்றில் ஏற்படும் சிறுசிறு மாற்றங்களும் எதிர்காலத்தில் அந்த உயிரினத் தொகுப்பில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடும் என்று கருதப்படுவதால் இந்த ஆய்வு மிக முக்கியமானதாக கருதப்படுகிறது.

# குண்டு மணப்பெண்!



அமெரிக்காவின் அரிஸோனாவைச் சேர்ந்த பெண் சுசன்னே இமான். வயது: 33. இவருக்கு ஒரு வித்தியாசமான, விபரீதமான ஆசை. உலகின் மிகப் பெரிய, "குண்டு மணப்பெண்" என்ற பெருமை, தனக்கு கிடைக்க வேண்டும் என்பது தான், அந்த ஆசை. அதற்காக, இப்போது அவர், மெல்லிடை கொண்ட பெண்ணாக இருப்பார் என, கற்பனை செய்து விட வேண்டாம். தற்போது அவரது உடல் எடை, 245 கிலோ. திருமணத்தன்று, தன் எடையை, குறைந்தது, 310 கிலோ அளவுக்கு அதிகரித்து விட வேண்டும் என்பதே, இவரது இலட்சியம்.

திருமணத்தன்று, தான் அணியப் போகும் மணப்பெண் உடை, இதுவரை உலகில் வேறு எந்த மணப்பெண்ணும் அணியாத அளவுக்கு மிகப் பெரிய உடையாக இருக்க வேண்டும் என்பதும், இவரது ஆசை. குண்டாக வேண்டும் என்பதற்காக, தினமும், 30 ஆயிரம் கலோரி உணவுகளை, ரைஸ்மில்லிற்குள் தள்ளுவது போல், வாய்க்குள் போட்டு, அரைத்துத் தள்ளுகிறார். பாண், கேக், இறைச்சி, பழம், காய்கறிகள் என, கண்ணில் பார்ப்பதை எல்லாம், வாங்கி சாப்பிட்டு வருகிறார். உடல் எடையை, அளவுக்கு அதிகமாக அதிகரித்தால், உயிருக்கு ஆபத்து ஏற்படும் என, டாக்டர்கள் எச்சரித்தும் கூட, அதை இவர் பொருட்படுத்தவில்லை. இவர், திருமணம் செய்யப்போகும் அதிர்'டசாலி கணவர் பார்கர் கிளார்க் என்ற பிரபலமான சமையல் நிபுணர். "எனக்கு பொருத்தமான கணவரைத் தான் தேர்வு செய்துள்ளேன். அவர், சமைத்துப் போட்டுக் கொண்டே இருப்பார், நான் சாப்பிட்டு கொண்டே இருப்பேன். கொண்டாட்டம்தான்..." என்கிறார் இமான்.

# காணி சுவீகரிப்பு தீர்வு என்ன?




- நன்றி: வானவில் 18

வடபகுதியில் இலங்கை இராணுவத்தினரின் காணி சுவீகரிப்புக்கு எதிரான போராட்டம் அண்மையில் பலரது கவனத்தை ஈர்த்துள்ளது. வலிகாமம் வடக்கில் காங்கேசன்துறை மற்றும் பலாலியை சுற்றியுள்ள பல கிராமங்களில் மக்கள் மீளக்குடியேறுவதற்கு இன்னமும் அனுமதிக்கப்படவில்லை. இவ்வாறு மீளக்குடியேறுவதற்கு அனுமதிக்கப்படாத மக்களில் ஒரு பகுதியினரை முன்னிறுத்தியே தமிழ் அரசியல்வாதிகளால் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் தனியார் காணிகளை, குடியிருப்புகளை அபகரிக்கிறார்கள் என்பதோடு நிறுத்தாது, வழமைபோலவே தமிழ் அரசியல்வாதிகள், தமிழ் மக்களின் சொத்துக்களை பௌத்தகுருமாரும் சிங்களவர்களும் சேர்ந்து அபகரிக்கிறார்கள் என்ற பாணியிலே பேசியும் அறிக்கைகளை விட்டுக் கொண்டும் இருக்கிறார்கள். அத்தோடு இலங்கை இராணுவத்தினர் தனியார் காணிகள் மற்றும் குடியிருப்புகளிலிருந்து வெளியேற வேண்டுமென்று கோரி சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்குதல் செய்வோமென மிரட்டல்களும் விடுத்துள்ளார்கள்

யாழ். குடாநாட்டில் இராணுவத்தின் இன்றைய நிலையரங்குகளை விளங்கிக்கொள்வதற்கு வரலாற்றைக் கொஞ்சம் பின்னோக்கிப் பார்க்க வேண்டும். இலங்கை இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் கடுமையான யுத்தம் மூளுவதற்கு முன்னர் யாழ் குடாநாட்டில் ஏறத்தாழ 12 இலட்சம் மக்கள் மிகவும் நெருக்கமாகவும் செறிவாகவுமே வாழ்ந்தார்கள். அப்போது சில ஆயிரக்கணக்கான இராணுவத்தினரே யாழ். குடாநாட்டில் இருந்தார்கள். இராணுவத்தினர் விரும்பியிருந்தால் கூட சுவீகரிப்பதற்கு, யாழ். குடாநாட்டில் மக்களற்ற தனியார் குடியிருப்புகளென அப்போது எதுவுமே இருக்கவில்லை.

1983 ஆண்டிலிருந்து 2009 ஆண்டுவரையான காலப்பகுதியில் இலங்கை இராணுவத்துக்கு புலிகளை எதிர்கொள்வதற்கு பலமடங்கு பலம் தேவைப்பட்டது. இதனால் இராணுவத்தினரின் எண்ணிக்கை ஏறத்தாழ நாற்பதினாயிரமாக உயர்ந்தது. ஆனால் இவ்வளவு தொகையான இராணுவம் முகாமிட்டிருப்பதற்கு பலாலி, காரை நகர், யாழ். கோட்டை முகாம்கள் போதுமானதாக இருக்கவில்லை. இதனால்தான் வெறுமையாகக் கிடந்த காணிகளை, குடியிருப்பாளர்கள் இல்லாத ஆயிரக்கணக்கான வீடுகளை இராணுவம் பயன்படுத்தத் தொடங்கியது.

யுத்த காலப்பகுதியில் குறைந்தது 5 இலட்சம் மக்களாவது யாழ். குடாநாட்டைவிட்டு வெளியேறியிருப்பார்கள். பெருமளவிலான மக்கள் வெளியேறியதாலும், யுத்தம் காரணமாகவும் யாழ். குடாநாட்டில் இயல்பான சனத்தொகைப் பெருக்கமும் நிகழவில்லை. இதனால் தற்போது யாழ்ப்பாணம் நகரத்தை அண்டியுள்ள பகுதிகளை தவிர, யாழ். குடாநாட்டின் ஏனைய பகுதிகளில், 25வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலைமையுடன் ஒப்பிடுகையில், மக்களின் பிரசன்னம் மிகவும் குறைந்தே காணப்டுகிறது.

10 வருடங்களுக்கு முன்னர் மீளக்குடியேறுவதற்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளில், பல ஆயிரக்கணக்கான மக்கள் குடியிருப்புகள் இன்னமும் திருத்தப்படாமல் தூர்ந்த நிலையிலேயே உள்ளன. திருத்தப்படாத பெரும்பாலான இந்த மக்கள் குடியிருப்புகளின் உரிமையாளர்கள் இலங்கையைவிட்டு நிரந்தரமாக வெளியேறிவிட்டார்கள் என்பதே இதற்கு காரணம்.

உரிமையாளர்களால் மீளளிக்குமாறு கோரப்படாத, இத்தகைய தனியார் குடியிருப்புகளிலே இராணுவமும் இன்னமும் நிலை கொண்டுள்ளது. இலங்கை இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் யுத்தம் முடிந்து 3 வருடங்கள் முடிவுற்ற நிலையில் போர்க்குற்றங்களுக்கும், பல சர்வதேச அழுத்தங்களுக்கும் உட்படுத்தப்பட்டுள்ள இலங்கை அரசு, அவ்வப்போது தமிழ் அரசியல்வாதிகளால் தூண்டிவிடப்படுகின்ற இவ்வாறான போராட்டங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

புலி இயக்கம் மீண்டும் உருவாகலாமென கூறியும் வேறு பல பாதுகாப்பு காரணங்களைக் காட்டியும், நீண்டகாலம் மக்கள் குடியிருந்த பகுதிகளில் இராணுவம் நிலை கொள்ளமுடியாது. புலி போன்றதோர் இயக்கம் மீண்டும் உருவாகாமலிருக்க, இனப்பிரச்சினை முளைவிடுவதற்கு காரணமாக அமைந்த அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காண்பதே, இராணுவத்தை பெருமளவில் நிலைகொள்ள செய்வதை விடவும் பாதுகாப்பானது. குறிப்பாக யாழ். குடாநாட்டில் படிப்படியாக 1983 ஆண்டிற்கு முன்னர் இருந்த நிலையரங்குகளுக்கு இராணுவம் செல்லவதைத் தவிர வேறு வழியில்லை.

முழு இலங்கையையும் பொறுத்தவரையில், பலாலி இராணுவ முகாம் என்பது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுவதால், பலாலியை சுற்றியுள்ள கிராமங்களை இராணுவம் ஒருபோதும் மீளக்கையளிக்காது என்ற கருத்தே நிலவுகின்றது. ஆனால் அந்த கிராமங்களில் காலங்காலமாக வாழ்ந்த பெருமளவிலான மக்கள் மீளக்குடியமர விரும்பினால், அவற்றினையும் மீளக்கையளிக்க இலங்கை இராணுவம் முன்வர வேண்டும்.

# நீரிழிவு நோயாளிகளுக்கு காயங்கள் ஏன் ஆறுவதில்லை?

நீரிழிவு வியாதிக்காரர்களுக்கு புண்களோ, காயங்களோ ஏற்பட்டால் விரைவில் ஆறாமல் போவதற்கு என்ன காரணம்? பொதுவாகவே நீரிழிவு வியாதிக்காரர்களின் இரத்தத்தில் சீனியின் அளவு அதிகமாகவும் அதிக நாட்களாகவும் இருந்தால் நுண்ணிய மெல்லிய, சிறிய, பெரிய என இரத்தக் குழாயில் பல விதமான பாதிப்புகள் ஏற்படக்கூடும். இதனால் நரம்புகள் சிறுநீரகங்கள், கண்கள் ஆகிய உறுப்புகள் பாதிப்படைகின்றன.

இதில் பெருமளவு பாதிக்கப்படுவது நரம்புப்பகுதிகளே. தொடு உணர்வு, அழுத்துகின்ற உணர்வு, வெப்பமானது எது? குளிர்ச்சியானது எது? என அனைத்துவிதமான உணர்வுகளையும் நமக்கு உணரச் செய்யும் நரம்புப் பகுதிகள் பாதிக்கப்படுவதால் நீரிழிவு வியாதிக்காரர்கள் உணர்விழந்த நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இதனால் அனைத்து விதமான உணர்வுப் பாதிப்புகளும் ஏற்பட ஆரம்பிக்கிறது. எனவேதான் நீரிழிவுக்காரர்களின் காலில்...சிறிய கல்லோ, முள்ளோ குத்தி காயங்கள் ஏற்பட்டால் கூட வலியும் பாதிப்பும் உணர முடியாமல் போய் விடுகிறது. மேலும் இரத்தக் குழாயில் பாதிப்பு ஏற்பட்டு கால் பாதங்களுக்குப் போதுமான இரத்தம் செல்லாமல் தடைப்பட்டு நிற்கும். இதனால் தான் சிறிய காயம் ஏற்பட்ட நீரிழிவுக்காரருக்கு அதிகளவு சீனி இரத்தத்தில் இருப்பதால் கிருமி தயக்கமின்றி உள்ளே நுழைந்து உடனடி தாக்குதலுக்கு ஆளாகின்றார்கள்.

அத்தோடு நீரிழிவு வியாதிக்காரர்களுக்கு நோய் எதிர்ப்புத் திறன் குறைந்து கொண்டே இருப்பதால் சிறிய காயம் ஏற்பட்டாலும் கூட கிருமிகளின் பாதிப்பு அதிகமாகி காயத்தையும் விரைவில் ஆறவிடாமல் செய்து விடுகிறது. இந்தப் பாதிப்பு ஆரம்பத்தில் நீரிழிவுக்காரர்களுக்கு உணர முடியாமல் இருந்தாலும் "காலை"யே வெட்டி எடுக்கக்கூடிய அளவுக்கு கொண்டு போய் விட்டு விடும். எனவே, நீரிழிவுக்காரர்கள் அவரவர்களுக்கு மருத்துவர் வழங்கிய ஆலோசனையின்படி உணவுக்கட்டுப்பாடு, உடற்பயிற்சி என இரத்தத்தில் சீனியின் அளவு அதிகரிக்காமல் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டால் பிரச்சினை இல்லை. எனவேதான் நீரிழிவுக்காரர்கள் சிறிய புண்ணோ காயங்களோ ஏற்பட்டால் மருத்துவரை அணுகி ஆலோசனை பெற வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றனர்.



- டாக்டர் எம். சண்முகவடிவேல் -

# கலங்கிய நதி

**பி.ஏ.கிருஷ்ணன்** எழுதிய இரண்டாவது நாவல் கலங்கிய நதி. (முதல் நாவல் புலிநகக் கொன்றை) இதை எழுதிய நாவல் என்பதா அல்லது மொழிபெயர்த்த நாவல் என்பதா என்ற குழப்பம் எப்போதும் நிலவுவது தான். காரணம் பி.ஏ.கிருஷ்ணன் முதலில் ஆங்கிலத்தில் எழுதி அந்த நாவல் பெங்குயின் போன்ற பதிப்பகங்களில் வெளிவந்த பிறகு அவர் நாவலை அவரே தமிழில் எழுதியது தான் வெளி வருகிறது.

நாவல் ஆரம்பித்து நான்கைந்து பக்கங்கள் போனவுடன் நாவலிலிருந்து இன்னொரு நாவல் விரிகிறது. கதையின் நாயகன் எழுதும் அவனின் சுயசரிதை போன்ற ஒரு நாவலிலிருந்து கதை விரிகிறது. அதாவது நாவலுக்குள் நாவல். கதைக்குள்கதை என்ற போஸ்ட் மாடர்னிச தன்மையில நாவல் தன்னை எழுதிக்கொள்கிறது.

ஒருவரிக் கதையாகச் சொல்ல வேண்டும் என்றால் மின்வாரியப் பொறியாளர் ஒருவரை அஸாம் தீவரவாதிகள் கடத்திச் சென்று, பிணைக்கைதியாக வைத்து பணம் கேட்கிறாரகள். அவரை மீட்கச் செல்கிறார் நாயகன்.

இதுதான் நாவலின் மையம். இந்த மையத்தை அவ்வப்போது கலைத்து அவரின் சுயவரலாற்றுத் தகவல்களும இடைஇடை வருவதும், ஒன்று விளிம்புக்குத் தள்ளுவதும், மற்றொன்றை மையத்திற்குத் தள்ளுவதுமான ஆட்டம் ஒன்று நாவல் முழுக்கத் தொடர்கிறது.

பின் நவீனத்துவ நாவலின் கூறுகள் கொண்டிருப்பதால் கிட்டத்தட்ட அவற்றின் சாயலில் இது ஒரு துப்பறியும் நாவல் பாணியிலும் எழுதப்பட்டுள்ளது. அதாவது எளிமையான வாசிப்பிற்கு உகந்த எளிமையான நடை. வாசிப் பில் ஆனந்தம் கொள்கிற வகையில் அமைந்த எளிமையான வரிகள். வாசகனை மிரட்டும் தன்மையில் எதுவும் அமையாமல் கவனமாக நாவலின் போக்கைக் கையாள்கிறார் கிருஷ்ணன்.



நாவலின் மையப் பாத்திரம் ஒரு மின்வாரிய அதிகாரி. அவனின் செயறபாடுகள் ஒரு நேர்மையான அதிகாரியைப் போல உள்ளது. அதற்குக் காரணம், அவன் குடும்பத்தில் அவன் அப்பா ஒரு காந்தியவாதி. அவரைப் போலவே மகன் வளர்க்கப்படுவதால் அந்தக் குணங்கள் மகனின் நடவடிக்கைகளில் தெரியத் தொடங்குவதாக நினைக்கத் தோன்றுகிறது.

தமிழகத்தின் ஒரு கிராமத்தில் வசிககிற அவனின் அப்பா டெல்லியில் வந்து காந்தி சமாதியைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலை வெளிப்படுத்துவதும், அதை நிறைவேற்றிக் கொள்வதும் நாவலின் போக்கில் ஒரு முக்கியமேயில்லாத ஒரு சம்பவமாகத்தான் பதிவாகிறது.

ஆனால் நாவல் முடிந்தபின் நாம் யோசித்துப் பார்த்தால் நாவல் முழுவதும் அந்தக் காந்திய வாதியின் மகன் செய்யும் ஒவ்வொரு நடவடிக்கையை யும் இணைத்துப் பார்த்தால் ஒரு மைய இழை நாவலின் எல்லாப் பக்கங்களையும் இணைக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

ஒரு சாதாரண துப்பறியும் நாவலின் தோற்றத்தில், வடிவத்தில் இருக்கிற நாவலில் எங்கேயிருந்து காந்தி வந்தார் என்கிற கேள்வி எழலாம். ஆனால் யோசித்துப் பார்த்தால் இந்த உண்மை நாவலின் போக்கில் அல்லது இந்தத் தோற்றத்தின் எளிமையில் மிகத் திட்டமிட்டு நாவலின் ஆசிரியர் மறைத்து வைத்திருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ளலாம். கலங்கிய நதி என்கிற கொட்டேஷன் காந்தியின் வாயிலிருந்து உதிர்ந்தவை.

ஒரு சாதாரண மின்வாரிய அதிகாரி முதலமைச்சரை எளிதில் சந்திப்பதும் அவரோடு கருத்து முரண்பாடுகள் கொள்வதும், போலவே மத்திய அமைச்சரைச் சந்தித்து உரையாடுவதும் அவரோடும் கருத்து முரண்கொள்வதும், வாரியத்தை ஏமாற்றிய மிகப் பெரிய ஒப்பந்தக்காரரை எதிர்த்து போர்க்கொடி உயர்த்துவதும், துறையின் மிக உயர் அதிகாரிகளோடு ஒத்துப்போகாமல், பிடிவாதமாக, அதுவும் ஒற்றைக் குரலில் எதிர்த்து நின்று அவர்களைப் பணிய வைப்பதும் நியாயத்தின் பக்கத்தில், அறத்தின் பக்கத்தில் நிற்கிற தோற்றத்தை உருவாக்குகிறது.

ஆனால் மொத்தமாக யோசித்தால் ஒரு பெரிய கடத்தல் கும்பலிடம் தனியொருவனாகச் சந்தித்து அதிகாரியை மீட்டு வருவதாகட்டும், அமைச்சர்கள், அதிகாரிகள், ஒப்பந்ததாரர்களோடு போராடுவதாகட்டும் இவற்றின் பின்னணியில் கதாநாயகனின் பிடிவாதம் தான் வெற்றி பெற வைக்கிறது.




இந்தப் பிடிவாதம் காந்தியின் பிடிவாதம்.. சாதாரண ஒருவன் இவ்வளவு பெரிய காரியங்களைச் செய்ய முடியுமா என்கிற கேள்வி எழும்போது தான், அவன் ஒரு சாதாரணன் இல்லை. அவன் ஒரு அசாதாரணன். அந்த அசாதாரணம் அவன் அப்பாவின் வளர்ப்பில் அவனுக்கு பாரம்பரியமாக வருவது. ஒரு எளிமையான பக்கிரி வெள்ளையர்களைத்தன் பிடிவாதத்தினால் வெற்றிகொள்ள முடிந்த அதே போர்முலாவைதான் இவனும் நாவல் முழுக்கக் கையாள்கிறான். அதனால்தான் அவன் ஒரு கட்டத்தில் தோற்றபோதுகூட பிறர் அவனுக்கு துணையாக நிற்கிறார்கள் என நினைக்க வைக்கிறது. (அதுவரை அவனை வெறுத்தவர்கள்கூட)

அந்தப் பிடிவாதத்தின் தன்மை

**- சிபிச்செல்வன்**

யால் பொய்மைகள் அவனிடம் தோற்றுப்போகிறது. அதாவது காந்தியின் முன் அவ்வளவு பெரிய வல்லரசு தோற்றுப்போய் அவரின் நெருக்கடிகளை ஒரு கட்டத்தில் தாங்க முடியாமல் சுதந்திரம் கொடுத்துவிட்டு போவது போலவே. இந்த நாவலிலும் நிகழ்ச்சிகள் மிகக் கச்சிதமாகத் திட்டமிட்டு அமைக்கப்பட்டுள்ளது.

நாவலில் வருகிற ஏராளமான ஆங்கில கவிதைகளின் சிலாகிப்புகள் கொஞ்சம் தமிழில் துருத்திக் கொள்வதாகவும், சமயத்தில் எரிச்சல் கொள்ளவும வைககிறது. அது போலவே பறவைகளின் விவரணைகள் கூட அப்படித் தான் நிற்கிறது.

நாவலின் பல இடங்களில் கிருஷ்ணனின் intelectual brillience பளிச், பளிச் எனத் தெரிகிறது. கிருஷ்ணனின் கட்டுரைகள் திரும்ப இடம்பெற்றிருக்கிறது அல்லது அந்தக் கட்டுரைகளின் சாயலகள். அல்லது கிருஷ்ணன் ஏற்கனவே கூறியது திரும்ப வருகிறது. இது வாசகர்களுக்குக் கொஞ்சம் எரிச்சல் ஏற்படுத்தும். அப்படி நேரும். நேர்ந்திருக்கிறது.

ஆம் கட்டுரைகள் நாவலின் இடை இடையே அமைவது பின்நவீனத்துவ நாவலின் கூறுகள்தான். ஆக, கிருஷ்ணன் திட்டுமிட்டுதான் இந்த போஸ்ட் மாடர்னிச துப்பறியும் பரபரப்பான நாவலை எழுதியிருக்கிறார் என்பது வலுவாக உறுதியாகிறது.

மொத்தத்தில் இந்த நாவல் கையில் வாசிக்க எடுத்தால் பரபரப்பாக வாசிக்க முடிகிறது. தொடர்ந்து மூன்று மணி நேரத்தில் வாசித்துவிட்டு தான் கீழே வைக்க முடிந்தது. இது தான் இந்த நாவலின் பலம். இந்த நாவலின் வேகம்தான் பலம். காந்தியை நம் சமூகம் வேகமாக மறந்து கொண்டு வருகிறவேளையில், மறக் கடிக்கப் படுகிற சூழலில் காந்தியின் சாயலில் வருகிற இந்த மூன்றாவது காந்தி கொஞ்சம் நாள் வாசகர்களின் நினைவில் வாழ்வார். இதை இந்த நாவலின் வெற்றி தீர்மானிக்கிறது. நாவல் முழுவதும் காந்தி நாமத்தின் வாசனை வீசுகிறது. அது இந்த பிரபஞ்சம் முழுவதும் ஆட்கொள்ளட்டும்.



பி.ஏ.கிருஷ்ணன்

**க**லங்கிய நதியின் முதல் வரைவை நான் 2002ஆம் ஆண்டே எழுதி முடித்து விட்டேன். திரும்பப் படித்த போது மிகவும் ஏமாற்றமாக இருந்தது. மாற்றங்கள் பல செய்ய வேண்டும் என்ற எண்ணம் எழுந்த போதிலும் சில சொந்தக் காரணங்களினால் என்னால் நாவலின் பக்கம் போக முடியவில்லை. வேலைப்பளு வேறு. 2009ஆம ஆண்டு திரும்ப வந்தேன். செப்டம்பர் மாதம், பதினைந்து நாட்களில் செய்ய நினைத்த மாற்றங்களைச் செய்தேன்.

நான் எழுதிய ஆங்கில நாவலின் தமிழ் வடிவத்தை நானே கொண்டு வருவதால் பல சுதந்திரங்களை எடுத் துக் கொள்ள முடியும் என்பதில் ஐயம் இல்லை. தமிழ் என் தாய் மொழி. என்னுடைய தந்தையின் காலடியில் அமர்ந்து கற்றமொழி.

**The Muddy River** நாவலின் கதையமைப்பு சிறிது சிக்கலானது. அந்தக் கதையை எனக்கு அலங்காரங்கள் அதிகம் செய்யாமல் கொடுக்க வேண்டிய கட்டாயம் இருப்பதாக நினைத்தேன். அதனால் ஆங்கிலத்தில் எழுதும் போது மொழி விஷயத்தில் மிகவும் கவனமாக இருந்தேன். இப்படி எழுதியிருக்கும்போதே நான் மிகவும் கடினமான மொழியில் எழுதியிருக்கிறேன் என்று சிலர் சொல்கின்றனர். தம்பி இரா.முருகன் ஆங்கில வடிவம் தமிழை விட நன்றாக வந்திருக்கிறது என்று சொல்கிறார். எனக்கே அப்படித்தான் தோன்றுகிறது.

**மொழியைக் கையாளுவதைப் பற்றி இரு உதாரணங்கள்:**

'அவளது முகம் அடுத்தது காட்டும் பளிங்கு அல்ல.' என்றால் தமிழ் தெரிந்தவனுக்கு திருக்குறள் உடனே நினைவு வரும். இதை 'Her face is not a mirror that reflects' என்று ஆங்கிலத்தில் எழுதினால் வாசகனிடம் எந்தச் சலனத்தையும் ஏற்படுத்தாது. இதைப் போன்று ஆங்கிலத்தில் 'In the novel, I simper over my husband's little gifts. I keep thanking him for having me as his wife.' என்ற வாக்கியங்களைப் படித்தால் ஆங்கிலம் பயின்றவர்களுக்கு ஷேக்ஸ்பியரின் ஒத்தெல்லோ நினைவிற்கு வரும். இவற்றின் தமிழ் வடிவம்: 'என் கணவன் கொடுக்கும் சிறிய பரிசுகளால் நான் பூரிப்பு அடைகிறேன். அவன் என்னை மனைவியாக ஏற்றுக் கொண்டதற்காக தினமும் (மனதால்) நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறேன்.' இந்த வாக்கியங்கள் தமிழ் வாசகர்களை நிமிர்ந்து உட்கார வைக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை.

ஆங்கிலத்தில் வார்த்தைகள் அதிகம். ஒரே வார்த்தையைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் இல்லை. தமிழில் வார்த்தைத் தட்டுப்பாடு. அது எனது தமிழ் அறிவுக் குறைவால் விளைந்ததாக இருக்கலாம். நாவலில் வரும் சில தொழில்நுட்பம் தொடர்பான சொற்களை தமிழில் கொண்டுவருவது மிகவும் கடினமாக இருந்தது. ஆங்கிலத்தில் முதலில் எழுதி முடித்ததால் தமிழில் நகாசு வேலை செய்ய முடிந்தது. தமிழிலும் எளிய மொழியில் எழுத முயன்றிருக்கிறேன்.

ஆங்கிலத்தில் நன்றாக எழுதுபவன் என்ற பெயரை விட தமிழில் நன்றாக எழுதுபவன் என்ற பெயர் எனக்கு வாசகர்கள் மத்தியில் கிடைத்தால் மிகவும் பெருமையாக இருக்கும். இதையே நான் பேசும் மேடைகளில் (கேட்பவர்களில் தமிழர்கள் குறைவாக இருந்தாலும்) சொல்லி வருகிறேன்.

கலங்கிய நதி ரமேஷ் சந்திரனின் வாழ்க்கையைப் பற்றிய நாவல். மற்றவர்கள் அனைவரும் (சுகன்யா உட்பட) அவனை மையமாகக் கொண்டே இயங்குகிறார்கள். ஆனால் நாவலில் சந்திரனுக்கே தெரியாத பல நிகழ்ச்சிகள் நேர்கின்றன. இதனால் நாவலில் வருபவர்கள் அவற்றைப் பற்றிப் பேசினால் நாவலுக்கு இன்னொரு பரிமாணம் கிடைக்கும் என்று நினைத்தேன். உதாரணமாக அனுபமாவைப் பற்றி சந்திரன் அதிகம் பேசுவதில்லை. அவளைப் பற்றிய ஒரு முழுச் சித்திரம் மற்றவர்கள் வாயிலாகவே கிடைக்கிறது. மேலும் நேசிப்பவர்களுக்கிடையே நெருக்கம் எந்த அளவிற்கு இருக்கிறதோ அந்த அளவிற்கு இடைவெளியும் இருக்கிறது. இது ஒருவருக்கு மற்றவர் மீது இருக்கும் அன்பைச் சிறிதளவும் குறைப்பதில்லை. ஆனாலும் அன்புடை நெஞ்சங்கள் தாங்கலந்தாலும் வானம் நீரை மீண்டும் இழுத்துக் கொள்கிறது. செம்புலம் உலர்ந்து விடுகிறது. வானம் மறுபடியும் பொழியும், நீர் திரும்பச் செம்புலத்தை வந்தடையும் என்ற நம்பிக்கையே இந்த நாவலின் மைய அச்சு. கதையின் இரு முக்கியமான பாத்திரங்களான சந்திரனும், சுகன்யாவும் இந்த நம்பிக்கையை வெவ்வேறு பாதைகளில் பயணம் சென்று சேர்ந்தடைகிறார்கள் அவர்களது பயணங்களைப் பற்றிப் பேசும் ஒரு சிறிய முயற்சியே இந்தவடிவம்.

# வேகமான வீதி அபிவிருத்தி விபத்துக்கள் அதிகரிப்பு



(கிரு-சிகரம்)

ஏ-9 வீதியின் புனரமைப்பு பணிகள் மிக வேகமாக நடைபெறுகின்றமை வரவேற்கப்பட வேண்டிய விடயம், இருப்பினும், இந்த வீதி அகலிப்பு பணியால் விபத்துக்கள் அதிகரித்துள்ளன.

321 கிலோ மீற்றர் நீளமுடைய யாழ். கண்டி வீதியின் (ஏ-9) புனரமைப்பு வேலைகளில் ஐம்பது சதவீதமானவை பூர்த்தியடைந்து விட்டதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுவரும், இந்த வீதி புனரமைப்பு பணிகளில் மீதமாக உள்ள புனரமைப்பு வேலைகள் 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதமளவில் பூர்த்தியடையும் என வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பேருந்தின் சாரதி ஒருவர், 'ஏ-9 வீதி அகலிப்புப்பணிகள் துரிதகதியில் நடைபெறுவது வரவேற்கத்தக்கது ஆனால், இதனால் விபத்துக்கள் அதிகரித்துள்ளது' என்று குறிப்பிட்டார்.

வீதியின் அகலிப்பு பணியின் போது வீதியின் இரண்டு பக்கங்களும், நிலத்திலிருந்து 05 மீற்றர் தொடக்கம் 15 மீற்றர் வரை உயர்த்தப்பட்டுள்ளதால், வீதியின் இருமருங்கும் பள்ளமாகக் காட்சியளிக்கின்றது. இதனால் ஒரு வாகனம் இன்னொரு வாகனத்திற்கு வழிவிடும் போது, சில கனரக வாகனங்கள் குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.


இதனை மாற்றுவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை கவனத்தில் எடுத்து செயல்படுத்த வேண்டும் என மற்றுமொரு சாரதி வேண்டுகோள் விடுத்தார்.

இந்த வீதி தொடர்பில் கருத்து தெரிவித்த துவிச்சக்கர வண்டி சாரதி ஒருவர், தற்போது ஏ-9 வீதி காப்பெற் வீதியாக மாற்றமடைந்து வருகின்றதால் சாரதிகள் அதிக வேகத்தில் பயணிக்கின்றமையால், வாகனங்கள் தமது வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதுவும் விபத்துக்கள் அதிகரிப்பதற்கு முக்கிய காரணம் என்றார்.இவற்றைத் தடுப்பதற்கு, வீதிகளில் வேகக் கட்டுப்பாட்டுத் தடுப்புகள் அல்லது சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்படுவது கட்டயமானது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த வீதி அகலிப்பால் நீண்டகாலமாக வீதியின் அருகே செழித்து வளர்ந்திருந்த பெரிய பெரிய மரங்களும் அழிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை பல வருடங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தின் மேற்கொள்ளப்படும் இந்த வீதி அபிவிருத்தி மூலம் தமக்கு சிறந்த போக்குவரத்து வசதி ஏற்பட்டுள்ளது என மக்கள் தெரிவிககின்றனர்.

இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தினால் ஏ-9 வீதி 1984 ஆம் ஆண்டு மூடப்பட்டு மீண்டும் 2002 பெப்ரவரியில் திறந்து வைக்கப்பட்டது. மீண்டும் ஆரம்பமான போராட்ட நிலைமைகளினால் 2006 ஒக்டோபரில் மூடப்பட்டதுடன் மீண்டும் மக்கள் பாவனைக்கென 2009 இறுதியில் திறந்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



# கிளிநொச்சி புதுமுறிப்புகுளம் 109.8மில். ரூபாவில் புனரமைப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி புதுமுறிப்புகுளம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் 109.8 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகிறது. கிளிநொச்சியில் காணப்படுகின்ற பெரிய குளங்களில் ஒன்றான இக்குளத்தின் பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போதைய புனரமைப்பு பணியின் மூலம் குளத்தின் அணைக் கட்டு இரண்டு அடி உயர்த்தப்பட்டு நீர் கொள்ளளவு, அதிகரித்த பயிர்ச்செய்கை பரப்பளவை அதிகரிக்கும் அதேவேளை நீர்ப்பாசன வாய்க்கால்களும் புனரமைக்கப்படவுள்ளது என கிளிநொச்சி பிராந்திய நீர்ப்பாசன திணைக்களத்தினர் தெரிவிக்கின்றனர். (29)

# போஷாக்கு சுகாதாரம் ஆசிரியர்களுக்கு செயலமர்வு

(பருத்தித்துறை)

போஷாக்கு சுகாதாரம் ஏச்.ஐ.வி எயிட்ஸ் தடுப்பு தொடர்பான வடமராட்சி வலய பாடசாலைஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 12,13,14 ஆம்திகதிகளில் புலோலி மெ.மி.த.க பாடசாலையிலுள்ள ஆசிரியவள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்விற்கு இடைநிலைப்பிரிவில் கல்வி கற்பிக்கின்ற விஞ்ஞானபாட ஆசிரியர் உடற்கல்வி,மனைப்பொருளியல், வழிகாட்டல் ஆலோ சனை, குடியுரிமைக்கல்வி மற்றும் பாடசாலை சுகாதார மேம்பாட்டில் அக்கறையுள்ள ஆசிரியர் ஒருவரும் மொத்தமாக இருவரை இச்செயலமர்வில் கலந்து கொள்ளச் செய்யுமாறு வடமராட்சி வலயக் கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப் பணிப்பாளர் இ.குட்டித்தம்பி அறிவித்துள்ளார். (109)

# கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கு மூன்று நாள் வதிவிடச்செயலமர்வு

(பருத்தித்துறை)

கோட்டக்கல்வி அலுவலர்களுக்கும் முகாமைத்துவ உதவியாளர்களுக்குமான வதிவிடச்செயலமர்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை 9ஆம் திகதி முற்பகல் 8மணி தொடக்கம் எதிர்வரும் 11ஆம்திகதிவரை வட்டுக்கோட்டை தொழில்நுட்பக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் சகல கோட்டக்கல்வி அலுவலர்களையும் முகாமைத்துவ உதவியாளர்களையும் பங்குபற்றுமாறும் மடிக்கணிணியுள்ள கோட்டக்கல்வி அதிகாரிகள் தங்களது மடிக்கணினி இணைப்பு வயர்களையும் கட்டாயமாக கொண்டுவருமாறு வடமாகண மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஸ்ணன் அறிவித்துள்ளார்.அத்துடன் கல்விவலய திட்டமிடல் பிரதிக்கல்விப்பணிப்பாளர்களை 11ஆம் திகதி மட்டும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார். (109)

# உடுவில் மகளிர் கல்லூரியில் மாணவர்களின் ஓவியக் கண்காட்சி






(சிகரம்)

உடுவில் மகளிர் கல்லூரியின் கலைப்பிரிவு மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஓவியக் கண்காட்சி நேற்று மதியம் 1.00 மணிக்கு கல்லூரியின் ஆங்கில மொழி கற்கைநெறி மையத்தில் ஆரம்பமாகியது.

யாழ்.பல்கலைக்கழக கலை மற்றும் வடிவமைப்பு விரிவுரையாளர் வி.பாலமுருகன் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

இந்தப் பாடசாலையில், க.பொ.த உயர் தரத்தில் கலைப்பிரிவில் சித்திரத்தை ஒரு பாடமாகக் கற்கும் ஆறு மாணவிகளால், இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள ஓவியங்கள் அனைத்தும் வரையப்பட்டுள்ளன.

இவர்களுக்கு கற்பிக்கும் சித்திர பாட ஆசிரியரின் வழிகாட்டல் மற்றும் உதவியுடனேயே இவர்கள் இந்த ஓவியங்களை வரைந்து காட்சிப்படுத்தியுள்ளனர்.

இந்தக் கண்காட்சி நேற்று மாலை 4.00 மணி வரை நடைபெற்றதுடன், இன்று (07.07.2012) காலை 8.30 தொடக்கம் மாலை 4.00 மணிவரை நடைபெறவுள்ளது.

# மூத்த விநாயகர் சனசமூக நிலைய 61ஆவது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மூத்த விநாயகர் சனசமூக நிலைய 61 ஆவது ஆண்டு விழா இன்றும் நாளையும் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத்தலைவர் க.செல்வராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் இன்று சனிக்கிழமை காலை 9.30மணிக்கு மூத்த விநாயகர் சனசமூக நிலைய ஞானக்குழந்தை இல்ல பாலர் பாடசாலையின் விளையாட்டுப்போட்டிகள் இடம்பெறவுள்ளது.

மாலை 7.30மணிக்கு கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குனராசா,சிறப்பு விருந்தினரர்களாக யாழ். மாநகர சபை சனசமூக நிலைய உத்தியோகத்தர் ச.லோகசிவம்,நல்லூர்பிரதேச செயலக ஜே/ 109 சமுர்த்தி உத்தியோகத்தர் மு.ஸ்ரீதரன் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இளைஞர் அமைப்பு தலைவர் அன்ரனி ரங்கா நுஷரா நல்லூர் பிரதேச எதிர்க்கட்சி தலைவரும் ஈ.பி.டி.பிஅமைப்பாளருமான அ.இரவீந்திரதாஸன்,ஜே/109 நல்லூர் மாதர் கிராம அபிவிருத்திச்சங்கதலைவர் திருமதி புஸ்பமதி மன்மத ராஜலிங்கம்,மானிப்பாய் பிரதேச சபை முகாமைத்துவ உதவியாளர் திருமதி சுரேந்திரா வசந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இரண்டாம் நாளான நாளை மாலை 7.30மணிக்கு நடைபெறும் நிகழ்வில்பிரதம விருந்தினராக அமைச்சர்கே.என்.டக்ளஸ் தேவனந்தா, கௌரவ விருந்தினரர்களாக யாழ். சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.ஸ்ரீகுகணேசன் விவப்புல்நவிகேகன் நிறுவனத் தலைவர் ச. வின்சேந்திரராஜன் யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத் துறை பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் யாழ். வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் மு.இராசநாயகம்,கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலய அதிபர் வே. ஞானகாந்தன் ஜே/109 கிராம சேவகர் இ.சந்திரகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.





வெற்றிலைக்கேணி பிரதேசத்தில் இராணுவத்தினர் டெங்கு ஒழிப்பில் ஈடுபடுவதைக் காணலாம்.

# போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டோருக்கு மரண தண்டனை விதிப்பது குறித்து ஆராய்வு

(கொழும்பு)

போதைப் பொருள் குற்றச் செயல்களுடன்தொடர்புடைய வர்களுக்கு எதிராக மரண தண் டனையை விதிப்பது குறித்து ஆராயப்பட்டு வருவதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக் வெல்ல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

இலங்கையின் ஊடாக சர்வ தேச போதைப் பொருள்வர்த் தக நடவடிக்கைகள் அதிகரித் துள்ளன.

மரண தண்டனையை நிறை வேற்றுவது குறித்து இறுதித்தீர் மானம் ஜனாதிபதியினால் எடுக் கப்படும்.

கடந்த 35 ஆண்டுகளாக இலங்கையில் மரண தண்டனை நிறைவேற்றப்படவில்லை.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில்அங்கம் வகிக்கும் சில கட்சிகள் மரண தண்டனைக்கு எதிர்ப்பை வெளி யிட்டு வருகின்றன.

இரண்டு கிராமிற்கு அதிக மாக ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருக்கும் நப ருக்கு மரண தண்டனை விதிக் கக் கூடிய வகையில் சட்டத்தில் வாய்ப்புகாணப்படுகின்றது.

1815ஆம் ஆண்டு பிரித் தானியர்களினால் இலங்கை யில்மரண தண்டனை அறிமுகம் செய்யப்பட்டது.

1959ஆம் ஆண்டு முன்னாள பிரதமர்பண்டாரநாயக்கவினால் மரண தண்டனை சட்டம் இரத்து செய்யப்பட்டது. அதே ஆண்டில் பிரதமர்படுகொலை செய்யப் பட்டதனைத் தொடர்ந்து மீண்டும் மரண தண்டனை அறிமுகம் செய்யப்பட்டது என்றார்.

## – கணவருடன் சண்டையால் –
# ஆறு வயது மகளை கொல்ல முயன்ற தாய்

(கொழும்பு)

கணவருடன் சண்டையால் பெற்ற மகளை விஷம் வைத்து கொல்ல முயன்ற தாய்விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

கொலன்ன - சூரியகந்த - ஏக்பர்ன் தோட்டத்தில் வசிக்கும் தாய் ஒருவர் தனது 6 வயது மகளுக்கு கடந்த 4ஆம் திகதி இரவு விஷம் கொடுத்து கொல்ல முயற்சித்துள்ளார்.

கணவருடன் ஏற்பட்ட பிரச்சினையால் தாய் மகளுக்கு விஷம் வைத்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த சிறுமிக்கு விஷம் வழங்கிய பின்னர் அவர் சூரியகந்த தோட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது தாயிடம் விசாரணை நடத்திய வைத்தியர் விஷம் கொடுக்கப்பட்டுள்ளதை கேட்டறிந்துள்ளார்.

அதன் பின்னர் உடனடியாக பொலிஸாருக்கு சம்பவத்தை அறிவித்த வைத்தியர் சிறுமியை இரத்தினபுரி வைத்திய சாலைக்கு மாற்றினார்.

சிறுமி உயிர்பிழைத்து தற்போது சிகிச்சைப் பெற்று வரும் நிலையில் தாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் எம்பிலிபிட்டிய நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளார். கொலொன்ன பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

# சமநிலையாக செய்திகளை ஊடகங்கள் வெளியிடவேண்டும்



(கொழும்பு)

நாடாளுமன்ற உரைகள் தொடர்பில் ஊடகங்கள் சம நிலையான செய்திகளை வெளி யிட வேண்டுமென சபாநாயகர் சமால் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆங்கிலப் பத்திரிகை யொன்று எதிர்க்கட்சியினரின் உரைகளை மட்டுமே பிரசுரம் செய்து வருவதாக ஆளும் கட்சி யின் பிரதம கொறடா தினேஷ் குணவர்தன வெளியிட்ட கருத் துக்கு பதிலளிக்கும் வகையில் சபாநாயகர் இதனைக் குறிப் பிட்டுள்ளார்.


ஆளும் எதிர்க்கட்சியினர் ஆற்றும் உரைகள் தொடர்பில் சமநிலையான செய்திகள் வெளி யிடப்பட வேண்டும். நாடாளு மன்றில் ஆற்றப்படும் உரைகள் தொடர்பில் சமநிலையான செய்தி அறிக்கையிடப்பட வேண்டியது அவசியமானது.

அரச மற்றும் தனியார் ஊட கங்கள் சமநிலையாக செய் திகளை வெளியிட வேண்டும் என்றார்.

# சுவீடன் வெளிவிவகார அமைச்சருடன் இலங்கைத் தூதுவர் சந்திப்பு

(கொழும்பு)

சுவீடன் வெளிவிவகார அமைச்சர் கார்ல் பில்ட்டை சுவீடனுக்கான புதிய இலங்கைத் தூதுவர் ஒஷதி அலகப்பெரும சந்தித்து கலந்துரையாடியுள் ளார்.



சுவீடன் வெளிவிவகார அமைச் சில் நடைபெற்ற இச்சந்திப்பில் இரு நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர உறவை முன்னேற் றுவதுகுறித்து கலந்துரையாடப் பட்டது. கடந்த 35 வருட காலத் தில் இலங்கை இராஜதந்திரி யொருவரை சுவீடன் வெளிவிவ கார அமைச்சர் சந்திப்பது இதுவே முதல் தடவையாகும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தி னால் இலங்கையில் மேற் கொள்ளப்படும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் இனங் களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்துவதற்கு மேற்கொள் ளப்படும் நடவடிக்கைகள் குறித்து சுவீடன் வெளிவிவகார அமைச்சருக்கு தூதுவர் ஒஷதி அலகப்பெரும விளக்கினார்.

சுவீடன் வெளிவிவகார அமைச்சர் கார்ல் பில்ட் இலங் கைக்கு விஜயம் செய்ய அனும தியளிக்கப்படாமையினால் இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவில் கசப்புணர் வுகள் ஏற்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது.

# 10 இலட்சம் கையெழுத்து

கல்வித்துறையில் காணப்படும் பின்னடைவுகளை பொது மக்களுக்கு தெளிவுபடுத்தி அவர்களின் கவனத்தை ஈர்க்க, 10 இலட்சம் கையெழுத்துக்களைப் பெறும் திட்டத்தை செயற்படுத்த பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்க சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

கடந்த 4ஆம் திகதி தாம் ஆரம்பித்த பணிப்பகிஷ்கரிப்பை தீர்வு கிட்டும்வரை கைவிடப்போவதில்லை என சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி நிர்மால் ரஞ்ஜித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

சம்பள உயர்வு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.சம்பள உயர்வு பிரச்சினை குறித்து எதிர்வரும் 12ஆம் திகதி ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்கவுடன் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை நடத்த வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விளக்க மறியல்


(கொழும்பு)

செல்லுபடியான விஷா இல் லாத நிலையில் இலங்கையில் தங்கியிருந்தை குற்றம் சுமத் தப்பட்ட இந்தோனேஷிய பிரஜை யொருவரை ஜுலை 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நேற்று முன்தினம் உத் தரவிட்டார்.

இந்த இந்தோனேஷிய பிர ஜையை கொள்ளுப்பிட்டி சந் திக்கு அருகில் வைத்து பொலி ஸார் கைது செய்திருந்தனர். மிரிஹான தடுப்பு முகாமில் அவரைத் தடுத்துவைக்குமாறும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு நீதவான் உத்தரவிட்டார்.

# யானைகளின் அட்டகாசம்

அநுராதபுரம் கலேவெல பிர தேச செயலகப் பிரிவில் அமைந் துள்ள தண்டு பெந்திரிப்புவ - முதுபோருகல கிராமத்திற்குள் பிரவேசித்த காட்டு யானைகள் வீடொன்றில் களஞ்சியப்படுத் தப்பட்டிருந்த நெல் அறையின் யன்னலை உடைத்து அங்கி ருந்த 16 நெல் மூடைகளைத் தின்று தீர்த்துள்ளன.



வீட்டுரிமையாளர் வெளியூர் சென்று அவரது மனைவி ஐ. ஜீ. வயலட் நோனா (53 வயது) மாத்திரம் வீட்டில் தனிமையி லிருந்த வேளையில் கடந்த புதன்கிழமை இரவு 12 மணியள வில் இச்சம்பவம் நிகழ்ந்ததாக வும் அச்சத்தில் தான் வீட்டின் மற்றொரு அறையில் முடங்கிக் கிடந்ததாகவும் அவர் கண்ணீர் மல்கத் தெரிவித்தார்.

காலையில் வெளியில் வந்து பார்த்தபோது நெல்லை கப ளீகரம் செய்த யானைகள் தோட டத்தில் அறுவடை செய்து வைத திருந்த நூற்றுக் கணக்கான மரவள்ளிக் கிழங்கு களையும் இருபது தென்னங் கன்றுகளை யும் தின்று சென்றிருப்பதாக வயலட் நோனா தெரிவித்தார். பிரதேச கிராம சேவை அலு வலர் மற்றும் வனஜீவ அதி காரிகள் ஸ்தலத்திற்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட் டனர்.

# அடைக்கலம் நிராகரிப்பு

அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் பயங்கரவாத அமைப்புக்கு ஆதரவு வழங்கிய தமிழர் ஒருவருக்கு அமெரிக்காவில் அரசியல் அடைக்கலம் நிராகரிக்கப்பட்டுள்ளது

சான்பிரான்ஸிஸ்கோ, பிராந்திய நீதிமன்றம் இந்த நிராகரிப்பு தீர்ப்பை நேற்று முன்தினம் வழங்கியது

அச்சுறுத்தலுக்கு மத்தியில் குறித்த தமிழர் பயங்கரவாத அமைப்புக்கு, ஆதரவு வழங்கியிருந்தாலும் அமெரிக்க சட்டப்படி அவருக்கு அடைக்கலம் வழங்கமுடியாது என்று நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது

சதீஸ்குமார் அன்னாச்சாமி என்பவர் தொடர்பிலேயே இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது

எனினும் அவரை இலங்கைக்கு திருப்பியனுப்பக்கூடாது என்று சதீஸ்குமாரின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தனர்

இலங்கையில் இருந்த போது 37 டொலர்களை மாத்திரமே விடுதலைப்புலிகள் அமைப்புக்கு தாம் வழங்கியதாக குறித்த தமிழர் தமது சாட்சியத்தில் குறிப்பிட்டிருந்தார்

இவர் 2005 ஆம் ஆண்டு அமெரிக்காவுக்கு சட்டவிரோதமாக சென்ற அவர் அடைக்கலம் கோரிய நிலையில் இரண்டு வருடங்கள் சிறையிலும் வைக்கப்பட்டிருந்தார்

# 6 மாத காலப்பகுதியில் 700 சிறார் துஷ்பிரயோகங்கள்

(கொழும்பு)




இந்த வருடத்தின் முதல் 6 மாத காலப் பகுதிகளில், பெண்கள் மற்றும் சிறார்களுக்கு எதிராக மேற்கொள் ளப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் 700 முறைப் பாடுகள் கிடைக்கப் பெற் றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகன தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் இதுவரைக்கும் 975 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் 700 முறைப்பாடுகள் பெண்கள் மற்றும் சிறார்களுக்கு எதிரானவை. இதற்கு பல காரணங்கள் உள்ளன. பிள்ளைகள் பாதுகாவலர்கள் மற்றும் உறவினர் களாலேயே பாதிக்கப்படுகின்றனர். இது தொடர்பில் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. பொலிஸார் மாத்திரம் இப்படியான குற்றச் செயல்களைத் தடுக்க முடியாது என்றார்.

Grade - 13 க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்
G.C.E. (A/L) Examination model Paper
கல்வி முரசு
02 | T | II
பௌதிகவியல் - II B
Physics - II B
நேரம் : 2 மணித்தியாலம்

பௌதிகவியல் - II B தொடர்ச்சி....

b)



மின்சக்தி மூலம் தொழிற்படும் எஞ்சின் ஒன்றின் அதிர்வெண்ணைத் துணிவதற்கான மாணவன் ஒருவனால் ஒழுங்கமைப்பு ஒன்று செய்யப்பட்டுள்ளது.

இழையின் ஒரு முனையானது இஞ்சின் ஓசையை குறைக்கும் குழாய்க்கு (Scilener) இணைக்கப்பட்டு அவ்விழையானது ஒப்பமான கப்பிக்கு மேலாக சென்று நிறையற்ற தராசுத்தட்டுக்கு அடுத்த முனை இணைக்கப்பட்டுள்ளது.

i) எஞ்சினானது இயங்கும் போது எஞ்சின் அதிர்வெண்ணுடன் குழாய் (Scilener) உம் அதிரும் தராசுத்தட்டில் மணலானது போடப்பட்டு இழையில் 4 தடங்கள் உருவாக்கப்படுகின்றன. இழையின் நீளமும், இழையின் அலகு நீளத்திற்கான திணிவும் முறையே 2 m, 2g $m^{-1}$ ஆகும். அத்துடன் இஞ்சின் இயங்கும்போது அதிரும் பகுதியின் இருமுனைகளும் கணுக்கள் உருவாகின்றன. இழையின் அதிர்வெண்ணின் இருமடங்குடன் இஞ்சின் அதிர்வியக்கத்தை நிகழ்த்தின் இஞ்சினின் அதிர்வெண் யாது? (போடப்பட்ட மணலின் திணிவு 180g)

ii) நிறைப்படிகள் பயன்படுத்தப்படுவதைவிட மணலைப் போடுவது பரிசோதனை ரீதியான நயம் யாது?

c) i) எஞ்சினின் திசையில் இருந்து அதற்குச் சமாந்தரமாக உள்ள சுவரை நோக்கி நடந்து செல்லும் போது ஒருவர் எஞ்சினால் உருவாக்கப்படும் ஒலியின் உரப்பின் ஆவர்த்தன ஏற்ற இறக்கம் ஒன்றை கேட்கிறான். முரண்களுக்கு இடைப்பட்ட தூரம் 1.25 m ஆகும். ஒலியின் அதிர்வெண் எஞ்சினின் அதிர்வெண்ணுக்கு சமனாயின் வளியில் ஒலியின் கதியைக் காண்க.


ii) இஞ்சினில் இருந்து குறித்த புள்ளி ஒன்றிலுள்ள ஒலிச்செறிவு $10^{-2}$ W $m^{-2}$ ஆகும். ஒலியின் தாழ் ஒலிச் செறிவு $10^{-12}$ W $m^{-2}$ ஆயின் அப்புள்ளியில் ஒலிச் செறிவு மட்டம் யாது?

iii) வெடி ஒலி காரணமாக சில யன்னல் கண்ணாடிகள் அதிர ஆரம்பிக்கின்றன. பகுதி (b) இல் கூறப்பட்ட பரிசோதனைகளை பயன்படுத்தி யன்னல் கண்ணாடியின் அதிர்வெண்ணைக் காணமுடியுமா? உமது விடையை விளக்குக.

iv) வலுப்பாதையில் ஏற்பட்ட குறுக்குச்சுற்றுக் காரணமாக இயந்திரத் தொழில்நுட்பவியலாளர் இயந்திரத்தை நோக்கி 5 m $s^{-1}$ வேகத்துடன் ஓடிச் சென்று இஞ்சினின் வலுவழங்கியை நிறுத்தினான் எனின், அவன் ஓடிச்செல்லும் போது கேட்கும் ஒலியின் அதிர்வெண் யாது?

வினா 06 (A) அல்லது 06 (B) இற்கு மாத்திரம் விடை தருக.


06. (A) a) கம்பி ஒன்றின் மின்தடை R இற்கான கோவை ஒன்றை அதன் குறுக்குவெட்டு முகப்பரப்பு A, நீளம் l, தடைத்திறன் ρ ஆகியவற்றின் சார்பில் எழுதுக.




b) V அழுத்த வேறுபாட்டின் கீழ் வலுவழங்கிப் பகுதியின் வலு P ஆகும்.
i) வலுவழங்கிப் பகுதியில் இருந்து சுமைக்கு வழங்கிய மின்னோட்டம் யாது?
ii) சுமை R இற்கு குறுக்கேயான அழுத்த வேறுபாடு என்ன?

iii) $R_2$ இன் வலு என்ன?

c)




i) 1 km நீளமான தலைக்கு மேல் செல்லும் கம்பி (Over head wire) இன் குறுக்கு வெட்டுப்பரப்பு $5 \times 10^{-3}$ $m^2$ உம் தடைத்திறன் $1.75 \times 10^{-8}$ Ω m உம் ஆகும்.


ii) மின்சாரத்தில் இயங்கும் பேருந்திற்கு 250 V அழுத்த வழங்கி இணைக்கப்பட்டுள்ளது. பேருந்தின் மோட்டாருக்கு கப்பி வழியாகவும், பாதை வழியாகவும் மின்சாரம் வழங்கப்படுகின்றது. பாதையின் தடை புறக்கணிக்கத்தக்கது. ஆரம்பிக்கும் இடம் பேருந்தானது வலு வழங்கிக்கு அருகில் உள்ளது. அத்துடன் வலு வழங்கி 67 kW வலுவை வழங்குகின்றது. ஆயின் மோட்டாரின் ஊடு செல்லும் மின்னோட்டம் யாது?

iii) வலுவழங்கிப் பகுதியில் இருந்து 30 km தூரத்தில் பேருந்து வண்டி இருக்கும்போது சுற்றியுள்ள மின்னோட்டம் 180 A ஆகும். பேருந்தின் மோட்டாருக்கு பிரயோகிக்கப்பட்ட அழுத்த வேறுபாடு என்ன?

iv) இந்நிலையில் மோட்டாரினால் உறிஞ்சிய வலு யாது?


v) $\dfrac{\text{மோட்டாரினால் உறிஞ்சிய வலு}}{\text{முதலினால் மோட்டாருக்கு வழங்கிய வலு}}$ என்னும் விகிதத்தை கணிக்குக.

06. (B) i) npn திரான்சிற்றர் ஒன்றின் பயப்பு சிறப்பியல்பு வளையியை வரைக. அதில் துண்டிப்புப் பிரதேசம், நிரம்பல் பிரதேசம், உயிர்ப்புப் பிரதேசம் என்பவற்றை குறித்துக் காட்டுக.




a) Ic யின் பெறுமதிகளை பின்வரும் நிலைகளில் காண்க.
i) நிரம்பல் நிலை
ii) துண்டிப்பு நிலை

iii)





படத்தில் காட்டியவாறு பெய்ப்பு அலைவடிவம் V1 மாறுபடுவதற்கு ஒத்த பயப்பு அலை வடிவத்தை வரைக.

iv) உயர் அழுத்த வேறுபாடு (+3V) ஆனது துவிதம் 1 ஐயும், தாழ் அழுத்த வேறுபாடு (0) ஆனது துவிதம் 0 வையும் வகைக்குறிக்கின்றது. ஆயின் மேற்கூறப்பட்ட பெய்ப்புக்கும், பயப்புக்கும் ஒத்த உண்மை அட்டவணையைத் தருக.

v) இல் உண்மை அட்டவணைக்கு ஒத்த இலக்கச் சுற்றை வரைக.

vi)




மேலுள்ள சுற்றுக்கு கொடுக்கப்பட்ட பெய்ப்புக்கள் தரப்பட்டுள்ளன.

i) இதற்கு ஒத்த $F_1, F_2, F_3$ இற்கான பயப்பு வடிவத்தை வரைக.

ii) $F_1, F_2, F_3$ ஆகியவற்றுக்கான பூல கோவையை எழுதுக.

iii) கீழ் உள்ள அட்டவணையை உமது விடைத்தாளில் வரைந்து பூரணப்படுத்துக.

| A | B | $F_1$ | $F_2$ | $F_3$ |
|---|---|---|---|---|
| 0 | 0 | | | |
| 0 | 1 | | | |
| 1 | 0 | | | |
| 1 | 1 | | | |

(முற்றும்)

Grade - 13

அளவையியலும் விஞ்ஞான முறையும்

# க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்

## G.C.E. (A/L) Examination model Paper

02 | T | II

நேரம் : 2 மணித்தியாலம்

ஆசிரியர்
M.W.காண்டீபன்

### பகுதி I

01) விஞ்ஞானம் என்பதன் மூலம் நீர் புரிந்து கொள்வது என்ன?

விஞ்ஞானத்தைப் பற்றிப் பல்வேறு விதமான கருத்துக்களையும் வரைவிலக்கணங்களையும் கூறுகின்றனர்.

i) காள் பொப்டர் கூறிய வரைவிலக்கணம்

விஞ்ஞான முறையியலாளரான் காள் பொப்பர் கூறுகையில் விஞ்ஞானம் என்பது பிரயோக ரீதியான பரிசோதனைகள் மூலம் கருதுகோளை பொய்ப்பிக்கக்கூடிய வகையில் இடமளிக்கும் துறைகளாகும் என்றார்.

..............................................................................................

..............................................................................................

ii) அனுபவத்துவ உண்மை or பொய் என நிருபிக்கக்கூடிய எளிமையான அறிவு விஞ்ஞானம் என கார்னப் என்ற தத்துவஞானி கூறியுள்ளார்.

..............................................................................................

..............................................................................................

iii) விஞ்ஞானத்திற்கும் விஞ்ஞானம் அல்லாததிற்கும் இடையிலான வேறுபாட்டைக் காட்டும் பொப்பரின் அளவுகோலை தெளிவுபடுத்துக?

..............................................................................................

..............................................................................................

iv) ஒரு தடவை உண்மையாயின் அது என்றுமே உண்மை தான் என்பது விஞ்ஞானத்திற்குரிய இலட்சணமாகும். இக்கூற்றை விளக்குக.

..............................................................................................

..............................................................................................

v) விஞ்ஞான முறை என் கையில் நீர் விளங்கிக் கொள்வது என்ன?

..............................................................................................

..............................................................................................

02) i) பிரயோக விஞ்ஞானம் இன்று வேகமாக வளர்கிறது உதாரணங்கள் தந்து இக்கூற்றை விளக்குக?

..............................................................................................

..............................................................................................

ii) இயற்கை விஞ்ஞானத்திற்கும் சமூக விஞ்ஞானத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அர்த்தமுடையது அல்ல. ஆராய்க?

03) பின்வரும் பதங்களைப் பயன்படுத்தி வெற்றிடங்களை நிரப்புக.

(பகுத்தறிவு, புலன் காட்சி, அனுபவ விஞ்ஞானம்,அனுபவமில் விஞ்ஞானம்,விஞ்ஞானம் சாராத)

i) அறிவின் மூலதாரங்கள் ஏன்ற வகையில் விஞ்ஞானம் உம் ............................................ உம் அல்லது ............................................ மட்டுமே பயன்படுத்துகின்றன.

ii) ............................ உம் ............................ உம் பயன்படுத்தும் விஞ்ஞானங்கள் அனுபவ விஞ்ஞானங்களாகும்.

iii) கணித அளவையில் ............................................ ஆகும். ஏனெனில் அது ............................................ மாத்திரமே பயன்படுத்தப்படுகின்றது.

02) அடைப்புக் குறிகளினுள் காணப்படும். சொற்களில் எது தரப்பட்டுள்ள விபரிப்பதற்கு மிகவும் பொருத்தமானதென்பதை தெரிந்தெடுத்து எழுதுக.

i) (அரசியல், தொல் பொருளியல், ஒழுக்கவியல் கேத்திர கணிதம்) ஓர் அனுபவம் சாராத விஞ்ஞானமாகும்.

ii) (அளவையியல், நுன்பாக உயிரியல், மருத்துவம், சமயம், பொருளியல் ஓர் இயற்கை விஞ்ஞானமாகும்.

iii) (புவியியல், சத்திரசிகிச்சை, பொருளாதாரம், வானிலை) ஒரு பிரயோக விஞ்ஞானமாகும்.

iv) (கேத்திர கணிதம், வரலாறு, உயிரியல், வானியல், பிறப்பியல்) ஓர் மேல்வரம்பிட்ட விஞ்ஞானமாகும்.

v) (உளவியல், வானிலை, அளவையியல், வரலாறு, பொருளியல்) ஓர் சமூக விஞ்ஞானமாகும்.

vi) (பிறப்பிறல், ஒழுக்கவியல், வரலாறு. கணிதம், உளவியல்) இயற்கை விஞ்ஞானமாகவும் சமூக விஞ்ஞானம் கருதப்படுகின்றது.

vii) (வரலாறு, அளவையியல், கணிதம், கடத்திலை உளவியல்) விஞ்ஞானமான அல்லவா என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

viii) (புவியியல், தாவரவியல், வரலாறு, பொருளியல், கணிதம்) ஓர் உயிரியல் விஞ்ஞானமாகும்.

#### விஞ்ஞான வகைகள்

தூய விஞ்ஞானம்

1. அனுபவிஞ்ஞானம்
2. அனுபவம் சாரா விஞ்ஞானம்

அனுபவ விஞ்ஞானம்

1. இயற்கை விஞ்ஞானம்
2. சமூக விஞ்ஞானம்

இயற்கை விஞ்ஞானம்

1. பௌதீக விஞ்ஞானம்
2. உயிரியல் விஞ்ஞானம்

பௌதீக விஞ்ஞானம்


1. பெயதீகவியல்
2. இரசாயனம்
3. புவியல்
4. பௌதிகப்புவியியல்
5. காலநிலையியல்
6. நிலச்சரிதவியல்
7. வானியல்

உயிரியல் விஞ்ஞானம்

1. தாவரவியல்
2. விலங்கியல்
3. உயிலியல்
4. சுகாதாரவியல்
5. நுண்பாக உயிரியல்
6. பிறப்பியல்
7. நோயியல்
8. ஒட்டுண்ணியியல்
9. சூழலியல்
10. மரபனுவயல்

(தொடரும்....)

# பத்மநாபசுவாமி கோவிலில் 10 இலட்சம் கோடி பொக்கிஷம்



பத்மநாப சுவாமி கோவிலில் பூமிக்கடியில் உள்ள, பாதாள அறைகளில், "ஏ" அறை நேற்று முன்தினம் காலை திறக்கப்பட்டது. அதிலுள்ள தங்க, வைர, இரத்தின, வைடூரிய நகைகள் குறித்தான மதிப்பீடு பணிகள் ஆரம்பமாகின. இப்பணிகள் முடிவடைய பல மாதங்கள் ஆகலாம்.

கேரளா, திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோவிலில் பூமிக்கடியில் ஆறு அறைகளில், பல நூற்றாண்டுகளாக பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள தங்க, வைர, இரத்தின, வைடூரிய பொக்கிஷங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. அவற்றை மதிப்பீடு செய்ய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதற்காக, தேசிய அருங்காட்சியக இயக்குனர் வேலாயுதன் நாயர் தலைமையில் மதிப்பீடு குழுவையும் உச்சநீதிமன்றம் நியமித்தது.

உச்சநீதிமன்ற உத்தரவின்படி, பாதாள அறைகளைத் திறந்து அவற்றிலுள்ள பொக்கி'ங்களை மதிப்பீடு செய்யும் பணி நடந்து வருகிறது. இதில், "எப்", "இ", "டி", "சி" அறைகள் ஏற்கனவே திறக்கப்பட்டு, அவற்றிலுள்ள பொக்கிஷங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு விட்டன. ஆனால், வைர, வைடூரிய நகைகளை மதிப்பீடு செய்வதற்கான வல்லுனர்கள் மற்றும் தொழில்நுட்பக் கருவிகள், மதிப்பீட்டுக் குழுவினரிடம் இல்லாததால், "ஏ" அறை திறக்கப்படாமல் இருந்தது.

இந்த அறையில் தங்க, வைர, வைடூரிய, இரத்தின பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன. அவற்றின் மதிப்பு, தோராயமாக 10 இலட்சம் கோடி ரூபாயாக இருக்கும் என, பல ஆண்டுகளாக கருதப்பட்டு வருகிறது. இந்த அறையில், பத்மநாப சுவாமி பூஜைக்கு பயன்படும் 300இற்கும் மேற்பட்ட தங்கக் குடங்கள், 3,000இற்கும் மேற்பட்ட இரட்டை வடம் மற்றும் அதற்கும் மேற்பட்ட வடங்களைக் கொண்ட தங்கச் சங்கிலிகள், வைர, வைடூரியம் பதிக்கப்பட்ட தங்க மாலைகள், தலா 25 கிலோ எடை கொண்ட தங்கத்திலான பெரிய உருளிகள் என, பல விலை மதிக்க முடியாத பொருட்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

தற்போது அந்த அறையைத் திறந்து, அவற்றிலுள்ள பொருட்களை மதிப்பீடு செய்வதற்கான, ஜேர்மனி, பெல்ஜியம் நாடுகளில் இருந்து வரவழைக்கப்பட்டுள்ள நவீன தொழில்நுட்பக் கருவிகள், வல்லுனர்கள், கோவிலுக்கு வரவழைக்கப்பட்டுள்ளனர்.

# சொத்துக்குவிப்பு வழக்கில் மாயாவுக்கு நிம்மதி


(புதுடில்லி)


அளவுக்கு அதிகமாக சொத்துக்களை குவித்தார் என்பது தொடர்பாக சி.பி.ஐ. விசாரித்து பதிவு செய்த குற்றச்சாட்டை நீதிமன்றம் நிராகரித்து விட்டது. மேலும் அவர் சொத்துக்களை குவித்தார் என்பதற்கான ஆதாரங்கள் எதுவுமில்லை என்றும் இவர் மீதான வழக்கை நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர். இதனால் அவர் பெரும் நெருக்கடியில் இருந்து தப்பினார்.

உத்திரபிரதேச மாநில முதல்வரும் பகுஜன்சமாஜ் கட்சி தலைவருமான மாயாவதி (2004 - 2008) முதல்வராக இருந்தபோது கோடிக்கணக்கில் சொத்துக்களை குவித்தார் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. இது தொடர்பாக சி.பி.ஐ வழக்கு பதிவு செய்து விசாரித்தது. இந்த வழக்கு அரசியல் காழ்ப்புணர்ச்சிகாரணமாக போடப்பட்டது இதனை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று மாயாவதி தரப்பில் வாதிட்ப்பட்டது. இதனை டில்லி நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

மாயாவதி சொத்துக்கள் குவித்தார் என்பதற்கான ஆதாரங்கள் எதுவுமில்லை என்றும், சி.பி.ஐ. தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் நீதிபதிகள் தீர்ப்பளித்தனர், இதனால் மாயாவதிக்கு பெரும் நிம்மதி கிடைத்தது.

கடந்த ராஜ்யசபா தேர்தலில் மாயாவதி தனது சொத்து மதிப்பு மொத்தம் 111 கோடி என்று தெரிவித்திருந்தார். இது தொடர்பாக வருமான வரித் துறை எவ்வித பிரச்சினையும் இல்லாமல் ஏற்றுக்கொண்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.




# அயோத்தி மசூதி இடிப்புக்கு நரசிம்மராவ் உடந்தை!



அயோத்தியில் சர்ச்சைக்குரிய கட்டடம் இடிக்கப்பட்டதில், மறைந்த முன்னாள் பிரதமர் நரசிம்மராவும் உடந்தையாக இருந்தார் என்று ஒரு புத்தகத்தில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. அயோத்தியில் திரண்டிருந்த கரசேவகர்கள், சர்ச்சைக்குரிய கட்டடத்தை இடிக்கத் தொடங்கியபோது நர்சிம்மராவ் பூஜை ஒன்றில் அமர்ந்திருந்தார்.

அந்தக் கட்டடம் இடிக்கப்பட்ட பின்னரே அவர் பூஜையிலிருந்து எழுந்தார் என அந்த புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது.பத்திரிகையாளர் குல்தீப் நய்யார் விரைவில் வெளியிட உள்ள தனது சுயசரிதைப் புத்தகத்தில் இந்த தகவலை குறிப்பிட்டுள்ளார்.

"எனக்குக் கிடைத்த தகவலின்படி ராவும் இந்தக் கட்டட இடிப்புக்கு உடந்தையாக இருந்துள்ளார்" என்று குல்தீப் நய்யார் தனது புத்தகத்தில் தெரிவித்துள்ளார். பூஜையின் போது நரசிம்மராவின் காதில் அவரது உதவியாளர் அந்தக் கட்டடம் இடிக்கப்பட்டு விட்டது என்று கூறியதாகவும், அவர் கூறிய சில நிமிடங்களுக்கெல்லாம் பூஜை முடிந்ததாகவும் மறைந்த தேசியவாதத் தலைவர் மது லிமாயி என்னிடம் கூறினார் என்று குல்தீப் நய்யார் தனது புத்தகத்தில் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்தத் தகவல்கள் நம்பமுடியாதது, அடிப்படையற்றது என நரசிம்மராவின் மகன் பிவி.ரங்காராவ் மறுத்துள்ளார்.

# அணு ஆயுத நாடாக இந்தியா மாறியது சரியானதே



இந்தியா அணு ஆயுத தயாரிப்பில் இறங்கியது ஏன்? என்பது குறித்து நாட்டின் முன்னாள் ஜனாதிபதி, விஞ்ஞானி அப்துல் கலாம் பேட்டியளித்துள்ளார்.

அப்துல் கலாம், 33 ஆவது ஆசிய பசிபிக் ஒருங்கிணைந்த ஊரக மேம்பாடு தொடர்பான கருத்தரங்கில் பங்கேற்பதற்காக பங்களாதேஷ் தலைநகர் டாக்காவிற்கு சென்றுள்ளார்.

அங்கு நிருபர்களின் கேள்விகளுக்கு அப்துல் கலாம் பதிலளித்தார்.

இந்தியாவைச் சுற்றியுள்ள நாடுகள் அணு ஆயுதங்களை தயாரித்து வருகின்ற போது அதிகார சமநிலையை உருவாக்குவதற்காக இந்தியாவும் அணு ஆயுதங்களை தயாரிப்பது அவசியமாக உள்ளது.

இருப்பினும் இந்தியா அணு ஆயுத தாக்குதல்களை முதலில் நடத்தாது. தேவைப்பட்டால் எங்கள் மீது தாக்குதல் நடத்தும் நாடுகளுக்கு பதிலடி கொடுப்போம்.

அக்னி, பிருத்வி போன்ற ஏவுகணைத் திட்டங்களுக்கு மிகவும் குறைந்த தொகையைத்தான் இந்தியா செலவு செய்துள்ளது. அதனால் வறுமை ஒழிப்பிற்காக செலவளிக்கப்பட வேண்டிய தொகையை ஏவுகணை திட்டங்களுக்காக செலவளிக்கப்பட்டது என கருதுவது தவறானது என்றார்.

# தண்ணீரில் அமர்ந்து மழைவேண்டிப் பூசை



ராஜஸ்தான் மாநிலத்தில் எதிர்பார்த்த பருவமழை பெய்யாது கோடை வாட்டி எடுக்கிறது. மழை வேண்டி ஜெய்ப்பூரில் தண்ணீரில் அமர்ந்து இந்துத் துறவிகள் பூஜை செய்துள்ளனர்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ....................................

முகவரி : ....................................

பிறந்த ஆண்டு : ....................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

....................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# நித்தியானந்தாவை கடவுள் தண்டிப்பார்

குடும்ப உறவை பிரித்து விட்ட நித்தியானந்தாவை கடவுள் நிச்சியம் தண்டிப்பார் என மகனை இழந்த பெற்றோர் கண்ணீர் மல்க சாபமிட்டு சென்றுள்ளனர்.

கர்நாடக மாநிலத்தில் கிருஷ்ணமூர்த்தி, ஜெயந்தி தம்பதியினரின் மகன் சந்தோஷ்.

மென்பொருள் பணியாளரான இவர், நல்ல சம்பளத்தில் உள்ள வேலையில் இருந்துள்ளார். இதற்கிடையில் சுவாமி நித்தியானந்தா ஆசிரமத்தில் சேர்ந்த சந்தோசுக்கு குடும்பத்தின் மீதான பந்தம் துண்டிக்கப்பட்டது.

இந்த சமயத்தில் நித்தியானந்தா மீது தொடர் வழக்குகள், தலைமறைவு, சிறைச்சாலை என பல சம்பவங்கள் நடைபெற, சந்தோஷின் பெற்றோருக்கு பதற்றம் அதிகமானது.

சந்தோசும் பெற்றோரை தொடர்பு கொண்டு நான் வரமுடியாத சூழ்நிலையில் இருப்பதாக தெரிவிக்க பெற்றோர் பிடதி பொலிஸ் நிலையத்தில் தன் மகனை ஆசிரமத்திலிருந்து மீட்டுத்தருமாறு கேட்டுக்கொண்டனர்.

இந்த வழக்கு கர்நாடக நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தபோது, நித்தியானந்தா ஆசிரமத்தில் தங்குவதே தனக்கு பிடித்துள்ளது. பெற்றோருடன் செல்வதை விரும்ப வில்லை என சந்தோஷ் கூறியிருக்கிறார்.

இது கிருஷ்ணமூர்த்தி - ஜெயந்தி தம்பதியினருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்த, பெற்றோரிடமிருந்து மகனை அநியாயமாக நித்தியானந்தா பிரித்து விட்டார். `அவரை கடவுள் கட்டாயம் தண்டிப்பார்

# கம்போடியாவில் மர்ம நோய்; 61 குழந்தைகள் மரணம்



கம்போடியாவில் 10 வயதுக்கும் குறைவான குழந்தைகளை மர்ம நோய் தாக்கியதில் 60இற்கும் மேற்பட்ட குழந்தைகள் பலியாகி உள்ளனர்.

இத்தகவலை உலக சுகாதார மையத்தின் செய்தித் தொடர்பாளர் அபாலக் பாடியா செவி வெளியிட்டுள்ளார்.

அதில், கடந்த 3 மாதங்களில் மட்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 62 குழந்தைகளில், 61 பேர் மர்ம நோயால் பலியாகி உள்ளனர். குழந்தைகள் மத்தியில் பரவி வருவது ஒரே நோயா அல்லது வேறு வேறு நோய்களா என்பது குறித்து ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த குழந்தைகள் அனைவரும் பத்து வயதிற்கு உட்பட்டவர்கள். இந்நோய்க்கு திடீரென வரும் கடுமையான காய்ச்சலும், அதைத் தொடர்ந்து ஏற்படும் நரம்பியல் ரீதியான பிரச்சினைகளும், சுவாசக் கோளாறும் தான் காரணிகளாக உள்ளன.

கம்போடியாவில் மட்டும் 11 மாகாணங்களில் இந்த நோய் பரவி இருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதுகுறித்து கம்போடியா நாட்டு சுகாதாரத் துறை அமைச்சர் மான் பங் ஹெங் கூறுகையில், இந்நோய்க்கான காரணம் என்னவென்று விரைவில் கண்டறியப்படும் என்றார்.

மேலும் எச்சரிக்கையுடன் இருக்கும்படி அயல் நாடுகளை கேட்டுக் கொண்டுள்ளார்.

உலகச் செய்திகள்

# குர்ரானை அவமதித்தவர் பாகிஸ்தானில் எரித்துக்கொலை




பாகிஸ்தானில் இஸ்லாமாபாத் அருகே உள்ள ஒரு ஊரில் முஸ்லிம்களின் புனித நூலான குர்ரானை ஒருவர் அவமதித்தார். குரானின் பக்கங்களை கிழித்து தெருவில் வீசினார். இது பற்றிய புகாரின் பேரில் பொலிஸார் அவரைகைது செய்து சிறையில் அடைத்து வைத்து இருந்தனர்.

இதற்கிடையே குரானை அவமதித்தது பற்றிய தகவல் ஊர் முழுவதும் பரவி பரபரப்பை ஏற்படுத்தியது. கைதான வாலிபர் பொலிஸ் நிலையத்தில் அடைக்கப்பட்டு இருப்பதை அறிந்ததும் ஆயிரக்கணக்கான மக்கள் பொலிஸ் நிலையம் முன் திரண்டனர்.

திடீர் என்று அவர்கள் பொலிஸ் நிலையத்தை தாக்கினார்கள். அங்கு அடைத்து வைக்கப்பட்டு இருந்த வாலிபரை வெளியே இழுத்து அடித்து உதைத்தனர். அவர் மீது பெட்ரோலை ஊற்றி தீவைத்து எரித்துக் கொன்றனர். இந்த சம்பவம் பாகிஸ்தான் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. அந்த கிராமத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

# எரிவாயுக் கலன் வெடித்து 20பேர் தீயில் கருகிப் பலி

## ஆப்கானிஸ்தானில் விபரீதம்



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தொழிற்பூங்கா ஒன்றில் எரிவாயு சேமிப்புக் கலன் வெடித்ததில் ஏற்பட்ட தீவிபத்தில் 20 பேர் தீயில் கருகி பலியாயினர். 180 பேர் காயமடைந்தனர். ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் நகரின் கிழக்கே பகிட்டா கோட் என்ற பகுதியில் மிகப் பெரிய தொழிற்பூங்கா ஒன்று உள்ளது.

இங்கு சிலிண்டரில் எரிவாயு நிரப்ப புரோப்பேன் எரிவாயு சேமிப்பு கலன் உள்ளது. இதில் திடீரென வெடிவிபத்து நிகழ்ந்ததில் பெரும் தீ விபத்து ஏற்பட்டது. காஹிர்கானா பகுதியில் 4 அடுக்குமாடி குடியிருப்பு கட்டடம் சேதமடைந்தது. தொடர்ந்து தீ மளமள பரவி அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எண்ணெய் லொரிகளுக்கும் பரவியது.

# போராட்டத்தில் ஈடுபட்ட 11வயதுச் சிறுவன் கண்காணிப்பு

பஹ்ரைனில் போராட்டத்தில் ஈடுபட்ட 11 வயது சிறுவனை கணகாணிக்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பஹ்ரைனில் சாலை மறியலில் ஈடுபட்டதற்காக அலி ஹசன் என்ற 11 வயது சிறுவன் கைது செய்யப் பட்டுள்ளான்

பஹ்ரைன் நாட்டில் ஷியா பிரிவு முஸ்லிம்கள் கடந்த ஓராண்டாக, சன்னி பிரிவினருக்கு எதிராக பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

கடந்த மேமாதம்14ஆம் திகதி அலி ஹசன் என்ற 11 வயது பாடசாலை மாணவன், மனாமா பகுதியில் சாலை மறியலில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்டான் மனித உரிமை அமைப்பை சேர்ந்தவர்கள் இதை எதிர்த்து வழக்கு தொடர்ந்தனர்.

சிறுவன் அலி ஹசன் மூன்று முறை இது போன்ற குற்றத்தில் ஈடுபட்டதாக அரசு தரப்பு வழக்கறிஞர் வாதாடினார். சிலர் சிறுவனுக்கு பணம் கொடுத்து, இது போன்ற செயலில் ஈடுபடுத்தியதாகவும் புகார் கூறினர்.

இந்த வழ்க்கை விசாரித்த நீதிமன்றம், சிறுவனை அவனது பெற்றோரிடம் ஒப்படைக்கும் படியும், பாடசாலை தேர்வில் கலந்து கொள்ள சிறுவனுக்கு அனுமதி வழங்கியும் உத்தரவிட்டது.

இந்த சிறுவனை பொலிஸார் அலைக்கழிப்பதாக மனித உரிமை அமைப்புகள் மீண்டும் புகார் கூறின. இதையடுத்து இந்த சிறுவனை, சமூக சேவகர்கள் ஆண்டுக்கு இரண்டு முறையாவது கண்காணிக்க வேண்டும் என நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.



# கடல் மட்டம் ஐந்து அடி உயரும்; 2300 இல் பல நகரங்கள் அழியும்

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் கவனம் செலுத்தாவிட்டால் கடல் மட்டம் 2100ஆம் ஆண்டில் ஒரு அடி அதிகரிக்கும். 2300ஆம் ஆண்டில் சுமார் 5 அடி அதிகரிக்கும் என்று அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

புவி வெப்பம் உயர்வு, சுற்றுச்சூழல் மாசுபாடு உள்ளிட்ட பல காரணங்களால் கடல் மட்டம் வேகமாக உயர்ந்து வருவதாக கூறப்படுகிறது. இந்நிலையில் பருவநிலை மாறுபாடுகள், மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து அமெரிக்காவின் தேசிய வளிமண்டல ஆய்வு மையம் ஒரு ஆய்வு நடத்தியது.

ஆராய்ச்சி மற்றும் இதில் தெரியவந்த தகவல்கள் பற்றி விஞ்ஞானிகள் கூறுகையில் இயற்கை மற்றும் மனித இடர்பாடுகளால் பருவநிலையில் கணிசமான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

பருவநிலை மாறுபாடுகள், தொடர்ந்து அதிகரித்து வரும் புவி வெப்பம், இதனால் பனிப்பாறை மற்றும் பனிப்படலங்கள் வேகமாக உருகுதல், கிரீன் ஹவுஸ் வாயுக்கள் அதிகம் வெளியாவது, ஓசோன் படலத்தில் ஓட்டை உருவாவது போன்றவற்றால் மனித இனம் மட்டுமின்றி கடல் வாழ் உயிரினங்கள் உள்பட சகல ஜீவராசிகளும் பாதிக்கப்படுகின்றன.

சுற்றுச்சூழல் பாதிப்பு, பருவநிலை மாற்றம் ஆகியவை காரணமாக 1980ஆம் ஆண்டில் இருந்ததைவிட புவி வெப்பம் 2010ஆம் ஆண்டில் 0.17 டிகிரி செல்சியஸ் அதிகரித்திருப்பதாக பல்வேறு ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

பனிப்பாறைகள், பனித்தீவுகள் உருகுவதால் 2005ஆம் ஆண்டில் இருந்து சராசரியாக ஆண்டுக்கு 2.3 மில்லிமீற்றர் என்ற அளவில் கடல் மட்டம் உயர்வதாகவும் தெரிகிறது.

தொடர்ந்து கடல் மட்டம் உயரும் பட்சத்தில் கரீபியன் தீவுகள், மாலைதீவு, ஆசிய பசிபிக் தீவுக் கூட்டங்கள் உள்ளிட்ட தாழ்வான பகுதிகள் மூழ்கிப் போகும் அபாயம் இருக்கிறது.




பூமியில் மட்டுமின்றி ஆழ்கடல் பகுதியிலும் வெப்பநிலை இயல்பைவிட அதிகரித்தே காணப் படுகிறது. இது கடல்வாழ் உயிரினங்களுக்கு பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

எதிர்வரும் 2020ஆம் ஆண்டுக்குள் சுமார் 180 நாடுகளில் பருவநிலைகளில் மிகப்பெரும் மாற்றங்கள் இருக்கும். உலக நாடுகள் அனைத்தும் இணைந்து சுற்றுச்சூழலை பாதுகாக்க 100 சதவீத நடவடிக்கை எடுத்து 2100ஆம் ஆண்டில் புவி வெப்பத்தை 0.83 டிகிரியாக குறைத்தாலும்கூட, கடல் மட்டம் 14.2 செ.மீ. (ஏறக்குறைய அரை அடி) அளவுக்கும், 2300ஆம் ஆண்டில் 24.2 செ.மீ. அளவுக்கும் உயரும்.

மாறாக, சுற்றுச்சூழலை பாதுகாக்க ஒழுங்கற்ற நடவடிக்கை எடுத்தால், 2100ஆம் ஆண்டில் புவி வெப்பநிலை 3.91 டிகிரியாக இருக்கும். இதனால் கடல் மட்டம் 32.3 செ.மீ(ஒரு அடிக்கு மேல்) உயரும்.

2300ஆம் ஆண்டில் கடல் மட்டம் 139.3 செ.மீ(4.6 அடி) அதிகரிக்கும். பல தொலைவுக்கு ஊருக்குள் கடல் நீர் புகுந்து, பல நகரங்கள், கடலை ஒட்டிய சிறிய நாடுகள், தீவுகள் அழியும் எனத் தெரிவித்துள்ளனர்.

# நேட்டோ படைகளுக்கான விநியோகம் ஆரம்பம்



ஆப்கானிஸ்தானில் உள்ள நேட்டோ படைகளுக்கு, பாகிஸ்தான் வழியாக, அத்தியாவசிய பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகன போக்குவரத்து, நேற்று முன்தினம் மீண்டும் 'ஆரம்பமாகியுள்ளது. ஆப்கானிஸ்தானில், அமெரிக்கா தலைமையில், நேட்டோ படையினர் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களுக்குத் தேவையான எரி பொருட்கள், பாரிய பொதிகள் மூலம், பாகிஸ்தான் வழியாகக் கொண்டு செல்லப்பட்டுவந்தன.கடந்த ஆண்டு நவம்பர் மாதம், 26ஆம் திகதி, நேட்டோ படைகள், தவறுதலாக வான்வழித் தாக்குதல் நடத்தியதில், 24 பாகிஸ்தானிய வீரர்கள் கொல்லப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து, ஆப்கானிஸ்தானுக்கு பொருட்களைக் கொண்டு செல்லும் பாதையை பாகிஸ்தான் மூடி விட்டது. பாகிஸ்தான் வீரர்கள் கொல்லப்பட்ட விடயத்தில், அமெரிக்கா வருத்தம் தெரிவித்ததே தவிர, மன்னிப்புக் கேட்கவில்லை. இதனால், இந்த பாதையை திறக்க, பாகிஸ்தான் முன்வரவில்லை.இந்நிலையில், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டன், பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ரபானி கர்ரிடம், கடந்த 3ஆம் திகதி தொலைபேசி மூலம், 24 வீரர்கள் கொல்லப்பட்டதற்கு, மன்னிப்புக் கேட்டார். இது போன்ற சம்பவம், மீண்டும் நடக்காமல் பார்த்துக் கொள்வதாகவும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதைத் தொடர்ந்து, ஆப்கானிஸ்தான் செல்லும் பாதையை மீண்டும் திறக்க, பாகிஸ்தான் ஒப்புக் கொண்டது.நேட்டோ படைகளுக்காக, எரிபொருள் உள்ளிட்டவற்றை எடுத்துச் செல்லும் வாகன போக்குவரத்து, ஆரம்பமாகிய பலுசிஸ்தானில் உள்ள சமான் எல்லை வழியாக, லொறிகள் சென்றன. மலைப்பாங்கான கைபர் பகுதி வழியாகவும், ஆப்கானிஸ்தானுக்கு வழி உள்ளது. டோர்காம் எல்லை வழியாகவும், வாகனங்கள் செல்ல தயார் நிலையில் உள்ளன.

# வளவாளர்கள் நியமனத்தில் பாரபட்சமான அணுகுமுறை

ஆசிரிய கலாசாலைக்கு வளவாளர்களை தெரிவதில் பாரபட்சமான அணுகுமுறை இடம்பெற்றதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குற்றஞ்சாட்டியுள்ளது. மேலும் அவ்வறிக்கையில், வளவாளர்கள் மீண்டும் பாடசாலைக்கு அனுப்பிவைத்து, பின் உரிய முறைப்படி விண்ணப்பங்கள் கோரி தகுதியானவர்களை தெரிவுசெய்யுமாறு வலியுறுத்தியுள்ளது. தமிழர் ஆசிரியர் சங்கத்தால வெளியிட்ட அறிக்கையில் மேலும தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆசிரிய கலாசாலைகளில் வளவாளர்கள் பற்றாக்குறையை வடமாகாண கல்வி அமைச்சு கொடுத்து உதவுவதாக உறுதியளித்து, மத்திய கல்வி அமைச்சின் அங்கீகார வரண்முறைக்கு உட்பட்டு அதிபரால் தெரிவுசெய்யப்பட்டவர்களை வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் விடுவித்து வளவாளர்களின் பணி தொடர்ந்து நடைபெறுகையில், ஆசிரிய தொழிற்சங்கமொன்று உள்ளீர்க்கப்பட்ட வளவாளர்கள் தகுதியில்லாதவர்கள் என்றும், முறைப்படி எடுக்கப்படாதவர்கள் என்றும் ஆளுநரிடம் முறையிட்டது. ஆளுநர் அவர்களை மீளவும் பாடசாலைக்கு அனுப்பி முறையாக விண்ணப்பம் கோரி தெரிவுசெய்ய வேண்டுமென்று உத்தரவிட்டதாக அத் தொழிற் சங்கம் பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டது.

அதன்பின்னர் கடந்த 21.06. 2012 யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் குறித்த விடயம் தொடர்பில் விவாதிக்கப்பட்ட போது குற்றம் சாட்டிய தொழிற்சங்கமும், வடமாகாண கல்வி அபிவிருத்தி குழுவின் தலைவரும் அதிபரால் முறையற்ற விதத்தில் வளவாளர்கள் தெரிவு செய்யப்பட்டதாகவும் அவர்களை மீளவும் பாடசாலைக்கு அனுப்பி தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரி உரிய முறைப்படி நியமிக்க வேண்டுமென்று வலியுறுத்தினார்.

அதன் பின்னர் இணைக்கப்பட்ட ஆசிரிய வளவாளர்களில் நால்வர் தமது சங்க உறுப்பினர்கள் என்பதால் அவர்களை அப்படியே ஆசிரிய கலாசாலையில் கடமையாற்ற விட்டுவிடுவதாக இப்பொழுது அறிவிக்கப்பட்டுள்ளது.

முறையற்ற விதத்தில் அவர்களை உள்வாங்கியிருந்தால் அவர்களை மீளவும் பாடசாலைகளுக்கு அனுப்பி முறைப்படி விண்ணப்பம் கோரி தகுதியானவர்களை எடுக்கவேண்டும் என்று பக்கச்சார்பில்லாமல் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் அதனை வலியுறுத்தியது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாட்சியங்களில் தலையீடு வரலாம் சந்தேக நபர்களுக்கு தொடர்ந்து விளக்கமறியல்

(திருநெல்வேலி)

காரைநகரில் மனநலம் குன்றிய யுவதியை வன்புணர்வுக்கு உட்படுத்திய வழக்கில் சம்பந்தப்பட்ட இரண்டு சந்தேக நபர்களையும் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா நேற்று உத்தரவிட்டார்.

நேற்று இவ்வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது. சந்தேகநபர்கள் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி ஜோய் மகிழ்மகாதேவா பிணை மனுவைச் சமர்ப்பித்து சந்தேக நபர்களை பிணையில் விடுவிக்குமாறு நீதிமன்றில் சமர்ப்பணம் செய்தார். குற்றம் நிரூபிக்கப்படும் வரை சந்தேகநபர்கள் சுற்றவாளிகளே எனவும், விளக்க மறியலில் வைக்கப்படுவது ஒரு தண்டனையாக இருக்கக்கூடாது என்றும் அதனால் அவர்களைப் பிணையில் விடுவிக்குமாறு சமர்ப்பித்தார்.

இதனை பாதிக்கப்பட்ட யுவதியின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே.சுகாஸ் கடுமையாக ஆட்சேபித்தார். சந்தேக நபர்களால் புரியப்பட்ட குற்றம் பாரதூரமானதாகும். மக்கள் இச்சம்பவம் தொடர்பில் கொந்தளித்துக் கொண்டுள்ளார்கள். இவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டால் சாட்சிகளில் தலையீடு செய்யும் சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு. சமூகத்தில் அமைதியின்மை ஏற்படும். சகல இடங்களிலும் நம்பிக்கை இழந்து நீதித்துறையிலேயே மக்கள் நம்பிக்கை வைத்துள்ளார்கள் என சமர்ப்பணம் செய்து பிணை மனுவைக் கடுமையாக ஆட்சேபித்து வாதாடினார்.

இருதரப்பு சட்டத்தரணிகளிடையேயும் கடுமையான வாதங்கள் இடம்பெற்றன. விசாரணையை மேற்கொண்ட நீதவான் சந்தேக நபர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டு வழக்கை எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (137)

### யாழ். ரயில் நிலைய வன்புணர்வு

# முதலாவது சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டார்

யாழ்ப்பாணம் ரயில் நிலையத்திற்கு அண்மையில் பெண் ஒருவரை வன்புணர்வுக்கு உட்படுத்திய மூவரில் 'முதலாவது சந்தேகநபரைக் குறித்த பெண்மணி நேற்று அடையாளம் காட்டினார். யாழ். நீதிமன்றில் நேற்று அடையாள அணிவகுப்பு இடம்பெற்றது. முப்பத்தாறு வயதுடைய ஆஸ்பத்திரி வீதி, ஆரியகுளத்தைச் சேர்ந்த திருமணமான இப் பெண், குறித்த சந்தேக நபரான இளைஞரின் சேட்டைப் பிடித்து இவர்தான் எனக் கூறி அடையாளப்படுத்தினார்.

கடந்த மாதம் 22 ஆம் திகதி இரவு 9.30 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. 23 ஆம் திகதி யாழ். பொலிஸ் நிலையத்தில் இப்பெண் முறைப்பாடு செய்ததையடுத்து 24 ஆம் திகதி இளைஞர்களான இம் மூவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ். பதில் நீதவான் மு.திருநாவுக்கரசு முன்னிலையில் ஆஜர்ப் படுத்தப்பட்ட போது இவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

சந்தேகநபர்கள் மூவரும் குருநகர், கொட்டடி, மணிக்கூட்டு வீதி ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களாவர். நேற்று விசாரணையை மேற்கொண்ட யாழ். நீதவான் மா.கணேசராசா சந்தேக நபர்களைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டு வழக்கை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை ஒத்திவைத்தார். (137)

# மின்சார சபை ஊழியரின் பணிப்பகிஷ்கரிப்பில் அரசியல்

இலங்கை மின்சார சபை ஊழியர்கள் நேற்று பகல் 12 மணி தொடக்கம் ஆரம்பித்துள்ள பணிப்பகிஷ்கரிப்புக்கு தீர்வு வழங்க இலங்கை மின்சார சபையின் நிர்வாக அதிகாரிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மின்சார சபை ஊழியர்களுக்கு 25 சதவீத சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ள போதும் அவர்கள் 45 சதவீத சம்பள உயர்வை கோருவதாக அமைச்சர் தெரிவித்தார். ஏனைய நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் இலங்கை மின்சார சபை ஊழியர்கள் அதிக சம்பளம் பெறுவதாகவும் கீழ்மட்ட சேவையாளர் 24,000 ரூபா சம்பளம் பெறுவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால் முதலில் வைத்தியராக நியமனம் பெறும் ஒருவர் 29 ஆயிரம் ரூபாவையே சம்பளமாகப் பெறுவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். இலங்கை மின்சார சபை ஊழியர்களின் பணிப் பகிஷ்கரிப்புக்குப் பின்னால் சம்பளப் பிரச்சினை அன்றி அரசியல் நோக்கம் இருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

# கிழக்கு மாகாணசபை கலைப்பு மனுவை விசாரிக்க நீதிபதிகள் குழு

கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டமையை ஆட்சேபித்து முன்னாள் மாகாண சபை உறுப்பினர் இராசையா துரைரத்னம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவை விசாரிப்பதற்காக மூவரடங்கிய நீதிபதிகள் குழாமொன்று நேற்றைய தினம் நியமிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான சிசிர டி ஆப்ரூ, அனில் குணரத்ன மற்றும் ஏ.டப்ளியூ.ஏ.சலாம் ஆகிய நீதிபதிகள் இந்த குழாமில் இடம்பெற்றுள்ளனர். கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் இராசையா துரைரத்னம் தாக்கல் செய்திருந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் எஸ்.கந்தராஜா மற்றும் நீதிபதி தீப்பாலி விஜேசுந்தர ஆகியோர் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த மனு மூவரடங்கிய நீதிபதிகள் குழாமினால் விசாரிக்கப்பட வேண்டும் என மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் தீர்மானித்துள்ளார். இந்த மனு மீதான விசாரணை இம் மாதம் 20 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## இலங்கை...

வீரர்கள், தமிழக கட்சிகளின் அரசியல் அழுத்தங்கள் காரணமாக இலங்கைக்கு திரும்பவுள்ளதாக இந்திய ஊடகங்களில் வெளியான செய்திகளை இலங்கை வெளிவிவகார அமைச்சு மறுத்துள்ளது.

அதில் உண்மையில்லை. அவர்கள் முதற்கட்ட பயிற்சியை சென்னையில் பூர்த்தி செய்துள்ளனர். இரண்டாவது கட்டப் பயிற்சிக்காக அவர்கள் பெங்களூருக்கு பயணமாகவுள்ளனர். அரசியல் அழுத்தங்கள் குறித்த கேள்விக்கு இடமில்லை என வெளிவிவகார அமைச்சின் பொதுமக்கள் தொடர்பாடல் பணிப்பாளர் நாயகம் சரத் திஸாநாயக்க தெரிவித்தார்.

## உயிரிழந்த...

வற்புறுத்தினார்கள். ஆனால் நாங்கள் திட்டவட்டமாக மறுத்துவிட்டோம். என் மகனுடைய மரணத்துக்கு சிறைச்சாலை அதிகாரிகளே பொறுப்பு. இறந்தவரின் உடலை வவுனியாவுக்குக் கொண்டு சென்றால் அங்கு அமைதிக்குப் பங்கம் ஏற்படும் என்ற பொலிசாரின் வேண்டுகோளுக்கிணங்க மகர பிரதேசத்திற்கு வெளியில் இறுதிக்கிரியைகளுக்காக அந்த சடலத்தைக் கொண்டு செல்லக்கூடாது என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஒரே மகனுக்குத் திருமணம் செய்து பார்க்க வேண்டும் என்று விரும்பியிருந்தோம். அது இனி இல்லை. அவனது இறுதிக்கிரியைகளையாவது வீட்டில் வைத்துசெய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## வேலை...

அடையாள வேலைநிறுத்தத்தை நடாத்துவதற்கு நீதிமன்றம் தடைவிதித்தமை தொடர்பாக நேற்று மாலை யாழ். வைத்திய சங்கம் கூடி ஆராய்ந்தது. இதன் போது தாய்ச் சங்கத்துடன் கலந்துரையாடியும், சட்டத் தரணிகளின் ஆலோசனைக்கமைவாகவும் தடைச்சட்ட உத்தரவிற்கெதிராக மேன்முறையீடு செய்யப்படவுள்ளதாக யாழ். வைத்தியர் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

## மக்கள்...

கிளை முகாமையாளராகிய இவர் நேற்று முன்தினம் உடமையை முடித்துவிட்டு கிளையின் சாவியையும் ஒப்படைத்து விட்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பி வருகின்றார். சம்பவ நேரம் உடுவில் டச்சு வீதியில் பயணித்துக் கொண்டிருக்கையில் எதிரே வந்த வாகனம் ஒன்றிற்காக வழிவிடுவதற்கு முயன்றிருக்கின்றார். அந்நேரம் அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் எதிரே பாலம் ஒன்றின் நிர்மாணப் பணிக்காகத் தோட்டப்பட்டிருந்த குழி ஒன்றினுள் வீழ்ந்ததில் அவர் தூக்கி வீசப்பட்டுள்ளார்.

இதன் பின்னர் அயலில் நின்றவர்கள் அவரைத் தூக்கி வீதியோரத்திற்குக் கொண்டுசென்றதுடன் அவரை சங்கானை வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றதாகவும் தெரியவருகின்றது. எனினும் அங்கு அவரைப் பரிசோதித்த வைத்தியர்வர் இறந்திருப்பதனை உறுதி செய்ததாகவும் அவரது உறவினர் தெரிவித்தனர்.

இவ்விபத்தின்போது விபத்திற்குள்ளாகியவரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு காலதாமதமாகியமையும் இவ் உயிரழப்பற்குக் காரணம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இறந்தவரது கணுக்கால் பகுதியிலேயே காயம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

## தென்பகுதி...

அடுத்தே அமைச்சர் இவ்வறிவித்தலைப் பிறப்பித் துள்ளதாகத் தெரியவருகின்றது. அத்துடன் யாழ், முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களப் பணிப்பாளர்களுக்கும், அமைச்சர் தென்பகுதி மீனவர்கள் எவரையும் தொழில் செய்வதற்கு அனுமதிக்க வேண்டாம் என்றும் உத்தரவிட்டதாகவும் தெரியவருகின்றது.

தற்சமயம் கொக்கிளாய்க் கடற்பரப்பில் சுமார் 150 இற்கும் அதிகமான தென்னிலங்கை மீனவர்கள் அத்துமீறிய தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் றோலர் மீன்பிடி, தங்கூசி வலை மீன்பிடி, டைனமற் பயன்படுத்தி மீன்பிடிப்பதனை முழுமையாக வடக்கு, கிழக்குக் கடற்பரப்பில் முற்றுமுழுதாகத் தடை செய்துள்ளதாகவும் இதற்கு ஏற்ப மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டக் கடற்தொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர்கள் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அமைச்சர் உத்தரவிட்டிருக்கின்றார். இதன் மூலம் அழிந்துகொண்டிருக்கும் எமது கடல்வளத்தை (மீன்) பெருக்குக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொண்டடிருக்கிறார்.

இந்நிகழ்வில் ஐ.ஓ.எம். நிறுவனம் பாசிக் நிறுவனம் மற்றும் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் சுமார் 40 மில்லியன் ரூபாய்களுக்கு மேற்பட்ட கடற்றொழில் உபகணரங்கள் (போட், வலைகள்) வழங்கப்பட்டது. (பா)

## இரணைமடு...

அனுமதி மறுக்கப்பட்டு வருகின்றமையால் நன்னீர் தொழில் புரியும் ஐம்பது குடும்பங்களும் வறுமையில் துன்பப்படுவதாகவும் சில குடும்பங்கள் தங்களது பாடசாலை செல்லும் பிள்ளைகளை பாடசாலையிலிருந்து இடைநிறுத்தியதாகவும் குறிப்பிடுகின்றனர்.

காலம் காலமாக தாங்கள் தொழிலில் ஈடுபட்டுவந்த இரணைமடுக் குளத்திலும் தொழிலை மேற்கொள்வதற்கு தடைகள் போடுவது எவ்விதத்திலும் நியாயமற்றது எனவும் சுட்டிக்காட்டுகின்றனர். (29)

## 'உதயன்'...

பிறப்பித்ததோடு, உத்தரவை உடனடியாக யாழ். நீதவான் நீதிமன்ற பதிவாளருக்கு மின்னஞ்சல் செய்யுமாறும் பணித்தார். மேலும் உதயன் பத்திரிகை ஆசிரியர் பிரேம்நாத் மீது கைது உத்தரவோ மேலதிக நடவடிக்கைகளோ எடுக்கமுடியாது எனவும் யாழ். நீதவானுக்கு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இவ்வுத்தரவு குறித்து எதிர்ப்புகள் இருக்குமாயின் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் தெரிவிக்குமாறு யாழ். நீதவானுக்கு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஸ்ரீஸ்கந்தராசா உத்தரவிட்டார். இவ்வழக்கு மீதான விசாரணை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# இந்திய - இலங்கை கடற்படைகள் மீனவர் கைது குறித்து பேச்சு

(கொழும்பு)

தமிழ்நாட்டு மீனவர்கள் அண்மையில் இலங்கைக் கடற்டையினரால் கைது செய்யப்பட்டமை தொடர்புடைய விவகாரங்கள் குறித்து, இந்திய - இலங்கை கடற்படைகளுக்கு இடையில் விரைவில் நடக்கவுள்ள அனைத்துலக கடல்சார் எல்லைக்கோட்டு சந்திப்பில் விவாதிக்கப்படுமென இந்திய கடலோரக் காவல்படையின் கிழக்குப் பிராந்தியத் தளபதி சத்திய பிரகாஸ் சர்மா தெரிவித்துள்ளார்.

கடல்சார் பாதுகாப்புத் தொடர்பாக கடலோரக் காவல்படையின் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரிக்கான பிரதி ஆய்வாளர் நாயகம் பட்நாகர், புதுச்சேரி கடலோரக் காவல்படை நிலையத்தின் கட்டளை அதிகாரி மன்கோட்ரி ஆகியோரை சந்தித்து அவர் நேற்று முன்தினம் கலந்துரையாடினார்.

இதன் பின்னர் இந்து நாளிதழுக்கு கருத்து வெளியிட்ட சத்திய பிரகாஸ் சர்மா,

இலங்கை கடல்எல்லைக்குள் நுழைந்ததாக குற்றம்சாட்டி, இராமேஸ்வரத்தைச் சேர்ந்த சில மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இதுபற்றி விரைவில் இலங்கைக் கடற்படையுடன் நடத்தப்படவுள்ள கூட்டத்தில் விவாதிக்கப்படும். பாக்கு நீரிணையிலும், மன்னார் வளைகுடாவிலும் தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து தாக்கப்படும், கைது செய்யப்படும் சம்பவங்கள் தொடர்பாக இரு நாட்டு அரசாங்கங்களும் ஒரு தீர்வு காண்பதற்காக பல்வேறு மட்டங்களில் பேச்சுக்களை நடத்தியுள்ளன. இதற்கு அமைதியான தீர்வு ஒன்று கிடைக்கும்.

இந்திய மீனவர்கள் இந்திய கடல் எல்லைக்குள் தமது செயற்பாடுகளை அமைதியாக மேற்கொள்ள வேண்டும். நாம் அவர்களின் பாதுகாப்பில் கவனமாக இருப்போம் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

# மோட்டார் சைக்கிளை மோதிய தனியார் பேருந்தால் களேபரம்

(யாழ்ப்பாணம்)

வீதியில் நிறுத்தி வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிளை யாழிலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்ற 750 ஆம் இலக்க தனியார் பேருந்து ஒன்று நேற்று மாலை மோதியதில் ஏற்பட்ட களேபரத்தில் சிலர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

இருபாலைச் சந்திப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றை மாலை 4.00 மணியளவில் 30 - 7925 இலக்க தனியார் பஸ் ஒன்று மோதிய பின் நிறுத்தாமல் சென்றுள்ளது.

குறித்த பஸ்ஸை சில இளைஞர்கள் துரத்திச் சென்று இருபாலை தேவாலயப் பகுதியில் மடக்கிப் பிடித்தனர்.

தொடர்ந்து சாரதி, நடத்துனர் மீது தாக்க முற்பட்டனர். இதனால் ஏற்பட்ட களேபரத்தில் பயணம் செய்த சிறுமி ஒருவர் காயமடைந்தார். மேலும் சாரதி மற்றும் நடத்துனரும் சிறு காயங்களுக்குள்ளாகினர்.

இதேவேளை வாகனத்தை துரத்திச்சென்ற ஒருவரின் மோட்டார் சைக்கிள் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்தார்.

குறித்த சம்பவம் குறித்து பஸ் சாரதியும் நடத்துனரும் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். (18)

# வன்னி ஆசிரியர் இடமாற்றம் கல்விப் பணிப்பாளருடன் சந்திப்பு

வன்னிப் பகுதி ஆசிரியர்களுக்கான இடமாற்றம் தொடர்பில் வலயக்கல்வி பணிப்பாளருடனான சந்திப்பொன்று யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அடுத்தவாரம் மேற்கொள்ளப்படவுள்ளது.

வன்னியில் உள்ள பாடசாலைகளில் தமது சேவைக்காலத்தினை நிறைவு செய்துள்ள 104 ஆசிரியர்கள் இடமாற்றத்துக்கு தகுதியானவர்கள் என மாகாண கல்வி திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

அந்த வகையில் மேற்படி ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பாக யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் இலங்கை ஆசிரியர் சங்கம் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளது.

அந்த முறைப்பாட்டின் பிரகாரம் கடந்த 29 ஆம் திகதி கொழும்பில் சந்திப்பொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாகவே அடுத்த வாரத்தில் வலயக்கல்வி பணிப்பாளருடனான சந்திப்பொன்று இடம்பெறவுள்ளதாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

# சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் ஆளுங்கட்சிக்கு தொடர்புள்ளது

## ஐ.தே.க. குற்றச்சாட்டு



(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களுடன் ஆளும் கட்சியினருக்கு அதிகளவு தொடர்பு காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலத்தில் இடம்பெற்று வரும் பல சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களுடன் ஆளும் கட்சியினருக்கு தொடர்பு இருப்பதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.


நாட்டில் இடம்பெற்று வரும் இவ்வாறான குற்றச் செயல்களின் மூலம் அரசாங்கம் மற்றும் பொலிஸாரின் இயலாமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. குற்றவாளிகளை கைது செய்ய பொலிஸார் முனைப்புக் காட்டுவதில்லை.

குறிப்பாக அரசியல்வாதிகள் குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டிருந்தால் விசாரணைகள் பக்கச்சார்பற்ற முறையில் நடத்தப்படுவதில்லை.

குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை அரசாங்கம் வேட்பாளர் பட்டியலில் இணைத்துக் கொள்ளக்கூடாது.

பாலியல் குற்றவாளிகளும், ஏனைய குற்றவாளிகளும் மாகாண சபைகளில் ஆட்சி செய்யும் ஓர் பின்னணியில் நல்லாட்சி நிலவுவதாகக் குறிப்பிட முடியுமா என அவர் கேள்வி எழுப்பியுள்ளதுடன், குற்றச் செயல்களில் ஈடுபடும் அரசியல்வாதிகளுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுத்து ஏனையவர்களுக்கு முன்னுதாரணமாக திகழ வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# கைத்தொலைபேசியிலிருந்து 'மைய்ட்டா' பூச்சி கண்டுபிடிப்பு



(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசி ஒன்றிலிருந்து மைய்ட்டா எனப்படும் மிகச் சிறிய வகையான பூச்சி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பொரளை பரிசோதனை கூடத்திற்குச் சென்ற நபரொருவர் தனது மனைவி பயன்படுத்தும் கையடக்கத் தொலைபேசியில் ஒருவகை சிறிய பூச்சி காணப்படுவதாகவும் கடந்த சில நாட்களாக தனது மனைவி காது வலியால் அவதிப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் குறித்த கையடக்கத் தொலைபேசியை பரிசோதனைக்கு உட்படுத்தியபோது அதில் மைய்ட்டா எனப்படும் மிகச் சிறிய வகையான பூச்சி கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக பொரளை பரிசோதனை கூடத்தின் வைத்திய பணிப்பாளர் அனில் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த 6 மாத காலத்தில் 8 கையடக்கத் தொலைபேசிகளில் இவ்வகையான பூச்சியினம் கண்டு பிடிக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## சிறுவர்களுக்கு சிகரெட் சிக்கினர் வர்த்தகர்

யாழ்ப்பாண பிரதேசத்தில் 21 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு பீடி விற்பனை செய்தமை, தடைசெய்யப்பட்ட சிகரட் விற்பனை செய்த கடை உரிமையாளர்கள் 17 பேர் நேற்று யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மதுவரித் திணைக்களத்தின் உதவியுடன் கைதுசெய்யப்பட்டவர்கள் யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டபோது தங்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதன் பிரகாரம் தலா 4000 வீதம் 72 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# ஆங்கில ஆசிரியர் இல்லாத 691 பாடசாலைகள்

வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதும் உள்ள 691 பாடசாலைகளில் 11 ஆம் ஆண்டில் பயிலும் மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லையெனத் தெரியவருகிறது.

இவற்றில் 101 பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு எந்தத் தரத்திலும் ஆங்கிலப் பாடம் கற்பிக்கப்படுவதில்லை.

ஆங்கில ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவும் அதிகளவான பாடசாலைகள் மேல் மாகாணத்தில் உள்ளன.

இந்த மாகாணத்தில் 332 பாடசாலைகளிலும், சப்ரகமுவ மாகாணத்தில் 76 பாடசாலைகளிலும், வட மாகாணத்தில் 7[illegible] பாடசாலைகளிலும், ஊவா மாகாணத்தில் 67 பாடசாலைகளிலும், மத்திய மாகாணத்தில் 56 பாடசாலைகளிலும், வடமத்திய மாகாணத்தில் 51 பாடச்ாலைகளிலும், கிழக்கு மாகாணத்தில் 20 பாடசாலைகளிலும், வடமேல் மாகணத்தில் 16 பாடசாலைகளிலும் ஆங்கில ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது.

# வடக்கு தேர்தலை நடத்தி நாட்டைப் பிரிக்க முயற்சி

## தேசிய சுதந்திர முன்னணி தெரிவிப்பு

வடக்கு மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்று வலியுறுத்துபவர்கள் நாட்டை மீண்டும் பிரிப்பதற்கு முனைபவர்களே என்று தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான பியசிறி விஜேநாயக இவ்வாறு குறிப்பிட்டார்.

வடக்கு தேர்தலை இவ்வாறு விரைவாக நடத்த வேண்டிய அவசியமும் இல்லை என்று அவர் குறிப்பிட்டார்.

தற்போது ரணில் விக்ரமசிங்க வடக்கில் தேர்தலை நடத்த வேண்டும் என்று கோருகிறார்.

இவ்வாறு விரைவாக நடத்த வேண்டும் என்று வலியுறுத்துவதன் மூலம் மீண்டும் நாட்டில் பிரிவினை வாதத்தை தேற்றுவிப்பதாகும்.

வடக்கு மாகாண சபை தேர்தலின் ஊடாக மறைந்திருக்கும் பிரிவினைவாதிகளை ஒன்றிணைக்க முனைவார்களானால் அதனை ஒருபோதும் ஏற்க முடியாது.

இந்த அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளது. இந்த நிலையில் வீணே கையைச் சுட்டுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என நாடாளுமன்ற உறுப்பினருமான பியசிறி விஜேநாயக்க இவ்வாறு குறிப்பிட்டார்.

# நாடு திரும்பும் அகதிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

இலங்கைக்கு திரும்பும் அகதிகளின் எண்ணிக்கை இந்த வருடத்தின் யூன் மாத இறுதி வரையான காலப்பகுதியில் கடந்த ஆண்டு இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், குறைந்திருப்பதாக ஐ.நா. மன்ற அகதிகள் ஆணையம் (யு.என்.எச்.சி.ஆர்) தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு, இந்த ஆண்டு முதல் ஆறு மாதங்களில், இது வரை 662 அகதிகளே, தாமாக முன்வந்து திரும்பி வந்திருப்பதாக தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டு இதே காலத்தில், இது 962 ஆக இருந்தது எனத் தெரிவித்துள்ளது.

2011 ஆம் ஆண்டில் மொத்தம் 1728 அகதிகள் யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் உதவியுடன் நாடு திரும்பியதாகவும் அது தெரிவித்தது.

அகதிகள் திரும்புவது குறைந்திருப்பதற்கான காரணங்கள் என்னவென்று கூறுவது கடினம் எனத் தெரிவித்துள்ள அகதிகள் நிறுவன அதிகாரி மைக்கேல் ஸ்வாக், நாடு திரும்புவது என்பது ஒவ்வொருவரின் தனிப்பட்ட முடிவு என்றார்.

நாடு திரும்பும் அகதிகளில் பெரும்பாலான அகதிகள் இந்தியாவிலிருந்தே வருகின்றனர். சிலர் ஜோர்ஜியா, மலேசியா மற்றும் ஹொங்கொங் போன்ற இடங்களிலிருந்து வருகின்றனர். இவர்களில் பெரும்பகுதியினர், திருகோணமலை, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்குத் திரும்பிச் செல்கின்றனர். ஒரு சிறு பகுதியினர், கொழும்பு, மட்டக்களப்பு, கிளிநொச்சி , முல்லைத்தீவு, புத்தளம் மற்றும் கண்டி ஆகிய பகுதிகளுக்கும் திரும்புவதாக யு.என்.எச்.சி.ஆர். தெரிவித்துள்ளது.

2001 ஆம் ஆண்டு இறுதியில் கிடைக்கப்பெற்ற புள்ளி விபரங்களின்படி, இந்தியாவில் தமிழ் நாட்டில், 112 அகதிகள் முகாம்களில், 68,152 இலங்கை அகதிகள் வாழ்கின்றனர். அகதிகள் முகாம்களுக்கு வெளியே, தமிழ் நாட்டில், 32,467 அகதிகள் இருக்கின்றனர் என்றும், உலகெங்கிலும் சுமார் 1,36,000 இலங்கைத் தமிழ் அகதிகள் 65 நாடுகளில் வசிப்பதாகவும் இந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூலை 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.